கல்கி



KALKI ஜூன் 24, 1951 4 அணா




சென்னையில்: பிரபாத் - பாரகன் - லக்ஷ்மி

மற்றும் தமிழ் நாடெங்கும்

மழை காலம்

மோட்டார்
ஓட்டுவதின்
அபாயங்களை
அதிகரிக்கின்றது



அதிகமான பந்தோபஸ்திற்கு

Firestone

பயர்ஸ்டோன்

சூபர் பலூன்களை

உபயோகியுங்கள்



ரோடின்மீது பாவும் டயரின் விஸ்திரணம் அதிகமாக உள்ளதாலும், வழுக்குதல், சறுக்குதல் போன்ற தடைகளுக்கு நவீன சாஸ்திரீய முறையில் மாற்றுகள் அமைக்கப்பட்டுள்ளதாலும் பயர்ஸ்டோன் சூபர் பலூன்கள் மேற்கண்ட அபாயங்களிலின்றும் பரிபூரணமான பந்தோபஸ்தை உங்களுக்கு அளிக்கின்றன.

கும்-டிப்பிடு டயர் இது ஒன்றே

LAS (B)



உடல் வலிமையுள்ள குதூகலமான குழந்தைகளுக்கு

உங்கள் குழந்தைக்கு கிளாக்ஸோ கொடுப்பதால் அவனுக்கு பலமுள்ள கைகால்களும், ஒழுங்கான பற்களும், திடமான சதையும் வளர உதவுகிறீர்கள். மிகவும் சிறந்த பசும்பாலிலிருந்து தயாரித்த கிளாக்ஸோவில் விட்டமின் 'டீ', அயம் மற்றும் ஆரோக்கியத்திற்கும் உடல் வலிமைக்கும் தேவையான சத்துக்கள் எல்லாம் சேர்க்கப் பட்டிருக்கின்றன. தேக ஆரோக்கியத்துடன் வளருவதற்கான உணவை அளிப்பதுதான், ஒரு தாய் தன் மகவுக்குச் செய்யக் கூடிய பேருதவி.




Glaxo

கிளாக்ஸோ குழந்தைகளுக்கான பால் உணவு

கிளாக்ஸோ லேபரட்டரீஸ் (இந்தியா) லிட்., பம்பாய் • கல்கத்தா • மதராஸ்

L.A.S. (B)




பிரிட்டன் திருவிழா
1951
பிரிட்டனின் அழைப்பு!
இந்தத் திருவிழா ஆண்டில் பிரிட்டன், கலைகள், சிற்பக் கலை, விஞ்ஞானம், இயந்திரத் தொழில், அட்டம் மற்றும் தொழில்கள் நிர்மாணத்திலும் நாகரீகத்திற்கு தான் செய்த அரிய சாதனைகளையும் தான் எடுத்துக்கொண்ட பங்கையும் நேரில் காண உலக மக்களை வரவேற்கிறது.
சௌத் பாங்கில் நடக்கும் பிரிட்டன் திருவிழாவில் மிகச் சிறந்த பிரிட்டன் சைகிளுக்கு ஹெர்குலஸ் சைகிள்கள் பிரதிநிதித்வம் வகிக்க வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளன. "ஹெர்குலஸ் சைகிள்கள் உலகின் அறிய சக்கரங்கள்!"
Hercules
ஹெர்குலஸ்
இன்றைய சைகிள்களில் மிகச் சிறந்தது
தி ஹெர்குலஸ் சைகிள் & மோட்டார் கம். லிட்., பர்மிங்ஹாம், இங்கிலாந்து.


ஜேகர்-ல குல்ட்


"ரிவர்ஸோ" கடிகாரம் ஆட்டக்காரர்களுக்கு

JAEGER-LECOULTRE


"Reverso" A WATCH FOR SPORTSMEN







ஆட்டத்தின்போது கூட நல்ல பாதுகாப்பு உள்ளபடி திருப்பி மடக்கும் கேஸுடன் கூடிய "ரிவர்ஸோ" கடிகாரம் விளையாட்டுப் பிரிய ஆட்டக்காரர்களுக்கு மிகவும் ஏற்றது. கண்யமாக ஆடை அணியும் சமயம் "ரிவர்ஸோ" கோல்டு கேஸ் மாடல்கள் இணையிலா அழகுடன் கவர்ச்சிகரமாக சோபிக்கும். சொந்தக்காரரது கையெழுத்தோ அல்லது வில் முகப்போ கடிகாரத்தின் பளபளப்பான பின்புறத்தில் பொறித்தால் அழகுக்கு அழகூட்டுவது போலாகும்.



படத்தில் காட்டியதுபோல்:

2223	ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கேஸ்	ரூ. 280
2225	9 காரட் கோல்டு கேஸ் & பிரேம்	ரூ. 868
2226	9 காரட் கோல்டு கேஸ், ஸ்டீல்பிரேம்	ரூ. 572
2227	18 காரட் கோல்டு கேஸ் & பிரேம்	ரூ. 1380
2228	18 காரட் கோல்டு கேஸ், ஸ்டீல்பிரேம்	ரூ. 820

சிறிய நடு செகண்டு முள்ளுடன்:

2213	ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கேஸ்	ரூ. 260
2215	9 காரட் கோல்டு கேஸ் & பிரேம்	ரூ. 844
2216	9 காரட் கோல்டு கேஸ், ஸ்டீல்பிரேம்	ரூ. 548
2217	18 காரட் கோல்டு கேஸ் & பிரேம்	ரூ. 1356
2218	18 காரட் கோல்டு கேஸ், ஸ்டீல்பிரேம்	ரூ. 736

FAVRE-LEUBA

பேவ்ர்-லூபா & கம்பெனி லிட்., பம்பாய் - கல்கத்தா

LAS. (B)


உலகெங்கும், வெற்றிபெற்ற மனிதர்கள்

ஜில்லெட்

உபயோகிக்கிறார்கள்...



எந்த பொருளிலும் சிறந்ததையே வழக்கமாக உபயோகிக்கும் மனிதர்கள் ப்ளு ஜில்லெட் பிளேடுகளைத்தான் உபயோகிக்கிறார்கள். பணத்தால் இதைவிட சிறந்ததை வாங்கமுடியாது. நீடித்த காலம் உழைப்பதும், மிகவும் கூராக தீட்டப்பட்டதுமான ப்ளு ஜில்லெட் பிளேடுகள் உங்கள் தாடியை சுலபமாக நீக்கி விடுகின்றன. ஆயினும் அதன் விலையும் சரசமாயிருக்கிறது. அதனால் ஒவ்வொரு மனிதனும் ஒரு தனவந்தனைப் போலவே க்ஷவரம் செய்துகொள்ளலாம்



ப்ளு ஜில்லெட் பிளேடுகள்

5 பிளேடுகளுக்கு 14 அணா

பதினேழாவது அகில இந்திய காதி & சுதேசி கைத்தொழில்

பொருட்காட்சி

(சேலம் நகர சபையினரால் நடத்தப்படுவது)


5—8—51 முதல் 26—8—51 வரை

●

1. பொருட்காட்சி நகரின் மத்தியிலுள்ள விஸ்தாரமான போஸ் மைதானத்தில் நடைபெறும். ஆண்டுதோறும் நடைபெறும் மாரியம்மன் திருவிழாவின்போது பொருட்காட்சி நடைபெறுவதால் சுற்றியுள்ள தாலுக்காக்களிலிருந்து ஏராளமான ஜனத்திரள் கூடுகிறது.
2. பஸ் ஸ்டாண்டு, போஸ்ட் ஆபீஸ், பாங்குகள், சினிமா தியேட்டர்கள், ஹோட்டல்கள் முதலியன அருகிலேயே இருக்கின்றன.
3. சங்கீதக் கச்சேரிகளும், மற்றும் மனதைக் கவரும் அநேகவித வேடிக்கை விநோதங்களும் ஏற்பாடு செய்யப்படும். விபரங்களுக்குக் காரியதரிசிக்கு உடனே எழுதவும்.

கமிஷனர் & காரியதரிசி
எக்ஸிபிஷன் கமிட்டி, சேலம்

B. I. S. N. கம்பெனி, லிமிடெட்



S. S. "ரஜூலா" - பினாங்கு, சிங்கப்பூருக்கு

சென்னை புறப்படும் தேதி - 1951 ஜூலை 2உ.
நாகப்பட்டினம் புறப்படும் தேதி - 1951 ஜூலை 3உ.

முதல் வகுப்பு, பெர்த் இல்லாத இடவசதியும் உண்டு

பினாங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூருக்கு கார்கோ சாமான்களை நேரடியாக ஏற்றிச் செல்லவும், பாங்காக், ஹாங்காங், ஜப்பான் மற்றும் தூரக் கிழக்கு திசையிலுள்ள இதர ஊர்களுக்கு சிங்கப்பூரில் கப்பல் மாற்றி அனுப்பும்படியும் ஏற்றுக் கொள்ளப்படும்.

இதர விவரங்களுக்கு தயவு செய்து விண்ணப்பிக்கவும்:

பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட் 7, அரமனைக்காரத் தெரு, மதராஸ்	மதுரா கம்பெனி லிமிடெட் முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்





மதராஸ் ஆபீஸ்:

5-149, பிராட்வே
ஜி. டி., மதராஸ்

பொருள் அடக்கம்


கல்கி

மலர் 10 இதழ் 47	1951 ஜூன் 24	கர ஆனி 10உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


அட்டைப்பட விளக்கம்

மலை நாட்டிலுள்ள நெடுவேள் குன்றில் வேங்கை மரத்தின் கீழில் கண்ணகி தலைவிரி கோலமாக நின்றாள். கோவலனைப் பறி கொடுத்துவிட்டு மதுரை நகரைச் சபித்து அழித்துவிட்டு, அத்திருமாபத்தினி அங்கு வந்து கண்ணீர் மல்கி நின்றாள். அப்போது வானுலகிலிருந்து சில விமானங்கள் இறங்கி வந்ததைக் கண்டு வியந்தாள். இந்திரனும் மற்றத் தேவர்களும் வந்து இறங்கி மற்றொரு வான ரதத்தில் வீற்றிருந்த கோவலனைக் கண்ணகிக்குக் காட்டினார்கள். "அம்மையே! கோவலன் தேவனாயினான்; நீயும் தெய்வமானாய்! வருக! வானுலகத்துக்கு வருக!" என்று அழைத்தார்கள். காதற் கொழுநனைக் கண்டு களிகூர்ந்த கண்ணகி வான விமானத்தில் ஏறி விண்ணுலகத்துக்குச் சென்றாள். இந்தக் காட்சியைக் குன்றக் குறவர்கள் கண்டு வியந்து மகிழ்ந்தார்கள். குணவாயில் கோட்டத்தில் அரசு துறந்து அமர்ந்திருந்த இளங்கோவடிகளிடம் சென்று தாங்கள் கண்ட அதிசயத்தை நவின்றார்கள். இளங்கோவடிகள் கண்ணகி—கோவலன் வரலாற்றைச் சாத்தனாரிடம் முழுதும் தெரிந்து கொண்டு, '**நெஞ்சை அள்ளும் சிலப்பதிகார மென்றோர் மணி ஆரத்தை**' இயற்றித் தமிழ்த் தாய்க்குச் சூட்டினார்.



கண்ணகியும் கோவலனும் பிறந்து வளர்ந்தது முதலிய சம்பவங்கள் 'பூம்புகார்' என்னும் காவேரிப் பட்டினத்தில் நிகழ்ந்தன. சோழ வள நாட்டின் தலைநகரமாகவும் துறைமுகப் பட்டினமாகவும் அந்நாளில் பூம்புகார் சிறந்து விளங்கியது. அப்பழைய தலைநகரைக் கடலும் காலமும் கொள்ளை கொண்டன. ஆனால் இன்றைக்கும் காவேரி கடலில் கலக்கும் இடத்தில் காவேரிப்பட்டினம் என்னும் பெயர் தாங்கிய சிறிய கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்தில் சென்ற வாரத்தில் சிலப்பதிகார மகாநாடு மூன்று தினங்கள் கோலாகல வைபவங்களுடன் பெரு விழாவாக நடைபெற்றது. சிலப்பதிகார காவியத்தில் ஊறித் திளைத்த திரு ஆர். கே. சண்முகம் செட்டியாரின் தலைமையில் பல தமிழறிஞர்கள் சொல்மாரி பொழிந்தார்கள்.

"பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்" என்று அங்கு எழுந்த வாழ்த்தொலி தமிழ்நாடு முழுவதிலும் எதிரொலி செய்தது. காவேரிப்பட்டினத்திலும் அருகிலுள்ள கிராமங்களிலும் வசிக்கும் மிராசுதார்களும் தமிழன்பர்களும் பெரும் பிரயத்தனம் செய்து இம் மகாநாட்டை இனிது நடத்தினார்கள். அவர்களை நாம் மனமார வாழ்த்தி மகிழ்கிறோம்.



ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரியாரின் தௌஹித்ரனும், ஸ்ரீ ஏ. கே. ராமச்சந்திரய்யரின் பௌத்திரனும் சென்னை பாரி கம்பெனியின் உதவி மானேஜர் ஸ்ரீ ரங்கசாமியின் புத்திரனுமான சிரஞ்சீவி வெங்கடராமனுக்கு சென்ற 14-ந்தேதி மயிலாப்பூர் 'ஸ்ரீனிவாஸ்' பங்களாவில் உபநயன முகூர்த்தம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. சென்னை மந்திரிகளும் ஏராளமான பிரமுகர்களும் விஜயம் செய்து சிறுவனை ஆசீர்வதித்தனர். அன்று மாலையில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் இன்னிசை விருந்து நடைபெற்றது.

விளம்பரம்

சர்க்கார் கீழ்நாட்டுக் கலை கையெழுத்துப் பிரதி நூல் நிலையம்
(Govt. Oriental Manuscripts Library)

திருவல்லிக்கேணி : சென்னை-5

○●○

இந்நூல் நிலைய அதிகாரி (Curator) அவர்கள் மேற்படி நூல் நிலையத்திற்குப் பலதிறப்பட்ட மொழிகளிலுள்ள ஓலைச் சுவடிகள் போன்ற பழைய கையெழுத்துப் பிரதிகளைச் சேகரிக்கவும், அவற்றைப் பாதுகாக்கவும் வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனது பற்றி :—

(1) அத்தகைய பிரதிகளைத் தங்கள் வசமே வைத்திருப்பவர்கள், அவற்றை மேற்படி நூல் நிலையத்திற்கு வெகுமதியாகவோ, விலைக்கோ, நகல் எடுத்துக் கொள்ளவோ கொடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(2) அல்லாத பொது ஜனங்கள், அவற்றை வைத்திருக்கும் நபர்களைப் பற்றிய தகவல்களை அறிவிக்கும்படி கோரப்படுகிறார்கள்.

(3) கையெழுத்துப் பிரதிகளைப் பெறுவதற்கு உதவி செய்பவர்கள் உசிதப்படி சன்மானமளிக்கப் படுகிறார்கள்.

(4) சகலவிதமான கடிதப்போக்குவரத்துக்களும் மேற்படி நூல் நிலைய அதிகாரிகளுடனே யே செய்யப்பட வேண்டும்.

கல்கி

மலர் 10 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 47

இதோ ஒரு அவதாரம்!

ஸ்ரீ கிருஷ்ண பகவாத்மா 'பரமாத்ம கீதை'யில் என்ன சொல்லி யிருக்கிறார்? (அவதார மகிமையை எண்ணியதில் கை குளறி விட்டது: திருத்திப் படிக்கவும்.) "ஸம்பவாமி யுகே யுகே" என்று சொல்லி யிருக்கிறார். அதாவது "தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும் காலத்தில் அதர்மத்தைப் போக்கித் தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காக நான் அவதரிக்கிறேன்" என்றுதான் சொல்லி யிருக்கிறார். அப்படிப்பட்ட அவதாரம் ஒன்றை இதோ காண்கிறோம்! பாட்னா நகரில் அந்த அவதாரம் தோன்றி யிருக்கிறது! இது உண்மையான அவதாரமோ இல்லையோ என்று யாரும் சந்தேகப்படாதபடி "இதோ நான் அவதரித்திருக்கிறேன்! எல்லாரும் பார்த்துக் கொள்வீர்களாக!" என்றும் ஆசாரிய கிருபளானி பறையறைந்து தெரிவித்திருக்கிறார். கண்ணனைப்போல் ஸ்ரீ கிருபளானியும் விசுவரூபம் எடுத்து, "காந்திஜியும் நானே! காந்திஜியின் சீடனும் நானே! காங்கிரஸும் நானே! காங்கிரஸ் இலட்சியமும் நானே! மக்களும் நானே! மக்கள் தலைவனும் நானே! கிருபளானியும் நானே! ஸுசேதா மணாளனும் நானே!" என்று திருவாய் மலர்ந்திருக்கிறார்.

காந்தி மகான் ஜீவியவந்தராக இந்த மண்ணுலகில் வாழ்ந்திருந்த காலத்தில் ஆசாரிய கிருபளானி ஒரு சமயம் ராட்சதபதியாக இருந்தார்; இல்லை, 'ராஷ்டிரபதி'யாக இருந்தார். அதாவது காங்கிரஸ் அக்கிராசனராக இருந்தார். நேரு - படேல் ஆகியோர் தம்மை எல்லா விஷயங்களிலும் கலந்து கொண்டு காரியம் செய்வதில்லை என்று அவருக்குக் கோபம் உண்டாயிற்று. "இந்த நேரு - படேல் ராட்சதர்களுக்கு இனிமேல் பதியாக இருப்பதில்லை; ஸுசேதாவுக்கு மட்டும் பதியாக இருந்தால் போதும்" என்று தீர்மானித்தார். உடனே காந்தி மகானிடம் சென்று, "ராட்சதபதி பதவியை நான் ராஜினாமா செய்து விடப் போகிறேன்" என்று சொன்னார். "ததாஸ்து!" என்றார் மகாத்மா. பிறகு, பாபு ராஜேந்திர பிரஸாத் தலைவர் ஆனார். ராஜேந்திர பிரஸாத் அமைத்த காரியக் கமிட்டியில் அங்கத்தினரா யிருக்கும்படி ஸுசேதா கிருபளானிக்கு மகாத்மா கூறினார். "என் கணவரை இருக்கச் சொல்வது தானே?" என்றார் ஸ்ரீமதி ஸுசேதா. "அவரை வேறு வேலைக்கு வைத்திருக்கிறேன்" என்றார் மகாத்மா. அந்த 'வேறு வேலை' இன்னதென்று சொல்லாமலே காந்தி மகான் இம் மண்ணுலகை விட்டுச் சென்று விட்டார்!

பிறகு சமீபத்தில் கிருபளானியின் கனவிலே வந்து சொன்னாரோ, அல்லது ஸுசேதாவின் நினைவிலே வந்து சொன்னாரோ, அல்லது திவ்யச் சாகிப்பின் தபால் - தந்தி இலாக்காவைத்தான் வானுலகிலிருந்து உபயோகித்துக் கொண்டாரோ, தெரியாது. "அசுத்தமாய்ப் போன காங்கிரஸை விட்டு வெளியேறித் தனியாக ஒரு கட்சி அமைத்து இந்தியா தேசத்தைக் காப்பாற்றுக!" என்று கிருபளானிக்கு ஆத்மார்த்தமான அந்தரங்கச் செய்தியை எப்படியோ மகாத்மா காந்தி அனுப்பி விட்டார்.

இதை ஆசாரிய கிருபளானி பாட்னாவில் கூடிய மாபெரும் கூட்டத்தில் பகிரங்கப் படுத்தினார். "மகாத்மாவின் தீர்க்க தரிசனம் இப்போது உண்மையாகிவிட்டது! நான் இதோ அவதாரம் எடுத்து விட்டேன்!" என்றார்.

இராமர் அவதாரம் எடுப்பதற்கு முன்னாலேயே அவருக்கு உதவி செய்வதற்காக முப்பத்து முக்கோடி தேவர்களும் கிஷ்கிந்தைக்குச் சென்று வானரர்களாக அவதரித்திருந்தார்களாம். கிருஷ்ணன் அவதாரம் எடுப்பதற்கு முன்னால் தேவர்கள் கோகுலத்துக்குச் சென்று ஆயர் குலத்தில் அவதரித்தார்களாம். அது போலவே கிருபளானி அவதாரத்தை வரவேற்பதற்கென்றே காங்கிரஸை விட்டு வெளியேறிய மாஜி காங்கிரஸ் வாதிகள் பலர் பாட்னாவில் வந்து கூடினார்கள். "அவதாரமே! வருக! வருக! காங்கிரஸ் ராட்சதர்களைத் துவம்ஸம் செய்து இந்தப் பூமண்டலத்தைக் காப்பாற்றித் தர்ம சம்ரட்சணம் செய்வீராக!" என்று போற்றி கூறினார்கள்.

இப்படியாகச் சுபயோக சுபகரண ஏவங்குண விசேஷண முகூர்த்தத்தில் கிஸான் - மஸ்தூர் - பிரஜா கட்சி பாட்னா புண்ணிய க்ஷேத்திரத்தில் ஸ்தாபிதமாயிற்று.

கட்சியின் பெயரே கொஞ்சம் ராட்சதத் தன்மை வாய்ந்ததாகத் தொனிக்கிறது. **கிஸான் - மஸ்தூர் - பிரஜா கட்சி!** அப்பப்பா! எத்தனை நீளம்! எத்தனை உயரம்! எத்தனை ஹுங்காரம்! எவ்வளவு அகங்காரம்! பெயரைக் கேட்டாலே எல்லாரும் நடுநடுங்கும்படியாக அல்லவோ அமைந்து விட்டது!! கேட்டாலே நடுங்கவேண்டும் என்றால், வாயால் சொல்லுவதற்குள் திணறித் திண்டாடித் திக்குமுக்காட வேண்டியதுதான்!

* * *

புதிய தலைவரும் அவருக்காகப் புதிய கட்சியும் பாட்னாவில் உதயமான சந்தர்ப்பத்தில் பலரும் சொற்பொழிவு ஆற்றியிருக்கிறார்கள். அசுரர்களைப்பற்றித் தேவர்கள் புகார் சொன்ன தோரணையிலேயே இவர்களும் காங்கிரஸைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். இந்தப் பேச்சுக்கள் அவ்வளவாக நமக்குப் புரியவில்லை; உண்மைக்குப் பொருத்தமாகவும் தோன்றவில்லை. முப்பது வருஷமாகக் காங்கிரஸ் அளவில்லாத தியாகங்களைச் செய்து ஆத்ம சக்தி பெற்ற ஸ்தாபனம்; காந்தி மகான் தலைமை வகித்து நடத்திய ஸ்தாபனம். நேற்று வரையில் இவர்கள் காங்கிரஸில் இருந்து சேவை செய்தவர்கள். இன்றைக்கும் இவர்களுடன் முப்பது வருஷம் சகாக்களாயிருந்தவர்களே காங்கிரஸை நடத்துகிறார்கள். இவர்கள் பயபக்தியுடன் போற்றிய தலைவர்கள் நடத்துகிறார்கள். அத்தகைய காங்கிரஸ் மகாசபை திடீரென்று அவ்வளவு படுமோசமாக எப்படிப் போய்விட முடியும்! முப்பது வருஷத்தில் சேர்த்த தபோ வலிமையும் ஆத்ம சக்தியும் நிர்மாணத் தொண்டும் ஒரு நொடியில் இல்லாமற் போய்விடுமா! காங்கிரஸின் நிலைமையே அப்படியாகி விட்டதென்றால்; இந்த மாஜி காங்கிரஸ் வாதிகள் ஆரம்பித்திருக்கும் ஸ்தாபனம் மட்டும் பிரமாதமாகச் சாதித்து விடும் என்று எப்படி நம்புவது! அதைக் காட்டிலும், காங்கிரஸை ஆதி முதல் எதிர்த்து வந்த அரசியல் ஸ்தாபனங்களுக்கே ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப் பார்க்கலாம் என்று மக்களுக்குத் தோன்றக்கூடும் அல்லவா!


சுதந்திர சர்க்காரின் நிர்வாகத்தைப் பற்றிப் பாட்னாவில் கூடியவர்கள் படுமோசமாகக் கண்டனம் செய்தார்கள். நல்லது எதுவுமே சொல்லவில்லை. குற்றங் குறைகள் இருப்பதை எல்லாருமே ஒப்புக் கொள்வார்கள். ஆனால் குற்றங் குறைகளைத் தவிர நல்ல அம்சம் எதுவுமே இல்லை யென்று சொல்வது, பட்டப் பகலில் கண்ணை இறுக மூடிக்கொண்டு, "சூரியன் ஒரே இருட்டாயிருக்கிறது!" என்று சொல்வதைப் போலத்தான்.

நாலு வருஷத்துக்கு முன்பு வரையில் அடிமை நாடாயிருந்த பாரத தேசம் இன்று அகில உலக தேசங்களுக்கு மத்தியில் மகோந்நதமான அந்தஸ்தை வகித்து வருகிறது.

அமெரிக்கா, ருஷ்யா, சைனா, பிரிட்டன், பிரான்ஸ் முதலிய நாடுகளுடன் ஒப்பிடும் போது நம்முடைய படைபலம் மிகக் குறைவு என்பதில் இரகசியம் ஒன்றும் இல்லை. ஆயினும் இன்று மேற்கூறிய நாடுகள் எல்லாம் பாரத நாட்டின் சிநேகத்தைப் போட்டி போட்டுக் கொண்டு வரவேற்பது ஏன்? அதற்கு அறிகுறியாக, நாலு திசைகளிலிருந்தும் பற்பல நாடுகளிலிருந்தும் இந்தியாவை நோக்கிக் கோதுமைக் கப்பல்கள் வந்து கொண்டிருப்பதேன்? இவையெல்லாம், நேருஜியின் தலைமையில் இந்திய சர்க்காரின் அன்னிய நாட்டுக் கொள்கை எவ்வளவு மகத்தான வெற்றி அடைந்திருக்கிறது, நமது தேசத்தின் அந்தஸ்து உலகில் எவ்வளவு தூரம் உயர்ந்திருக்கிறது என்பதைக் காட்டவில்லையா!

நம் தலைவர்கள் இந்திய அரசாங்கத்தை ஏற்றுக் கொண்டதிலிருந்து இந்தியாவில் உணவு நெருக்கடி ஏற்படப் பல காரணங்கள் தோன்றின. பிரிட்டிஷார் தங்கள் 150 வருஷ ஆட்சியில் இந்திய மக்களின் விவசாயத்தைக் குட்டிச் சுவராக்கி, உணவுக்கு அயல் நாடுகளை எதிர்பார்க்கும்படி செய்து விட்டார்கள். இதனால் ஏற்பட்ட விபரீதத்தை பிரிட்டிஷ் ஆட்சி நடந்த காலிலேயே வங்காளத்தில் பார்த்தோம். அறுபது லட்சம் மக்கள் பஞ்சத்தில் மடிந்ததையும் பார்த்தோம். அதைவிட மோசமான நிலைமை பிந்தைய நாலு வருஷங்களில் குடிகொண்டிருந்தும், நம் சுதந்திர சர்க்கார் பஞ்சத்தினால் மக்கள்மடியாமல் காப்பாற்றியிருக்கிறார்கள். உணவுக் கொள்கை பற்றியும் பங்கீடு, கட்டுப்பாடு சம்பந்தமாகவும் நமக்குப் பல குறைகள் இருந்தாலும், பொது நோக்காகப் பார்க்கும் போது நாட்டைப் பஞ்சத்திலிருந்து நம் சுதந்திர சர்க்கார் காப்பாற்றியிருக்கிறார்கள் என்பதை மறுக்கவும் முடியாது; மறக்கவும் முடியாது.

இப்படி எத்தனையோ நலங்களும் அநுகூலங்களும் நாட்டுக்குச் சென்ற நாலு வருஷத்தில் ஏற்பட்டுத் தானிருக்கின்றன. அவை பல துளியாகச் சிதறிக் கிடப்பதால் கண் முன் புலப்படுவதில்லை. நன்மைகளை அதிகமாக நாம் கவனிப்பதில்லை. இன்றும் பல ஆக்க வேலைத் திட்டங்கள் ஆரம்பித்து நடைபெறுகின்றன; அவற்றின் பலனை உடனே எப்படிப் பார்க்க முடியும்? அடுத்த ஐந்து வருஷத்தில் பார்க்கலாம். ஆகையால், பாட்னாவில் கூடிய மாஜி காங்கிரஸ்வாதிகள் பழைய பிரிட்டிஷ் ஆட்சி


வயோதிகம் என்பது இரண்டாம் குழந்தைப் பருவம் அடைவது என்று சொல்வார்களல்லவா?...
கனவா?
"குரங்குத் தொல்லையைத் தீர்ப்பதற்கு வழி வகைகள் ஆலோசிக்கப் பட்டது!" – செய்தி..... ஏன், அவற்றுக்கும் ஓட்டுரிமை அளித்தால், அவை ஒரு புதுக் கட்சியை
வானரக் கட்சியில் இன்றே சேருங்கள்!
நாங்கள் ராமராஜ்யத்தை ஸ்தாபிப்போம்!

யைத் தாக்கியது போல நேரு சர்க்காரின் ஆட்சியையும் தாக்கியது பெரும் அநீதி என்பதில் சந்தேகமில்லை. நேரு போன்ற தலைவர்களால் முடியாத காரியத்தைக் கிருபளானி கோஷ்டியார் சாதித்து விடுவார்கள் என்று நாம் ஒரு நாளும் நம்ப முடியாது.

*　　　*　　　*

பாட்னாவில் காங்கிரஸையும் காங்கிரஸ் ஆட்சியையும் தாக்கிப் பேசியவர்கள் கூறியவற்றில் ஒன்று உண்மை என்பதில் ஐயமில்லை. அது இந்திய அதிகார வர்க்கத்தார் இன்னும் பழைய போக்கிலேயே போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான். அதுமட்டுமல்ல; சில அம்சங்களில் முன்னைவிட மோசமாகியும் இருக்கிறார்கள். சுதந்திர சர்க்காரின் கீழ் ஜனநாயக ஆட்சியில் பொதுஜன ஊழியர்கள் தாங்கள் என்பதை அவர்கள் உணரவில்லை. பொது ஜனங்களின் எஜமானர்களாகப் பலர் தங்களை எண்ணிக் கொள்கிறார்கள். பொது ஜனங்களைப் பிடுங்கித் தின்னத் தங்களுக்கு உரிமை இருப்பதாக எண்ணி நடந்து கொள்கிறார்கள்.

பலாத்காரப் புரட்சியின் மூலம் இந்தியா சுதந்திரம் அடைந்திருந்தால், அதிகார வர்க்கம் அடியோடு மாறி வேறு அதிகாரிகள் வந்திருப்பார்கள். ஆனால் சாத்வீக வழியில் நாம் சுதந்திரம் அடைந்தபடியால் பழைய அதிகார வர்க்கத்தைப் பிரிட்டிஷார் அப்படியே விட்டு விட்டுப் போய் விட்டார்கள். இதில் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு. நாட்டில் கலகம் — குழப்பம் — படுகொலை— துன்பம்— பொருட் சேதம் முதலியவை பெரிய அளவில் நடைபெறவில்லை. பொதுவாக அமைதி நிலவி வருகிறது. இது நன்மை. அதிகாரிகள் மக்களின் எஜமானர்களாகத் தங்களை நினைத்துக் கொண்டு நடப்பது தீமை. நன்மையை நிலை நிறுத்திக் கொண்டு தீமையைப் போக்க வேண்டும். இந்த விஷயத்தில் நம் சர்க்காரை நடத்தும் பெருந் தலைவர்கள் இன்னும் போதிய கவனம் செலுத்தவில்லை. கவனம் செலுத்த அவர்களுக்கு அவகாசமும் போதவில்லை.

தலைவர்களுக்கு அவகாசம் கிடைக்கும்போது அவசியமான சீர்திருத்தம் ஏற்படும் என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

*　　　*　　　*

பாட்னாவில் தோன்றி யிருக்கும் புதிய கட்சி காங்கிரஸுடன் போட்டியிட்டு ஜயிக்க முடியாது. காங்கிரஸைக் காட்டிலும் அதிகமான நன்மைகளை நாட்டுக்குச் சாதித்துவிடவும் அக் கட்சியினால் முடியாது. அதற்கு வேண்டிய தகுதியும் திறமையும் யோக்கியதையும் உள்ள தலைவர்கள் அக் கட்சியில் இல்லை.

ஆனால் பிரஜா கட்சியின் உதயத்தினால் நன்மையே கிடையாது என்றும் சொல்ல முடியாது. காங்கிரஸ் வாதிகள் சில சமயம் ஸ்தாபனப் போட்டிகளில் ஈடுபட்டுக் காங்கிரஸ் இலட்சியங்களை மறந்து விடுகிறார்கள். அதிகாரத்தைக் கைப்பற்றுவதையே இலட்சியமாகவும் கொண்டு விடுகிறார்கள். பொது மக்களின் விருப்பத்தைச் சில சமயம் புறக்கணிக்கவும் தலைப்படுகிறார்கள். இதற்கெல்லாம் பிரஜா கட்சித் தலைவர்களின் பிரசாரம் ஒரு மாற்று மருந்தாக உபயோகப்படலாம். காங்கிரஸ் வாதிகளுக்கு அவர்களுடைய கடமையை அடிக்கடி ஞாபகப்படுத்தவும் மக்கள் நலத்தில் ஈடுபடும்படி தூண்டவும் புதிய பிரஜா கட்சி ஓரளவு பயன்படக் கூடும்.

கட்டுக்கதையே! வெட்கப்படு!

கீழ்க்கண்ட அதிசயமான விவரத்தைப் படித்து விட்டு அபூர்வமான கட்டுக் கதைகள் தலையைத் தொங்கப் போட்டுக் கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. அவமானம் பொறுக்காமல் விஷத்தைக் குடித்தோ தூக்குப் போட்டுக் கொண்டோ பிராணனை விடப் பார்த்தாலும் அதில் அதிசயமிராதுதான்! கட்டுக் கதைகளைத்தான் சொல்கிறோம்; சர்க்கார் இலாகாக்கள்தான் உயிரற்ற ஜடப்பொருள்கள் ஆயிற்றே! அவை வெட்கப்படுவது ஏது! உயிரை விடப் பார்ப்பது ஏது!

பின்வரும் விவரத்தை ஒரு மானிய நிருபர் நமக்கு எழுதியிருக்கிறார். இது உண்மை நிகழ்ச்சி யென்று நம்புவதற்கு நமக்குக் கஷ்டமாகத்தா னிருக்கிறது. விவரம் வருமாறு:—

“விவசாய இலாக்காவின் ஒரு டிமான்ஸ்ட்ரேட்டர் இண்டர் படித்து விட்டு, மூன்று வருஷம் விவசாய காலேஜிலும் படித்துத் தேறி விட்டு உத்தியோகத்துக்கு வந்தார். உத்தியோகம் இன்னும் காயமாகவில்லை. அதாவது 9 A என்ற பிரிவில் சர்வீஸில் இருக்கிறார். அவர் உப்பூர் என்னும் இடத்திலிருந்து சார்ஜ் எடுக்கப் போனார். போன இடத்தில் பாலூர் என்ற இடத்துக்கு மாற்றலாகி உத்தரவு காத்திருந்தது. பாலூருக்குப் போனார். தேவகோட்டைக்குப் போகும்படி உத்தரவு வந்தது. தேவகோட்டைக்குப் போனதும் ஸ்ரீ வில்லிபுத்தூர் போகத் தந்தி உத்தரவு. ஸ்ரீ வில்லிபுத்தூர் போனார். திருநெல்வேலி போக உத்தரவு. திருநெல்வேலி போனார். திருச்செந்தூர் போக உத்தரவு. திருச்செந்தூர் போனவுடனே (முருகன் அருளினால்) விசாகப்பட்டினம் போகும்படி உத்தரவு கிடைத்தது. ஆக ஒன்பது ஊர் மாற்றமும் இருபத்தொன்பது நாட்களில் நடைபெற்றது. இந்த ஆபீசருக்குச் சர்க்கார் பிரயாணப் படி உண்டா இல்லையா? இந்தப் பணம் யாருடையது? இந்தப் பணச் செலவுக்கு யார் பொறுப்பு?......”

நிருபர் மேலும் எழுதிக் கொண்டே போகிறார். நமக்கு இதுவே போதும்.

அப்பனே! திருச்செந்தூர் முருகனே! இந்த மட்டும் நீ அந்த விவசாய டிமான்ஸ்ட்ரேட்டரைக் கடலிலே தள்ளி மூழ்க அடித்து விடாமல், அல்லது நிக்கோபார் தீவுக்கு மாற்றி விடாமல், விசாகப்பட்டினத் துறைமுகத்தில் கொண்டு போய்க் கரை சேர்த்தாயே! உன் கருணையே கருணை!

அப்பனே! முருகா! மேற்படி அப்பாவி டிமான்ஸ்ட்ரேட்டரின் பிரயாண அவதி விசா

கப்பட்டினத்திலாவது முடிந்து போகும்படி அருள் செய்வாயாக! ரயில்களில் கூட்டம் தாங்கவில்லை! இனியும் அவரைச் சோதனை செய்ய வேண்டாம்! விவசாய இலாக்கா மேலதிகாரிகளுக்குக் கொஞ்சம் சிபாரிசு பண்ணு!

நமது நிருபர் எழுதிய விவரம் உண்மை என்று நம்பித்தான் மேலே வெளியிட்டிருக்கிறோம். ஆனால் அது உண்மை அல்லவென்றும், கட்டுக்கதைதான் என்றும் நமது திறமைசாலியான விளம்பர இலாக்கா டைரக்டர் அறிவித்தால் மிகவும் மகிழ்ச்சி அடைவோம். சுயராஜ்ய சர்க்காரின் கீழ் விவசாய இலாக்கா நிர்வாகம் இவ்வளவு அலங்கோலமாக நடக்கிறது என்பது நமக்கு மகிழ்ச்சி தர முடியாதல்லவா!

காங்கிரஸே! துள்ளிக்குதி!

வடக்கே காங்கிரஸிலிருந்து சில பழைய காங்கிரஸ் வாதிகள் பிரிந்து போகிறார்கள் என்ற செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன அல்லவா! இச் செய்திகளைக் கேட்டு நம்மில் சிலர் சோர்வு அடையக் கூடும். ஆனால் அத்தகைய சோர்வைப் போக்கும்படியான செய்தி ஒன்று தெற்கேயிருந்து வந்திருக்கிறது. அதிலும் கவியரசர் பாரதியார் பிறந்த எட்டயபுரத்திலிருந்து வந்து, அச்செய்தி நம் "சுதேசமித்திர"னில் பிரசுரமாகியிருக்கிறது. இப்போது செய்தியைக் கேளுங்கள்:—

"தளவாய்புரத்தில் காங்கிரஸ் பிரசாரம்

எட்டயாபுரம் மேயீ 26உ.

கயத்தார் பிர்க்கா தளவாய்புரம் என்ற கோபாலபுரம் கிராமத்தில் சில தினங்களுக்கு முன் காங்கிரஸ் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. கோவில்பட்டி தாலுக்கா காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீ கே. ராமசாமி தாஸ் தலைமை வகித்தார். ஸ்ரீ கி. நா. சுப்பா நாயகர் வரவேற்று வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தார். கோவில்பட்டி தாலுகா தாசில்தார் ஸ்ரீ டி. சுப்பிரமணிய தாஸ், டாக்டர் கோமதியம்மாள், சப் இன்ஸ்பெக்டர் ஆதிநாராயண தாஸ், தா. கா. கமிட்டி காரியதரிசி உ. க. கிருஷ்ணசாமி நாயக்கர் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். தாலுகா கமிட்டி தலைவர் ஸ்ரீ கே. ராமசாமிதாஸ் பேசுகையில், 'வரப்போகும் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெறும்' என்று கூறினார் ...."

கேட்பானேன்! காங்கிரஸ் வெற்றிபெறுவதற்குக் கேட்பானேன்! தாசில்தார்களும், சப் இன்ஸ்பெக்டர்களும் காங்கிரஸ் பொதுக் கூட்டங்களில் சொற்பொழிவு ஆற்றிப் பிரசாரம் செய்யத் தொடங்கிய பிறகு காங்கிரஸ் வெற்றி பெறாமல் வேறு என்னத்தைச் செய்யும்! ஆம்; வெற்றி பெற்றே தீரும்! ஆம்; அப்படித்தான் வெற்றி பெறும்!—நீர் யார் கேட்பதற்கு!

இன்னும் ஸப் மாஜிஸ்ட்ரேட்டுகள், ஸப் ரிஜிஸ்ட்ரார்கள், ஸப் ஜெயிலர்கள், ஹெட் கான்ஸ்டேபிள்கள், தாலுகா ஆபீஸ் டபேதார்கள், கிராம முனிசீபுகள்—தலையாரிகள் முதலியோரும் காங்கிரஸ் பிரசாரம் செய்யத் தொடங்கி விட்டார்கள். தேர்தலில் காங்கிரஸின் வெற்றி வெள்ளமோ வெள்ளம்! வாரியோ வாரிதான்! ஆகையால், காங்கிரஸே! எட்டயபுரத்திலிருந்து வந்திருக்கும் செய்தியைக் கேட்டு நீ துள்ளிக் குதிப்பாயாக! இரண்டொரு பரத நாட்டிய ஜதிகள் நீ ஆடினாலும் பிசகையாகாது! பொருத்தமாகத்தான் இருக்கும்!

கொண்டு வா தோல்காப்பியம்!

கிராமப் பஞ்சாயத்து ஒன்றின் நிர்வாகத்தில் புத்தக சாலை வைத்து நடத்தத் தீர்மானித்தார்கள். இன்னின்ன புத்தகங்கள் வாங்க வேண்டும் என்று ஜாபிதா தயாரித்தார்கள். அந்த ஜாபிதா சென்னை சர்க்காரின் புத்தக சாலை அதிகாரிக்குச் சென்றது. ஆறு மாதம் கழித்து அங்கீகாரம் வந்தது. உடனே பஞ்சாயத்துத் தலைவர் புத்தக ஜாபிதாவை எடுத்துக் கொண்டு சென்னைப்பட்டணம் புறப்பட்டார். நேரே புத்தகங்களைப் பார்த்து வாங்கிக் கொண்டு வரலாம், அதோடு மற்றக் காரியங்களையும் பார்த்துக் கொள்ளலாம் என்றுதான். ஒரு பிரசித்தமான புத்தகப் பிரசுராலயத்துக்குச் சென்றார். புத்தக ஜாபிதாவைக் காட்டி அதன்படி புத்தகங்களை எடுத்து அடுக்கச் சொன்னார். பிரசுராலயத்தாரும் புத்தகங்களை எடுத்து வைத்தார்கள். பஞ்சாயத்துத் தலைவர் ஜாபிதாவில் கண்டபடி புத்தகங்கள் சரியாயிருக்கின்றனவா என்று பார்த்தார். ஒரு புத்தகத்தின் பெயர் ஜாபிதாவில் "தோக்காப்பியம்" என்று இருந்தது. ஆனால் கடைக்காரர் எடுத்துவைத்த புத்தகத்தின் அட்டையில் "தொல்காப்பியம்" என்று இருந்தது.

"இதில் 'தொல்காப்பியம்' என்றல்லவா இருக்கிறது! இது வேண்டாம்! கொண்டு வா தோல்காப்பியம்!" என்றார். கடைக்காரர் எவ்வளவு சொல்லியும் அவர் கேட்கவில்லை. பாவம்! பஞ்சாயத்துக் குமாஸ்தா ஆங்கிலத்திலிருந்து தமிழில் பெயர்த்து எழுதும்போது (Tholkappiam) 'தோல்காப்பியம்' என்று எழுதி விட்டார். அது அவ்வளவு ஆபத்தாய்ப் போய்விட்டது!

இவ்விதம் ஒரு பஞ்சாயத்துத் தலைவரும் குமாஸ்தாவும் 'தொல்காப்பியம்' பற்றித் தெரிந்து கொண்டிருப்பார்களானால், அந்தப் புத்தகத்தைக் கிராமப் புத்தகசாலையில் எத்தனை பேர் படித்துப் பயன் அடையக்கூடும்!—பாதகமில்லை. ஒரு சிலர் படித்துப் பயன் அடைந்தாலும் போதும். இத்தகைய பழம் பெரு நூல்களும் ஒரு புத்தகசாலையில் இருக்க வேண்டியதுதான். ஆனால் எல்லாம் இப்படிப் பட்ட பழைய நூல்களாகவே இருக்கலாமா! தற்கால உலக முன்னேற்றத்தைத் தெரிவிக்கக்கூடிய புத்தகங்களும் இருக்க வேண்டுமல்லவா! தமிழ் நாட்டில் தற்போதுள்ள புத்தகசாலைகள் மிகச் சில. எல்லாம் சேர்ந்து

ஆயிரத்துக்குள்ளே இருக்கும். அவற்றில் ஒரு பக்கம் தொல்காப்பியம், சீவகசிந்தாமணி ஆகிய நூல்கள் வைக்கப்பட்டிருக்கும். மற்றொரு பக்கம் ஐம்பது வருஷங்களுக்கு முன் வெளியான ''விஜயசேகரன் அல்லது விந்தியபுரி விந்தை'' ''கருணாகரன் அல்லது கமலாபுரி மர்மம்'' ''நளினி காந்தி அல்லது நரகபுரி இரகசியம்'' முதலிய காலங் கடந்த பழைய கந்தை ஏட்டு நாவல்கள் இருக்கும்.

புத்தகசாலைகளுக்கு அரசாங்கத்தார் நன்கொடை வழங்குவதாக ஒரு வதந்தியும் சில சமயம் கேட்கப்படும். இதை நம்பிச் சிலர் விண்ணப்பம் போடுவார்கள். அப்படி விண்ணப்பம் போட்ட புத்தகசாலை நிர்வாகி ஒருவர் பதினைந்து மாதம் சர்க்கார் இலாகாவுடன் கடிதப் போக்கு வரவு நடத்திய பிறகு சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு எழுதியதாவது :—

''ஐயா! உங்களிடம் 150 ரூபாய் நன்கொடை வாங்கும் முயற்சியில் இதுவரை 75 ரூபாய் தபால் செலவு ஆகிவிட்டது. மாதமும் 15 ஆகிவிட்டது. தாற்காலிகமாக நமது கடிதப் போக்குவரவை நிறுத்தி வைத்துக் கொள்ளலாம். கனம் கித்வாய் தபால் இலாகாவை விட்டுச் சென்ற பிறகு மறுபடியும் ஒருவேளை தபால் தலைகளின் விலை இறங்கினால், விட்ட இடத்தில் மறுபடி நம் கடிதப் போக்குவரவைத் தொடங்குவோம். அல்லது எங்கள் புத்தகசாலை அங்கத்தினர் அடுத்த வருஷ சந்தாத் தொகையைச் செலுத்திய பிறகு ஆரம்பிக்கலாம்!''

இம்மாதிரி அநுபவங்கள் பெற்ற நம் நேயர்கள் சிலர் புத்தகசாலைகளின் அவசியம் பற்றி நாம் எழுதியிருந்த கட்டுரையைப் படித்து விட்டுக் கடிதம் எழுதி யிருக்கிறார்கள்.

''சர்க்கார் புத்தகங்களாகவே வாங்கி வாசகசாலைகளுக்கு விநியோகித்து விட்டால் ரொம்ப க்ஷேமம்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆரம்பக் கல்விக்குச் செலவாகும் ஏழு கோடி ரூபாய் உண்மையில் பயன் பெறவேண்டுமானால் ஒவ்வொரு ஆரம்பப் பாடசாலையை யொட்டி ஒரு புத்தகசாலை நிறுவ வேண்டும் என்பதை ஆமோதித்திருக்கிறார்கள். ஆனால் யார் ஆமோதித்து என்ன செய்வது! ஆமோதிக்க வேண்டியவர்கள் அரசாங்கத்தார் அல்லவா!

அரசாங்கத்தை ஆமோதிக்கச் செய்வதற்காகப் புத்தகசாலை மகாநாடு ஒன்று கூட்ட வேண்டும் என்றும் சில நண்பர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இது நல்ல யோசனைதான். ஆனால் அது காரியத்தில் நடைபெறுவதற்குச் சில பூர்வாங்க விவரங்கள் தேவை. முக்கியமாக, தமிழ் நாட்டில் இப்போதுள்ள புத்தகசாலைகள் எவ்வளவு, எங்கெங்கே இருக்கின்றன என்று தெரிய வேண்டும். ஆகையால் புத்தகசாலை இயக்கத்தில் அக்கறையுள்ள அன்பர்கள் அவர்களுக்குச் சமீபமாயுள்ள புத்தகசாலைகளைப் பற்றிப் பின்வரும் விவரங்களை விசாரித்துத் தெரிவிக்கக் கோருகிறோம்.

1. புத்தகசாலையின் பெயர், ஊர், தபால் ஆபீஸ். 2. ஸ்தல ஸ்தாபனத்தினால் நடத்தப் படுவதா, பிரத்தியேக சங்கங்களினாலோ தனிப்பட்டவர்களாலோ நடத்தப் படுவதா! 3. புத்தகசாலையில் முழுப் புத்தகங்களாக எவ்வளவு இருக்கின்றன! (கிழிந்த ஏடுகளைக் கணக்கிலே சேர்க்க வேண்டியதில்லை.) 4. அவற்றில் தமிழ்ப் புத்தகங்கள் எத்தனை! 5. மாதம் சராசரி எத்தனை பேர் வந்து படிக்கிறார்கள்! 6. சர்க்கார் மானியம் வருகிறதா! அப்படியானால் வருஷத்துக்கு எவ்வளவு! 7. எத்தனை காலமாகப் புத்தகாலயம் நடந்து வருகிறது!

ஊக்கமுள்ள நண்பர்கள் தங்களுக்குச் சமீபத்திலுள்ள புத்தகாலயங்களைப் பற்றி மேற்கண்ட விவரங்களை நன்கு தெரிந்து எழுதி அனுப்பக் கோருகிறோம். விவரங்கள் கிடைத்த பிறகு புத்தகசாலை மகாநாடு கூட்டுவது பற்றி யோசிக்கலாம். புத்தகசாலைகளைப் பற்றிய விவரங்களைத் தயவுசெய்து ''ஆசிரியர், 'கல்கி', கீழ்ப்பாக்கம், சென்னை'' என்ற விலாசத்துக்குத் தெரியப்படுத்த வேண்டுகிறோம்.

''புதுமைப் பித்தன்'' நினைவு நாள்

தமிழர்கள் தமிழ் நாட்டை விட்டு வெளியே சென்றாலும் தமிழை மறப்பதில்லை. தமிழ் நாட்டிலுள்ளவர்களைக் காட்டிலும் ஒருபடி அதிகமாகவே அவர்களிடம் தமிழன்பு தழைத்தோங்குகிறது. புனா கலைக் கழகத்திலிருந்து வந்துள்ள பின்வரும் கடிதத்தைப் பாருங்கள் :

''தங்கள் 10—6—51 'கல்கி'யில் 'புதுமைப் பித்தனின்' குடும்பத்தாருக்கு உதவி கோரி விடுத்திருந்த வேண்டுகோளைப் படித்தேன். எங்கள் கழகத்தில் சர்வஜித் வருஷம் ஐப்பசி மாதம் (நவம்பர் 1947) நடைபெற்ற ''பாரதி விழா''வுக்கு அவர் தலைமை வகித்து நடத்திக் கொடுத்த பெருமை எங்களுக்கு உண்டு. எங்கள் கழகத்தின் நூல் நிலையத்தில், புதுமைப் பித்தனின் புத்தகங்கள் முக்கிய இடம் பெற்றிருப்பதுடன், இங்குள்ள தமிழர்கள் அனைவரும் அவற்றை இன்னும் படித்து இன்புறுகின்றனர் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இங்குள்ள தமிழர்களும் எங்கள் கழகமும் அந்த எழுத்தாளரை இன்னும் மறக்கவில்லை என்பதுடன் அவருக்காகத் திரட்டப்படும் நிதி மிகப் பெரிதாக வளர வேண்டுமெனவும் விரும்புகிறார்கள். அதற்கு அறிகுறியாக ரூபாய் பத்து மணியார்டர் மூலம் எங்கள் கழகத்திலிருந்து அனுப்பி யிருக்கிறோம். இங்குள்ள தமிழர்களிடமிருந்து இன்னும் ஏதாவது நன்கொடை கிடைத்தாலும் வசூல் செய்து அனுப்புகிறோம். தமிழ் இலக்கியத்திற்காக வாழ்நாளை அர்ப்பணித்தவரின் குடும்பத்தைக் கைவிட்டு விட்டதென்ற அவச் சொல் ஏற்படாதவாறு தமிழ் மக்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

இங்ஙனம்,

கலைக் கழகம், புனா — இ. வே. கோபாலகிருஷ்ணன், செயலாளர்.''

புனா கலைக் கழகத்தின் அன்பு கலந்த அரிய நன்கொடையான பத்து ரூபாயையும் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கக் காரியதரிசியிடம் சேர்ப்பித்து விட்டோம். ஜுலை மாதம் 3-ந் தேதி சென்னையில் கனம் பக்தவத்சலம் அவர்களின் தலைமையில் புதுமைப்பித்தனின் நினைவு நாள் கொண்டாடப் பெறுகிறது. அச்சமயம் 'புதுமைப்பித்தன்' குடும்ப சகாய நிதிக் கமிட்டி நிறுவப்படுமென்று நம்புகிறோம்.

பொன்னியின் செல்வன்



கல்கி

அத்தியாயம் 12

குருவும் சீடனும்

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் நாட்டுச் சரித்திர ஆராய்ச்சி சம்பந்தமான ஒரு நிகழ்ச்சியை இக்கதையைப் படித்து வரும் நேயர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

திரிசிராப்பள்ளி ஜில்லா லால்குடி தாலுக்காவில் அன்பில் என்ற பெயர் கொண்ட கிராமம் ஒன்று இருக்கிறது. இதை வடமொழியாளர் 'பிரேமபுரி' என்று மொழி பெயர்த்துக் கையாண்டிருக்கிறார்கள். இன்றைக்குச் சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கிராமத்தில் ஒரு வேளாளர் தம்முடைய பழைய வீட்டை இடித்துப் புதுப்பித்துக் கட்டுவதற்காக அஸ்திவாரம் தோண்டினார். அப்போது ஓர் அதிசயமான வஸ்து பூமிக்கடியிலிருந்து அகப்பட்டது. பல செப்புத் தகடுகளை நுனியில் துவாரமிட்டு வளையத்தினால் கோத்திருந்தது. அந்தத் தகடுகளில் ஏதோ செதுக்கி எழுதப்பட்டிருந்தது. இரண்டு ஆள் தூக்க முடியாத கனமுள்ள அந்தத் தகடுகளை அவர் சில காலம் வைத்திருந்தார். பிறகு அந்தக் கிராமத்துக் கோயிலைப் புதுப்பித்துத் திருப்பணி செய்யலாம் என்று வந்த ஸ்ரீ ஆர். எஸ். எல். லக்ஷ்மண செட்டியார் என்பவரிடம் அத்தகடுகளைக் கொடுத்தார். ஸ்ரீ லக்ஷ்மணச் செட்டியார் அத்தகடுகளில் சரித்திர சம்பந்தமான விவரங்கள் இருக்கலாம் என்று ஊகித்து அவற்றை எடுத்துக் கொண்டுபோய் மகா மகோபாத்தியாய சுவாமிநாத அய்யர் அவர்களிடம் தந்தார். அய்யர் அவர்கள் அச்செப்பேடுகளில் மிக முக்கியமான விவரங்கள் இருப்பதைக் கண்டு அந்த நாளில் சிலாசாஸன ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஸ்ரீ டி. ஏ. கோபிநாதராவ் எம். ஏ. என்பாரிடம் அத்தகடுகளைச் சேர்ப்பித்தார். ஸ்ரீ கோபிநாதராவ் அச்செப்புத் தகடுகளைக் கண்டதும் அருமையான புதையலை எடுத்தவர்போல் அகமகிழ்ந்தார். ஏனென்றால், சோழ மன்னர்களின் வம்சத்தைப் பற்றிய அவ்வளவு முக்கியமான விவரங்கள் அச் செப்பேடுகளில் செதுக்கப்பட்டிருந்தன.

சுந்தர சோழ சக்கரவர்த்தியின் 'மான்ய மந்திரி'யான அன்பில் அநிருத்தப் பிரம்மராயருக்குச் சக்கரவர்த்தி பட்டத்துக்கு வந்த நாலாம் ஆண்டில் அளித்த பத்துவேலி நில சாஸனத்தைப் பற்றிய விவரங்கள் அந்தச் செப்பேடுகளில் செதுக்கப்பட்டிருந்தன. இந்த நில சாஸனத்தை எழுதிய மாதவ பட்டர் என்பவர் சுந்தர சோழர் வரைக்கும் வந்த சோழ வம்சாவளியை அதில் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் அநிருத்தப் பிரம்மராஜரின் வைஷ்ணவ பரம்பரையைக் குறிப்பிட்டு, அவருடைய தந்தை, தாயார், பாட்டனார், கொள்ளுப் பாட்டனார் ஆகியவர்கள் ஸ்ரீ ரங்கநாதரின் ஆலயத்தில்

செய்து வந்த சேவையைக் குறித்தும் எழுதி யிருந்தார்.

இதற்கு முன்னால் அகப்பட்டிருந்த ஆனைமங்கலச் செப்பேடுகள், திருவாலங்காட்டுச் செப்பேடுகள்-ஆகிய வற்றில் கொடுத்திருந்த சோழ வம்சாவளியுடன் அன்பில் செப்பேடுகளில் கண்டது பெரும்பாலும் ஒத்திருந்தது. எனவே, அந்தச் செப்பேடுகளில் கண்டவை சரித்திர பூர்வமான உண்மை விவரங்கள் என்பது ஊர்ஜிதமாயிற்று. மற்ற இரண்டு செப்பேடுகளில் காணாத இன்னும் சில விவரங்களும் இருந்தபடியால் "அன்பிற் செப்பேடுகள்" தமிழ்நாட்டுச் சரித்திர ஆராய்ச்சித் துறையில் மிகப் பிரசித்தி அடைந்தன.

எனவே, அநிருத்தப் பிரம்மராஜர் என்பார் சரித்திரச் செப்பேடுகளில் புகழ் பெற்ற சோழ சாம்ராஜ்ய மந்திரி என்பதை மனதில் வைத்துக் கொண்டு மேலே கதையைத் தொடர்ந்து படிக்கும்படி நேயர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

* * *

மானிய முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராஜர் வீற்றிருந்த மண்டபத்துக்குள் ஆழ்வார்க்கடியான் பிரவேசித்தான். அவரை மூன்று தடவை சுற்றி வந்தான். சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து எழுந்தான்.

"ஓம் ஹ்ராம் ஹ்ரீம் வஷட்டு!" என்று நாலு தடவை உரத்த குரலில் உச்சரித்து விட்டு, "குருதேவரே! விடை கொடுங்கள்!" என்றான்.

அநிருத்தர் புன்னகையுடனே "திருமலை! என்ன இந்தப் போடு போடுகிறாய்? எதற்கு என்னிடத்தில் விடை கேட்கிறாய்?" என்றார்.

"தாஸன் அவலம்பித்த ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தையும் 'ஆழ்வார்க்கடியான்' என்ற பெயரையும் தங்களுக்குக் கைங்கரியம் செய்யும் பாக்கியத்தையும் இந்த மாகடலில் அர்ப்பணம் செய்து விட்டு வீர சைவ காளாமுக சம்பிரதாயத்தைச் சேர்ந்து விடப் போகிறேன். கையில் மண்டை ஓட்டை எடுத்துக் கொண்டு 'ஓம் ஹ்ராம் ஹ்ரீம் வஷட்டு' என்ற மகத்தான மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு ஊர் ஊராகப் போவேன்! தலையில் ஜடாமகுடம் முகத்தில் நீண்ட தாடியும் வளர்த்துக் கொண்டு, எதிர்ப்படுகிற ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய மண்டைகளையெல்லாம் இந்தத் தடியினால் அடித்துப் பிளப்பேன்!......"

"அப்பனே! நில்! நில்! என்னுடைய மண்டைக்குக் கூட அந்தக் கதி தானோ?"

"குருவே! தாங்கள் ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தை இன்னமும் அவலம்பிக்கிறவர் தானோ?"

"திருமலை! அதைப் பற்றி உனக்கு என்ன சந்தேகம்? என்னை யார் என்று நினைத்தாய்!"

"தாங்கள் யார்? அது விஷயத்திலேதான் எனக்கும் சந்தேகம் ஏற்பட்டு விட்டது. இரண்டு நதிகளின் நடுவில் அறிதுயில் புரிந்து சகல புவனங்களையும் காக்கும் ஸ்ரீ ரங்கநாதருக்குப் பணி செய்வதையே வாழ்க்கை எடுத்த பயனாகக் கொண்டிருந்த அன்பில் அனந்தாழ்வார் சுவாமிகளின் கொள்ளுப்பேரர் தாங்கள் தானே!..."

"ஆம், அப்பனே! நான்தான்!"

"ஸ்ரீமந் நாராயண நாமத்தின் மகிமையை நானிலத்துக்கெல்லாம் எடுத்துரைத்த அன்பில் அநிருத்தப் பட்டாச்சாரியின் திருப்பேரரும் தாங்கள்தானே?"

"ஆமாம்; நானேதான்! அந்த மகானுடைய திருநாமத்தைத் தான் எனக்கும் சூட்டினார்கள்!"

"ஆழ்வார்களுடைய அமுதொழுகும் மதுர கீதங்களைப் பாடிப் பக்த கோடிகளைப் பரவசப்படுத்தி வந்த நாராயண பட்டாச்சாரியின் சாக்ஷாத் ஸ்ரீமந்த புத்திரரும் தாங்களே யல்லவா?"

"ஆமாம், அப்பா, ஆமாம்!"

"ஸ்ரீரங்கநாதர் பள்ளி கொண்ட பொன்னரங்கக் கோயிலில் தினந்தினம் நுந்தா விளக்கு ஏற்றி வைத்தும், யாத்திரீகர்களுக்கு வெள்ளித் தட்டில் அன்னமிட்டும் கைங்கரியம் புரிந்து வந்த மங்கையர் திலகத்தின் புதல்வரும் தாங்களே அல்லவா?"

"சந்தேகமே இல்லை!"

"அப்படியானால், என் கண்கள் என்னை மோசம் செய்கின்றனவா? என் கண் முன்னே நான் பார்ப்பது பொய்யா? என் இரு செவிகளில் நான் கேட்டதும் பொய்யா?"

"எதைச் சொல்கிறாய், அப்பனே? உன் கண்களின் மேலும் காதுகளின் பேரிலும் சந்தேகம் கொள்ளும்படி என்ன நேர்ந்து விட்டது?"


"தாங்கள் இந்த ஊர்ச் சிவன் கோயிலுக்குச் சென்று அபிஷேகம் — அர்ச்சனை எல்லாம் நடத்தி வைத்ததாக என் செவிகளால் கேட்டேன்"

"அது உண்மையே தான்; உன் செவிகள் உன்னை மோசம் செய்து விட வில்லை."

"தாங்கள் சிவன் கோவிலுக்குப் போய் வந்ததின் அடையாளங்கள் தங்கள் திருமேனியில் இருப்பதாக என் கண்கள் காண்பதும் உண்மைதான் போலும்!"

"அதுவும்உண்மையே!"

"இந்தக் கலியுகத்தில் ஸ்ரீமந் நாராயணனே தெய்வம் என்றும், ஆழ்வார்களின் பாசுரங்களே வேதம் என்றும், ஹரி நாம சங்கீர்த்தனமே மோட்சத்தை அடையும் மார்க்கம் என்றும் எனக்குக் கற்பித்த குருதேவர் தாங்களே அல்லவா?"



"ஆம்; அதனால் என்ன?"

"குருதேவராகிய தாங்களே சொல்வது ஒன்றும், செய்வது ஒன்றுமாக இருந்தால், சீடனாகிய நான் என்ன செய்யக் கிடக்கின்றது?"

"திருமலை! நான் சிவன் கோயிலுக்குப் போய்த் தரிசனம் செய்தது பற்றித் தானே சொல்கிறாய்?"

"குருதேவரே! அங்கே எந்தக் கடவுளைத் தரிசனம் செய்தீர்கள்?"

"சந்தேகம் என்ன? நாராயண மூர்த்தியைத் தான்."

"இராமேசுரக் கோயிலுக்குள் இலிங்க வடிவம் வைத்திருப்பதாக வல்லவோ கேள்விப்பட்டிருக்கிறேன்? அதனால் தானே இங்குள்ள வீர சைவ பட்டர்மார்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு அவ்வளவு கொக்கரித்தார்கள்?"

"பிள்ளாய்! நீ திருநகரியில் திரு அவதாரம் செய்த நம் சடகோபரின் அடியார்க்கடியான் என்று நாமம் பூண்டிருப்பது சத்தியந்தானே?"

"அதில் என்ன சந்தேகம்?"

"நம்மாழ்வாரின் அருள்வாக்கைச் சற்று ஞாபகப்படுத்திக் கொள். நீ மறந்திருந்தால் நானே நினைவூட்டுகிறேன். கேள்:

'இலிங்கத்திட்ட புராணத்தீரும் சமணரும் சாக்கியரும்
வலிந்து வாது செய்வீர்களும் மற்றும் நுந் தெய்வமுமாகி நின்றனே!...'

இவ்வாறு சடகோபரே சாதித்திருக்கும்போது சிவலிங்கத்தில் நான் நாராயணனைத் தரிசித்தது தவறா?"

"ஆகா! சடகோபரின் அருள் வாக்கே வாக்கு! இலிங்கத்தை வழிபடுவோரைச் சமணரோடும் சாக்கியரோடும் கொண்டு போய்த் தள்ளினார், பாருங்கள்!"

"அப்பனே! உன் குதர்க்க புத்தி உன்னை விட்டு எப்போது நீங்குமோ, தெரியவில்லை. நம் சடகோபர் மேலும் சொல்லி யிருப்பதைக் கேள்.

'நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய்
நெடுவானாய்ச்
சீரார் சுடர்கள் இரண்டாய்ச் சிவனாய்
அயனாய்...'

உள்ளவன் ஸ்ரீ நாராயண மூர்த்தியே என்று திருவாய் மலர்ந்திருக்கிறார். இன்னும் கேள், திருமலை! கேட்டு உன் மனமாசைத் துடைத்துக்கொள்!

'முனியே நான்முகனே முக்கண்ணப்பா!
என் பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண் கருமாணிக்கமே
என் கள்வா!
தனியேன் ஆருயிரே என்தலை மிசையாய்
வந்திட்டு...'

கேட்டாயா, திருமலை! 'முக்கண்ணப்பா!' என்று நம் சடகோபர் கூவி அழைத்துத் தம் தலைமீது வரும்படி பிரார்த்திக்கிறார்! நீயோ சிவன் கோயிலுக்கு நான் போனது பற்றி ஆட்சேபிக்கிறாய்!......"

"குருதேவரே! மன்னிக்க வேண்டும்; அபசாரத்தை க்ஷமிக்க வேண்டும்! நம்மாழ்வாரின் பாசுரங்கள் அனைத்தையும் தெரிந்து கொள்ளாமையினால் வீண் சண்டைகளில் காலங் கழித்தேன். தங்களையும் சந்தேகித்தேன். இனி எனக்கு ஒரு வரம் கொடுத்து அருள வேண்டும்."

"என்ன வரம் வேண்டும் என்று சொன்னாயானால், கொடுப்பதைப் பற்றி யோசிக்கலாம்."

"திருக் குருகூர் சென்று அங்கேயே தங்கிவிட ஆசைப் படுகிறேன். நம் சடகோபரின் ஆயிரம் பாடல்களையும் சேகரித்துக்கொண்டு பிறகு ஊர் ஊராகச் சென்று அந்தப் பாடல்களைக் கானம் செய்ய விரும்புகிறேன்..."

"இந்த ஆசை உனக்கு ஏன் வந்தது?"

"வடவேங்கடத்திலிருந்து வரும் வழியில் வீர நாராயணப் பெருமான் சந்நிதியில் ஆழ்வார் பாசுரங்கள் சிலவற்றைப் பாடினேன். அந்த சந்நிதியில் கைங்கரியம் செய்யும் ஈசுவரபட்டர் என்னும் பெரியவர் கேட்டு ஆனந்தக் கண்ணீர் விட்டார்......"

"ஈசுவரபட்டர் மகா பக்திமான்; நல்ல சிஷ்டர்."

"அவருடைய இளம் புதல்வன் ஒருவனும் அவர் அருகில் நின்று கேட்டுக் கொண்டிருந்தான். அந்த இளம் பாலகனின் பால்வடியும் முகம் ஆழ்வார் பாசுரத்தைக் கேட்டுப் பூரண சந்திரனைப்போல் பிரகாசித்தது. 'மற்றப் பாடல்களும் தெரியுமா?' என்று அந்தச் சின்னஞ் சிறு பிள்ளை பால் மணம் மாறாத வாயினால் கேட்டான். 'தெரியாது' என்று சொல்ல எனக்கு வெட்கமா யிருந்தது. ஆழ்வார்களின் தொண்டுக்கே ஏன் இந்த நாயேனை அர்ப்பணம் செய்து விடக் கூடாது என்று அப்போதே தோன்றியது. இன்றைக்கு அந்த எண்ணம் உறுதிப் பட்டு விட்டது......"

"திருமலை! அவரவர்களும் ஸ்வதர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கீதாச்சாரியார் அருள் புரிந்திருக்கிறார் அல்லவோ?"

"ஆம், குருவே!"

"ஆழ்வார்களின் பாசுரங்களைச் சேகரிப்பதற்கும் பரப்புவதற்கும் மகான்கள் அவதரிப்பார்கள். அது போலவே ஆழ்வார்களுடைய பாடல்களில் உள்ள வேத சாரமான தத்துவங்களை நிரூபணம் செய்து வடமொழியின் மூலம் பரத கண்டமெங்கும் நிலைநாட்டக் கூடிய அவதார மூர்த்திகளும் இந்நாட்டில் ஜனிப்பார்கள். நீயும் நானும் இராஜ்ய சேவையை நமது ஸ்வதர்மமாகக் கொண்டவர்கள். சோழ சக்கரவர்த்தியின் சேவையில் உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்வதாக நாம் சபதம் செய்திருப்பதை மறந்தனையா?......"

"மறக்கவில்லை, குருவே! ஆனால் அது உசிதமா என்ற சந்தேகம் தோன்றி என் உள்ளத்தை அரித்து வருகிறது. முக்கியமாக, தங்களைப் பற்றிச் சில இடங்களில் பேசிக் கொள்வதைக் கேட்டால்,......"

"என்ன பேசிக் கொள்கிறார்கள்?"

"தங்களுக்குச் சக்கரவர்த்தி பத்து வேலி நிலம் மானியம் விட்டு அதைச் செப்பேட்டிலும் எழுதிக் கொடுத்திருப்பதால் தாங்கள் வைஷ்ணவ சம்பிரதாயத்தை விட்டு விட்டதாகச் சிலர்

சொல்கிறார்கள். ஜாதி தர்மத்தைப் புறக்கணித்துக் கப்பல் பிரயாணம் செய்ததாகவும் கூறுகிறார்கள்......"

"அந்தப் பொறாமைக்காரர்கள் சொல்வதை நீ பொருட்படுத்த வேண்டாம். நம்முடைய ஜாதி கிணற்றுத் தவளைகளாக இருக்க வேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்கள். சக்கரவர்த்தி எனக்குப் பத்து வேலி நிலம் மானியம் கொடுத்திருப்பது உண்மைதான். அதைச் செப்பேட்டிலும் எழுதிக் கொடுத்திருக்கிறார். ஆனால் அதற்கு நாலு வருஷங்களுக்கு முன்பே சக்கரவர்த்திக்கு நான் மந்திரியானேன் என்பது உனக்குத் தெரியும் அல்லவா?"

ஆழ்வார்க்கடியான் மௌனமாயிருந்தான்.

"சக்கரவர்த்திக்கும் எனக்கும் எப்போது நட்பு ஏற்பட்டது என்றாவது உனக்குத் தெரியுமா? நாங்கள் இருவரும் இளம் பிராயத்தில் ஒரே ஆசிரியரிடம் பாடங் கற்றோம். செந்தமிழும் வடமொழியும் பயின்றோம். கணிதம், வான சாஸ்திரம், தர்க்கம், வியாகரணம் எல்லாம் படித்தோம். அப்போதெல்லாம் சுந்தர சோழர் சிம்மாசனம் ஏறப் போகிறார் என்று யாரும் கனவிலும் எண்ணியதில்லை. அவராவது நானாவது அதைப் பற்றிச் சிந்தித்ததே கிடையாது. இராஜாதித்தரும் கண்டராதித்தரும் காலமாகி அரிஞ்சய சோழர் பட்டத்துக்கு வருவார் என்று யார் நினைத்தது? அரிஞ்சயருக்கு அவ்வளவு விரைவில் துர்மரணம் சம்பவித்துச் சுந்தர சோழர் பட்டத்துக்கு வரும்படியிருக்கும் என்றுதான் யார் நினைத்தார்கள்? சுந்தர சோழர் சிம்மாசனம் ஏறிய போது அதனால் பல சிக்கல்கள் விளையும் என்று எதிர்பார்த்தார். உடனிருந்து நான் உதவுவதாயிருந்தால் பட்டத்தை ஒப்புக் கொள்வதாகவும் இல்லாவிட்டால் மறுத்து விடுவதாகவும் கூறினார். இராஜ்ய நிர்வாகத்தில் அவருக்கு உதவுவதாக அப்போது வாக்களித்தேன். அந்த வாக்குறுதியை இன்றளவும் நிறைவேற்றி வருகிறேன். இதெல்லாம் உனக்குத் தெரியாதா, திருமலை?"

"எனக்குத் தெரியும், குருதேவா! எனக்கு ஒருவனுக்கு மட்டும் தெரிந்து என்ன பயன்? ஜனங்களுக்குத் தெரியாதுதானே? நாட்டிலும் நகரத்திலும் வம்பு பேசுகிறவர்களுக்குத் தெரியாது தானே?"

"வம்பு பேசுகிறவர்களைப் பற்றி நீ சிறிதும் கவலைப்பட வேண்டாம். பரம்பரையான ஆச்சாரியத் தொழிலை விட்டுவிட்டு நான் இராஜ சேவையில் இறங்கியது பற்றி இதற்கு முன்னால் நானே சில சமயம் குழப்பமடைந்ததுண்டு. ஆனால் சென்ற இரண்டு நாட்களாக அத்தகைய குழப்பம் எனக்குச் சிறிதும் இல்லை. திருமலை! நான் இராமேசுவர ஆலயத்தில் சுவாமி தரிசனத்துக்காக இங்கு வரவில்லை என்பதும் மாதோட்டம் போவதற்காகவே இங்கு வந்தேன் என்பதும் உனக்குத் தெரியும் அல்லவா?"

"அப்படித்தான் ஊகித்தேன், குருதேவரே!"

"நீ ஊகித்தது சரியே. அன்றைக்குச் சம்பந்தரும் சுந்தரமூர்த்தியும் பரவசமாக வர்ணித்தபடியேதான் இன்றைக்கும் பாலாவி நதிக்கரையில் மாதோட்டம் இருக்கிறது.

'வண்டுபண்செயும் மாமலர்ப் பொழில்
மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந்துதிசெய
அருள்செய் கேதீச்சர மதுதானே!'

என்று சம்பந்தர் பாடியிருக்கிறாரே, அந்த மாதோட்டத்தை நேரில் பார்க்காமல் எழுதியிருக்க முடியுமா? இந்த இராமேச்சுரத் தீவிலிருந்தபடியே மாதோட்டத்தை எட்டிப் பார்த்துவிட்டு எழுதியதாகச் சொல்லுகிறார்கள் கிணற்றுத் தவளைப் பண்டிதர்கள் சிலர். அத்தகையோர் சொல்வதை நீ பொருட்படுத்த வேண்டாம்......"

"சுவாமி! மாதோட்டத்தின் இயற்கை வளங்களைக் கண்டு களிப்பதற்காகவா தாங்கள் அந்த க்ஷேத்திரத்துக்குச் சென்றிருந்தீர்கள்?"

"இல்லை; உன்னை அங்கே அனுப்ப எண்ணியிருப்பதால் அதைப் பற்றியும் சொன்னேன். நான் சென்றது இளவரசர் அருள்மொழி வர்மரைப் பார்ப்பதற்காக......"

"இளவரசரைப் பார்த்தீர்களா, குருதேவரே?" என்று ஆழ்வார்க்கடியான் கேட்டான். அவனுடைய பேச்சில் இப்போது தான் சிறிது ஆர்வமும் பரபரப்பும் தொனித்தன.

"ஆகா! உனக்குக்கூட ஆவல் உண்டாகி விட்டதல்லவா? இளவரசரைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு? ஆம், திருமலை! இளவரசரைப் பார்த்தேன்; பேசினேன். இலங்கையிலிருந்து வந்து கொண்டிருந்த அதிசயமான செய்திகள் எவ்வளவு தூரம் உண்மை என்பதை நேரில் தெரிந்து கொண்டேன். கேள், அப்பனே! இலங்கை மன்னன் மகிந்தனிடம் ஒரு மாபெரும் சைன்யம் இருந்தது. அந்தச் சைன்யம் இப்போது இல்லவே இல்லை. அது என்ன ஆயிற்று தெரியுமா? சூரியனைக் கண்ட பனிபோல் கரைந்து மறைந்து போய்விட்டது! மகிந்தனுடைய சைன்யத்திலே பாண்டிய நாட்டிலிருந்தும் சேரநாட்டிலிருந்தும் சென்ற வீரர்கள் பலர் இருந்தார்கள். அவர்கள் எல்லாரும் நம் இளவரசர் படைத்தலைமை வகித்து வருகிறார் என்று அறிந்ததும் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டார்கள். ஒருவரைப் போல் அனைவரும் நம்முடைய கட்சிக்கே வந்து சேர்ந்து விட்டார்கள்! மகிந்தன் எப்படிப் போர் புரிவான்? போயே போய் விட்டான். மலைகள் சூழ்ந்த ரோஹண நாட்டிற்குச் சென்று ஒளிந்து கொண்டிருக்கிறான். ஆக நமது சைன்யம் போர் செய்வதற்கு அங்கு இப்போது எதிரிகளே இல்லை!"

"அப்படியானால், குருதேவரே! இளவரசர் நம் சைனியத்துடன் திரும்பி விட வேண்டியது தானே? மேலும் அங்கே இருப்பானேன்? நம் வீரர்களுக்குத் தானியம் அனுப்புவது பற்றிய ரகளையெல்லாம் எதற்காக?"

"எதிரிகள் இல்லையென்று சொல்லித் திரும்பி வந்து விடலாம். ஆனால் இளவரசருக்கு அதில் இஷ்டமில்லை. எனக்கும் அதில் சம்மதமில்லை. இளவரசரும் சைனியமும் இப்பால் வந்ததும் மகிந்தன் மலைநாட்டிலிருந்து வெளி வருவான். மறுபடியும் பழையபடி போர் தொடங்கும். அதில் என்ன பயன்? இலங்கை மன்னரும் மக்களும் ஒன்று நமக்குச் சிநேகிதர்களாக வேண்டும். அல்லது புலிக் கொடியின் ஆட்சியை அங்கே நிரந்தரமாக நிறுவுதல் வேண்டும். இந்த இரண்டு வகை முயற்சியிலும் இளவரசர் ஈடுபட்டிருக்கிறார். நமது போர் வீரர்கள் இப்போது இலங்கையில் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? பழைய போர்களில் அநுராதபுர நகரமே நாசமாகி விட்டது. அங்கிருந்த பழமையான புத்த விஹாரங்கள், கோயில்கள், தாது கர்ப்ப கோபுரங்கள்,—எல்லாம் இடிந்து பாழாய்க் கிடக்கின்றன. இளவரசரின் கட்டளையின் பேரில் இப்போது நம் வீரர்கள் இடிந்த அக்கட்டிடங்களையெல்லாம் புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்!"

"அழகாய்த்தானிருக்கிறது. சைவம், வைஷ்ணவம் இரண்டையும் கைவிட்டு இளவரசர் சாக்கிய மதத்திலேயே ஒரு வேளை சேர்ந்து விடுவாரோ, என்னமோ? அதையும் தாங்கள் ஆமோதிப்பீர்களோ?"

"நானும் நீயும் ஆமோதித்தாலும் ஒன்றுதான்; ஆமோதிக்காவிட்டாலும் ஒன்றுதான். நம்மைப் போன்றவர்கள் நம்முடைய மதமே பெரிது என்று சண்டையிட்டுக் கொண்டிருக்கலாம். ஆனால் ஒரு நாட்டை ஆளும் அரசர் அவருடைய பிரஜைகள் அநுசரிக்கும் சமயங்கள் எல்லாவற்றையும் ஆதரித்துப் பராமரிக்க வேண்டும். இந்த உண்மையை யாருடைய தூண்டுதலுமில்லாமல் இளவரசர் தாமே உணர்ந்திருக்கிறார். சந்தர்ப்பம் கிடைத்ததும் காரியத்திலும் செய்து காட்டுகிறார். திருமலை! இதைக் கேள்! நம் இளவரசர் அருள்மொழி வர்மருடைய கரங்களில் சங்கு சக்கர ரேகை இருப்பதாகச் சொல்லக் கேட்டிருக்கிறேன்; நீயும் கேட்டிருப்பாய். ஆனால் அவருடைய கரங்களை நீட்டச் சொல்லி நான் பார்த்ததில்லை. அவர் கையில் சங்கு சக்கர ரேகை இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, ஒன்று நிச்சயமாகச் சொல்கிறேன். இந்தப் பூமண்டலத்தை ஏக சக்ராதிபதியாக ஆளத் தகுந்தவர் ஒருவர் உண்டு என்றால் அவர் இளவரசர் அருள்மொழிவர்மர் தான். பிறவியிலேயே அத்தகைய தெய்வ கடாட்சத்துடன் சிலர் பிறக்கிறார்கள். சற்று முன் சில வர்த்தகத் தலைவர்களும் கைக்கோளப் படை சேனாதிபதிகளும் வந்து பேசிக் கொண்டிருந்தார்களே, அது உன் காதில் விழுந்ததா? இளவரசருக்கு என்றால் நம் வர்த்தகர்கள்,—காசிலேயே கருத்துள்ளவர்கள்,—எவ்வளவு தாராளமாகி விடுகிறார்கள், பார்த்தாயா? போர் வீரர்கள் அவர் கீழிருந்து போர் செய்ய எப்படிப் போட்டி போடு

கிறார்கள், பார்த்தாயா? சில நாளைக்கு முன்னால் பொதிகைமலைச் சிகரத்தில் ஒரு தவயோகியைப் பார்த்தேன். அவர் ஞானக்கண் படைத்த மகான். அவர் என்ன சொன்னார் தெரியுமா? 'யானைக்கு ஒருகாலம் வந்தால் பூனைக்கு ஒருகாலம் வரும். இப்போது தென்னாடு மேம்பாடு அடையும் காலம் வந்திருக்கிறது. வெகு காலமாக இப்புண்ணிய பாரத பூமியில் பெரிய பெரிய சக்கரவர்த்திகளும் வீராதி வீரர்களும் ஞானப் பெருஞ் செல்வர்களும் மகா கவிஞர்களும் வடநாட்டிலேயே அவதரித்து வந்தார்கள். ஆனால் வடநாட்டைச் சீக்கிரம் கிரகணம் பிடிக்கப் போகிறது. இமயமலைக்கு அப்பாலிருந்து ஒரு மகா முரட்டுச் சாதியார் வந்து வட நாட்டைச் சின்னாபின்னம் செய்வார்கள். கோயில்களையும் விக்கிரகங்களையும் உடைத்துப் போடுவார்கள். ஸநாதன தர்மம் பேராபத்துக்கு உள்ளாகும். அப்போது நமது தர்மம், வேத சாஸ்திரம், கோயில், வழிபாடு,—ஆகியவற்றையெல்லாம் தென்னாடுதான் காப்பாற்றித் தரப் போகிறது. வீராதி வீரர்களான சக்கரவர்த்திகள் இத் தென்னாட்டில் தோன்றி நாலு திசைகளிலும் ஆட்சி செலுத்துவார்கள். மகா ஞானிகளும், பண்டிதோத்தமர்களும், பக்த சிரோமணிகளும் இத் தென்னாட்டில் அவதரிப்பார்கள்!' என்று இவ்விதம் அந்தப் பொதிகை மலைச் சிவயோகி அருளினார். அந்த யோகியின் தீர்க்க தரிசனம் உண்மையாகும் என்ற நம்பிக்கை எனக்கு இப்போது பிறந்திருக்கிறது, திருமலை!"

"சுவாமி! தாங்கள் ஏதேதோ ஆகாசக் கோட்டைகள் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அங்கே இராஜ்யத்தின் அஸ்திவாரத்தையே தகர்த்தெறியப் பார்க்கிறார்கள். குருதேவரே! நான் பார்த்ததையெல்லாம் தாங்கள் பார்த்து நான் கேட்டதையெல்லாம் தாங்களும் கேட்டிருந்தால் இவ்வளவு குதூகலமாயிருக்க மாட்டீர்கள். இந்தச் சோழ சாம்ராஜ்யத்துக்கு ஏற்படப் போகும் அபாயத்தை நினைத்துக் கதி கலங்குவீர்கள்..."

"திருமலை! ஆம், நான் மறந்தே விட்டேன். அதிக உற்சாகம் என் அறிவை மூடிவிட்டது. நீ உன் பிரயாணத்தில் தெரிந்து வந்த செய்திகளை இன்னும் நான் கேட்கவே இல்லை. சொல், கேட்கிறேன். எவ்வளவு பயங்கரமான செய்திகளாயிருந்தாலும் தயங்காமல் சொல்!"

"சுவாமி! இங்கேயே சொல்லும்படி ஆக்ஞாபிக்கிறீர்களா? நான் கொண்டு வந்த செய்திகளை வாயு பகவான் கேட்டால் நடுங்குவார்; சமுத்திர ராஜன் கேட்டால் ஸ்தம்பித்து நிற்பார்; பட்சிகள் கேட்டால் பறக்கும் சக்தியை இழந்து சுருண்டுவிடும்; ஆகாசவாணியும் பூமாதேவியும்கூட அலறி விடுவார்கள். அப்படிப்பட்ட செய்திகளை இங்கே பகிரங்கமாகச் சொல்லும்படியா பணிக்கிறீர்கள்?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"அப்படியானால் வா! காற்றும் கனலும் புகாத பாதாளக் குகை ஒன்று இந்தத் தீவிலே இருக்கிறது. அங்கே வந்து விவரமாகச் சொல்லு!" என்றார் அநிருத்தப் பிரம்ம ராயர்.

அத்தியாயம் 13

"பொன்னியின் செல்வன்"

வந்தியத்தேவன் நாகத் தீவின் முனையில் இறங்கி மாதோட்டத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்த அதே சமயத்தில், அநிருத்தப் பிரம்மராயரும் ஆழ்வார்க்கடியானும் சாம்ராஜ்ய நிலைமையைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில், குந்தவை தேவியும் கொடும்பாளூர் இளவரசி வானதியும், அம்பாரி வைத்த ஆனைமீது ஏறித் தஞ்சை நகரை நெருங்கிக் கொண்டிருந்தார்கள்.

இளையபிராட்டி சில காலமாகத் தஞ்சைக்குப் போவதில்லை என்று வைத்துக் கொண்டிருந்தாள். இதற்குப் பல காரணங்கள் இருந்தன. தஞ்சையில் அரண்மனைப் பெண்டிர் தனித் தனியாக வசிக்கும்படியாகப் போதிய அரண்மனைகள் இன்னும் உண்டாகவில்லை. சக்கரவர்த்தியின் பிரதான அரண்மனையிலேயே எல்லாப் பெண்டிரும் இருந்தாக வேண்டும். மற்ற அரண்மனைகளையெல்

லாம் பழுவேட்டரையர்களும் மற்றும் பெருந்தரத்து அரசாங்க அதிகாரிகளும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார்கள். பழையாறையில் அரண்மனைப் பெண்டிர் சுயேச்சையாக இருக்க முடிந்தது. விருப்பம்போல் வெளியில் போகலாம்; வரலாம். ஆனால் தஞ்சையில் வசித்தால் பழுவேட்டரையர்களின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுத் தீர வேண்டும். கோட்டைக்குள்ளும் அரண்மனைக்குள்ளும் இஷ்டம்போல் வருவதும் போவதும் இயலாத காரியம். அம்மாதிரி கட்டுப்பாடுகளும் நிர்ப்பந்தங்களும் இளையபிராட்டிக்குப் பிடிப்பதில்லை. அல்லாமலும் பழுவூர் இளையராணியின் செருக்கும் அவளுடைய அகம்பாவ நடத்தைகளும் குந்தவைப் பிராட்டிக்கு மிக்க வெறுப்பை அளித்தன. அரண்மனைப் பெண்டிர்கள் பழையாறையில் இருப்பதையே சக்கரவர்த்தியும் விரும்பினார். இந்தக் காரணங்களினால் குந்தவைப் பிராட்டி பழையாறையிலேயே வசித்து வந்தான்.

உடம்பு குணமில்லாத தன் அருமைத் தந்தையைப் பார்க்க வேண்டும், அவருக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தையும் கட்டுப்படுத்திக்கொண்டிருந்தாள்.

ஆனால் வந்தியத்தேவன் வந்து விட்டுப் போனதிலிருந்து இளைய பிராட்டியின் மனதில் ஒரு மாறுதல் ஏற்பட்டிருந்தது. இராஜ்யத்தில் பயங்கரமான சூழ்ச்சிகளும் சதிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது நாம் பழையாறையில் உல்லாசமாக நதிகளில் ஓடம் விட்டுக் கொண்டும் பூங்கா வனங்களில் ஆடிப் பாடிக் கொண்டும் காலங் கழிப்பது சரியா? தமையன் தொண்டை நாட்டில் இருக்கிறான்; தம்பியோ ஈழ நாட்டில் இருக்கிறான். அவர்கள் இருவரும் இல்லாத சமயத்தில் இராஜ்யத்தில் நடக்கும் விவகாரங்களை நாம் கவனித்தாக வேண்டும் அல்லவா? தலைநகரில் அவ்வப்போது நடக்கும் நிகழ்ச்சிகளை அந்தரங்கத் தூதர்கள் மூலம் அறிவிக்க வேண்டும் என்று தமையன் ஆதித்த கரிகாலன் கேட்டுக் கொண்டிருக்கிறானே? பழையாறையில் வசித்தால் தஞ்சையில் நடக்கும் காரியங்கள் எப்படித் தெரிய வரும்?



வந்தியத்தேவன் அறிவித்த செய்திகளோ மிகப் பயங்கரமாயிருந்தன. பழுவேட்டரையர்கள் தங்கள் அந்தஸ்துக்கு மீறி அதிகாரம் செலுத்தி வந்தது மட்டுமே இதுவரையில் இளைய பிராட்டிக்குப் பிடிக்காமலிருந்தது. இப்போதோ, சிம்மாசனத்தைப் பற்றியே சூழ்ச்சி செய்ய ஆரம்பித்து விட்டார்கள். பாவம்! அந்தப் பரம சாது மதுராந்தகனையும் தங்கள் வலையில் போட்டுக் கொண்டார்கள். சோழ நாட்டுச் சிற்றரசர்களையும் பெருந்தரத்து அதிகாரிகள் பலரையும் தங்கள் வசப்படுத்திக் கொண்டார்கள். எந்த நேரத்தில் என்ன நடக்குமோ, தெரியாது. இவர்களுடைய சூழ்ச்சியும் வஞ்சனையும் துராசையும் எந்த வகையில் போகும் என்று யார் கண்டது? சுந்தர சோழரின் உயிருக்கு உலை வைத்தாலும் வைத்து விடுவார்கள்! மாட்டார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? சக்கரவர்த்தியின் புதல்வர்கள் இருவரும் இல்லாத சமயத்தில் அவருக்கு ஏதாவது நேர்ந்து விட்டால், மதுராந்தகனைச் சிம்மாசனத்தில் ஏற்றி வைத்து விடுவது எளிதாயிருக்கும் அல்லவா? இதற்காக என்ன செய்தாலும் செய்வார்கள்! அவர்களுக்கு யோசனை தெரியாவிட்டாலும் அந்த ராட்சஸி நந்தினி சொல்லிக் கொடுப்பாள். அவர்கள் தயங்கினாலும் இவள் துணிவூட்டுவாள். ஆகையால் தஞ்சாவூரில் நம் தந்தையின் அருகில் நாம் இனி இருப்பதே நல்லது. சூழ்ச்சியும் சதியும் எந்த வரைக்கும் போகின்றன என்று கவனித்துக் கொண்டு வரலாம். அத்தோடு நம் அருமைத்



தந்தைக்கும் ஆபத்து ஒன்றும் வராமல் பார்த்துக் கொள்ளலாம்.

சாதுவாகிய மதுராந்தகனை ஏன் இவர்கள் சிம்மாசனத்தில் ஏற்றப் பார்க்கிறார்கள்? தர்ம நியாய முறைக்காகவா? இல்லவே இல்லை! மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டினால் அவனைப் பொம்மையாக வைத்துக் கொண்டு தங்கள் இஷ்டம் போல் எல்லாக் காரியங்களையும் நடத்திக் கொள்ளலாம் என்பதற்காகத் தான். அப்புறம் நந்தினி வைத்தது தான் சோழ சாம்ராஜ்யத்தில் சட்டமாகி விடும்! அவளுடைய அதிகாரத்துக்குப் பயந்துதான் மற்றவர்கள் வாழ வேண்டும். அவளிடம் மற்ற அரண்மனை மாதர் கைகட்டி நிற்க வேண்டும். சீச்சீ! அத்தகைய நிலைமைக்கு இடங் கொடுக்க முடியுமா? நான் ஒருத்தி இருக்கும் வரையில் அது நடவாது. பார்க்கலாம் அவளுடைய சாமர்த்தியத்தை!

தஞ்சாவூரில் இருப்பது தனக்குப் பலவகையிலும் சிரமமாகவே இருக்கும். தாயும் தந்தையும் "இங்கு எதற்காக வந்தாய்? பழையாறையில் சுகமாக இருப்பதை விட்டு!" என்று கேட்பார்கள். சுயேச்சை என்பதே இல்லாமற் போய்விடும். தன்னுடைய திருமணத்தைப் பற்றிய பேச்சை யாரேனும் எடுப்பார்கள். அதைக் கேட்கவே தனக்குப் பிடிக்காது. நந்தினியைச் சில சமயம் பார்க்கும் படியாக இருக்கும். அவளுடைய அதிகாரச் செருக்கைத் தன்னால் சகிக்க முடியாது. ஆனால் இதையெல்லாம் இந்தச் சமயத்தில் பார்த்தால் சரிப்படுமா? இராஜ்யத்துக்குப் பேரபாயம் வந்திருக்கிறது; தந்தையின் உயிருக்கு அபாயம் நேரலாம் என்ற பயமும் இருக்கிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நாம் இருக்கவேண்டிய இடம் தஞ்சையே அல்லவா?

இவ்வளவையும் தவிர, வேறொரு முக்கிய காரணமும் இருந்தது. அது வந்தியத் தேவனைப் பற்றி ஏதேனும் செய்தி உண்டா என்று தெரிந்து கொள்ளும் ஆசைதான். வந்தியத் தேவன் கோடிக்கரைப் பக்கம் போயிருக்கிறான் என்று தெரிந்து அவனைப் பிடித்து வரப் பழுவேட்டரையர்கள் ஆட்கள் அனுப்பி யிருப்பதைப் பற்றி இளையபிராட்டி கேள்விப்பட்டாள். புத்தி யுக்திகளில் தேர்ந்த அந்த இளைஞன் இவர்களிடம் அகப்பட்டுக் கொள்வானா? ஒரு வேளை அகப்பட்டால் தஞ்சாவூருக்குத்தான் கொண்டு வருவார்கள். அச்சமயம் நாம் அங்கே இருப்பது மிகவும் அவசிய மல்லவா? ஆதித்த கரிகாலன் அனுப்பிய தூதனை அவர்கள் அவ்வளவு எளிதில் ஒன்றும் செய்துவிட முடியாது. ஏதாவது குற்றம் சாட்டித்தான் தண்டிக்க வேண்டும். அதற்காகவே சம்புவரையர் மகனை முதுகில் குத்திக் கொல்ல முயன்றதாகக் குற்றம் சாட்டி யிருக்கிறார்கள். அது பொய் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அது பொய் என்பதை நிரூபிக்க வேண்டும். கந்தமாறனுடன் பேசி, அவனுடைய வாய்ப் பொறுப்பை அறிந்து கொள்வது அதற்கு உபயோகமா யிருக்கலாம்......

இவ்வித மெல்லாம் குந்தவையின் உள்ளம் பெரிய பெரிய சூழ்ச்சிகளிலும் சிக்கலான விவகாரங்களிலும் சஞ்சரித்துக் குழம்பிக் கொண்டிருக்கையில், அவளுடன் யானைமீது வந்த அவள் தோழி வானதியின் உள்ளம் பால் போன்ற தூய்மையுடனும் பளிங்கு போன்ற தெளிவுடனும் ஒரே விஷயத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது. அந்த ஒரு விஷயம் இளவரசர் அருள்மொழி வர்மர் எப்போது இலங்கையிலிருந்து திரும்பி வருவார் என்பது பற்றித்தான்.

"அக்கா! அவரை உடனே புறப்பட்டு வரும்படி ஓலை அனுப்பி யிருப்பதாகச் சொன்னீர்கள் அல்லவா? வந்தால் எவ்விடம் வருவார்? பழையாறைக்கா? தஞ்சாவூருக்கா?" என்று வானதி கேட்டாள்.

தஞ்சாவூருக்கு இவர்கள் போயிருக்கும்போது இளவரசர் பழையாறைக்கு வந்து விட்டால் என்ன செய்கிறது என்பது வானதியின் கவலை.

வேறு யோசனைகளில் ஆழ்ந்திருந்த குந்தவைப் பிராட்டி வானதியைத் திரும்பிப் பார்த்து, "யாரைப் பற்றியடி கேட்கிறாய்? பொன்னியின் செல்வனைப் பற்றியா?" என்றாள்.

"ஆமாம், அக்கா! அவரைப் பற்றித்தான். இளவரசரைப் 'பொன்னியின் செல்வன்' என்று நாலைந்து தடவை தாங்கள் குறிப்பிட்டு விட்டீர்கள். அதற்குக் காரணம் சொல்லவில்லை. பிற்பாடு சொல்வதாகத் தட்டிக் கழித்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இப்போதாவது சொல்லுங்களேன். தஞ்சாவூர்க் கோட்டை இன்னும் வெகு தூரத்தில் இருக்கிறது. இந்த யானையோ ஆமை நகர்வதுபோல் நகர்கிறது!" என்றாள் வானதி.

"இதற்கு மேல் யானை வேகமாய்ப் போனால் நம்மால் இதன் முதுகில் இருக்க முடியாது. அம்பாரியோடு நாமும் கீழே விழ வேண்டியதுதான்! அடியே! தக்கோலப் போரில் என்ன நடந்தது என்று உனக்குத் தெரியுமா?"

"அக்கா! 'பொன்னியின் செல்வன்' என்னும் பெயர் எப்படி வந்தது என்று சொல்லுங்கள்!"

"அடி கள்ளி! நீ அதை மறக்க மாட்டாய் போலிருக்கிறது. சொல்கிறேன், கேள்!" என்று குந்தவைப் பிராட்டி சொல்லத் தொடங்கினாள்.

*　　　*　　　*

சுந்தர சோழ சக்கரவர்த்தி பட்டத்துக்கு வந்த புதிதில் அவருடைய குடும்ப வாழ்க்கை ஆனந்த மயமாக இருந்தது. அரண்மனைப் படகில் குடும்பத்துடன் அமர்ந்து சக்கரவர்த்தி பொன்னி நதியில் உல்லாசமாக உலாவி வருவார். அத்தகைய சமயங்களில் படகில் ஒரே குதூகலமாயிருக்கும். வீணா கானமும் பாணர்களின் கீதமும் கலந்து காவேரி வெள்ளத்தோடு போட்டியிட்டுக் கொண்டு பெருகும். இடையிடையே யாரேனும் ஏதேனும் வேடிக்கை செய்வார்கள். உடனே கலகல வென்று சிரிப்பின் ஒலி கிளம்பிக் காவேரிப் பிரவாகத்தின் சலசலப்பு ஒலியுடன் ஒன்றாகும்.

சில சமயம் பெரியவர்கள் தங்களுக்குள் பேசி மகிழ்வார்கள். படகில் ஒரு பக்கத்தில் குழந்தைகள் கும்மாளம் அடித்துக் கொண்டிருப்பார்கள். சில சமயம் எல்லோருமாகச் சேர்ந்து வேடிக்கை விநோதங்களில் ஈடுபட்டுத் தங்களை மறந்து களிப்பார்கள்.

ஒரு நாள் அரண்மனைப் படகில் சக்கரவர்த்தியும் ராணிகளும் குழந்தைகளும் உட்கார்ந்து காவேரியில் உல்லாசப் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது, திடீரென்று, "குழந்தை எங்கே? குழந்தை அருள்மொழி எங்கே?" என்று ஒரு குரல் எழுந்தது. இந்தக் குரல் குந்தவையின் குரல்தான். அருள்மொழிக்கு அப்போது வயது ஐந்து. குந்தவைக்கு வயது ஏழு. அரண்மனையில் அனைவருக்கும் கண்ணினும் இனிய செல்லக் குழந்தை அருள்மொழி. ஆனால் எல்லாரிலும் அவனிடம் வாஞ்சை உடையவள் அவனுடைய தமக்கை குந்தவை. படகில் குழந்தையைக் காணோம் என்பதைக் குந்தவைதான் முதலில் கவனித்தாள். உடனே மேற் கண்டவாறு கூச்சலிட்டாள். எல்லாரும் கதிகலங்கிப் போனார்கள். படகில் அங்கு மிங்கும் தேடினார்கள். ஆனால் அரண்மனைப் படகில் அதிகமாகத் தேடுவதற்கு இடம் எங்கே? சுற்றிச் சுற்றித் தேடியும் குழந்தையைக் காணவில்லை. குந்தவையும் ஆதித்தனும் அலறினார்கள். ராணிகள் புலம்பினார்கள். தோழிமார்கள் அரற்றினார்கள். படகோட்டிகளில் சிலர் காவேரி வெள்ளத்தில் குதித்துத் தேடினார்கள். சுந்தர சோழரும் அவ்வாறே குதித்துத் தேடலுற்றார். ஆனால் எங்கே என்று தேடுவது? ஆற்று வெள்ளம் குழந்தையை எவ்வளவு தூரம் அடித்துக் கொண்டு போயிருக்கும் என்று யார் கண்டது? குழந்தை எப்போது வெள்ளத்தில் விழுந்தது என்பதுதான் யாருக்குத் தெரியும்? நேரக்கம், குறி என்பது ஒன்றுமில்லாமல் காவேரியில் குதித்தவர்கள் நாலாபுறமும் பாய்ந்து துளாவினார்கள். குழந்தை அகப்படவில்லை. இதற்குள் படகில் இருந்த இராணிகள் - தோழிமார்களில் சிலர் மூர்ச்சை போட்டு விழுந்து விட்டார்கள். அவர்களைக் கவனிப்பார் இல்லை. உணர்ச்சியோடு இருந்த மற்றவர்கள் 'ஐயோ!' என்று அழுது புலம்பிய சோகக் குரல் காவேரி நதியின் ஓங்காரக் குரலை அடக்கிக் கொண்டு மேலெழுந்தது. நதிக்கரை மரங்களில் வசித்த பறவைகள் அதைக் கேட்டுத் திகைத்து மோனத்தில் ஆழ்ந்தன.

சட்டென்று ஓர் அற்புதக் காட்சி தென்பட்டது. படகுக்குச் சற்றுத் தூரத்தில் ஆற்று வெள்ளத்தின் மத்தியில் அது தெரிந்தது. பெண் உருவம் ஒன்று இரண்டு கைகளிலும் குழந்தையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு நின்றது. அந்த மங்கையின் வடிவம் இடுப்பு வரையில் தண்ணீரில் மறைந்திருந்தது. அப் பெண்ணின் பொன் முகமும் மார்பகமும் தூக்கிய கரங்களும் மட்டுமே மேலே தெரிந்தன. அவற்றிலும் பெரும் பகுதியைக் குழந்தை மறைத்துக் கொண்டிருந்தது. எல்லாரையும் போல் சுந்தர சோழரும் அந்தக் காட்சியைப் பார்த்தார். உடனே பாய்ந்து நீந்தி அந்தத் திசையை நோக்கிச் சென்றார். கைகளை நீட்டிக் குழந்தையை வாங்கிக் கொண்டார். இதற்குள் படகும் அவர் அருகில் சென்று விட்டது. படகிலிருந்தவர்கள் குழந்தையைச் சுந்தர சோழரிடமிருந்து வாங்கிக் கொண்டார்கள். சக்கரவர்த்தியையும் கையைப் பிடித்து ஏற்றி விட்டார்கள். சக்கரவர்த்தி படகில் ஏறியதும் களைவற்று விழுந்து விட்டார். அவரையும் குழந்தையையும் கவனிப்பதில் அனைவரும் ஈடுபட்டார்கள். குழந்தையைக் காப்பாற்றிக் கொடுத்த மாதரசி என்ன வானாள் என்று யாரும் கவனிக்கவில்லை. அவளுடைய உருவம் இப்படியிருந்தது என்று அடையாளம் சொல்லும்படி யாரும் கவனித்துப் பார்க்கவும் இல்லை. "குழந்தையைக் காப்பாற்றியவள் நான்!" என்று பரிசு கேட்பதற்கு அவள் வரவும் இல்லை. ஆகவே, காவேரி நதியாகிய தெய்வந்தான் இளவரசர் அருள்மொழி வர்மரைக் காப்பாற்றிக் கொடுத்திருக்க வேண்டும் என்று அனைவரும் ஒரு முகமாக முடிவு கட்டினார்கள். ஆண்டு தோறும் அந்த நாளில் பொன்னி நதிக்குப் பூஜை போடவும் ஏற்பாடாயிற்று. அதுவரையில் அரண்மனைச் செல்வனாயிருந்த அருள்மொழி வர்மன் அன்று முதல் 'பொன்னியின் செல்வன்' ஆனான். அச் சம்பவத்தை அறிந்த அரச குடும்பத்தார் அனைவரும் பெரும்பாலும் 'பொன்னியின் செல்வன்' என்றே அருள்மொழி வர்மனை அழைத்து வந்தார்கள். (தொடரும்)

கைகண்ட பலன்

வி. எஸ். வி.

மாமா:—எங்கேடா, இந்தப் படை பதைக்கிற வெய்யிலில் புறப்பட்டு விட்டாய்?

ரீமா:—வெய்யில் தகிக்கிறதோ, இல்லையோ! 'ஐஸ்' கவர் சாப்பிடலாம் என்று கிளம்பினேன். வரும் வழியில் அப்படியே உங்களையும் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்.

மாமா:—சோழியன் குடுமி சும்மா ஆடாது. ஏதாவது சமாசாரம் இல்லாமல் நீ வர மாட்டாய்.

ரீமா:—ஆமாம், வந்து......இந்த ஏகாதசி சாஸ்திரிகள் இருக்கிறாரே......

மாமா:—ஏகாதசி சாஸ்திரிகளா? யார் அது? நூதனமான பெயராக இருக்கிறதே!

ரீமா:—ஏ. கா. த. சீனிவாச சாஸ்திரிகளைத் தெரியாதா, மாமா? நாங்கள் அவருடைய பெயரைக் குறுக்கி ஏகாதசி சாஸ்திரிகள் என்று வைத்திருக்கிறோம்.

மாமா:—அப்படியா? அவருக்கு இப்பொழுது என்ன வந்தது?

ரீமா:—அவருக்கு ஒன்றுமில்லை. ஒரு வருஷத்துக்கு முன்னால் அவர்......

மாமா:—சொல்லுவதைச் சீக்கிரம் சொல்லேன். எதற்குச் சுற்றி வளைத்துக் கொண்டு பேசுகிறாய்?

ரீமா:—சொல்லத்தானே இந்தத் தகிக்கிற வெய்யிலையும் பொருட்படுத்தாமல் வந்திருக்கிறேன்! நீங்கள் இப்படி அடிக்கடி குறுக்கிட்டால் நான் எப்படிச் சொல்லுவது?

மாமா:—சரி, நான் குறுக்கிடவில்லை. நடந்ததைச் சொல்லு!

ரீமா:—அந்த சாஸ்திரிகளுக்கு ஒரு சமயம் ராமேசுவரம் போக வேண்டும் என்று தோன்றியது. உடனே சம்சார ஸஹிதம் புறப்பட்டு விட்டார்.

மாமா:—ராமேசுவரம் போவது நல்லது தானே? போகிற இடத்துக்குப் புண்ணியமாவது உண்டல்லவா?

ரீமா:—யாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பி வந்த சாஸ்திரிகள் என்ன செய்தார், தெரியுமா?

மாமா:—சமாராதனை செய்திருப்பார்!

ரீமா:—அதைச் சொல்லவில்லை, மாமா! வந்தவர் சும்மா இருக்கக் கூடாதா?

மாமா:—என்னடா செய்து விட்டார்? அப்படியொன்றும் அவர் தப்புத் தண்டாக் காரியங்களுக்குப் போகிறவர் இல்லையே!

ரீமா:—நான் தப்புத்தண்டா வென்று எங்கே சொன்னேன்? சொல்லுவதற்குள் அவசரப்பட்டால்......? ராமேசுவரம் போய் வந்ததோடு மட்டும் அல்ல; ராமாயணத்தில் சுந்தர காண்ட பாராயணமும் செய்யத் தொடங்கி விட்டார்!

மாமா:—ராமேசுவர யாத்திரை போவதும் ராமாயண பாராயணம் செய்வதும் நல்லதுதானே?


ரீமா:—அதை யார் கெடுதல் என்று சொன்னார்கள்? ராமேசுவர யாத்திரை போய் வந்து சுந்தர காண்ட பாராயணம் செய்தால் பலன் இல்லாமலா போகும்?

மாமா:—நல்ல பலன் ஏற்பட்டால் நல்லது தானே? என்ன பலன் ஏற்பட்டது?



பிரபல திருமணம்

சென்னை ஆன்தான தமிழ்க் கவிஞர் திரு வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்களின் குமாரி திருமதி ராஜலக்ஷ்மிக்கும், கோவை அரசியலார்க் கல்லூரி சரித்திர விரிவுரையாளர் திரு கே. ஆர். அநுமந்தன் எம். ஏ., அவர்களுக்கும் சென்ற 8—6—51 அன்று நாமக்கல்லில் "கவிஞர் இல்ல"த்தில் திருமணம் வெகு சிறப்பாக நடந்தேறியது. வாழ்க மணமக்கள்!



அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினரும், சென்னை சட்டசபை அங்கத்தினருமான ஸ்ரீ ஆர். வி. சுவாமிநாதன் அவர்களின் குமாரி ஸ்ரீமதி இந்திராவுக்கும், ஸ்ரீ ஏ. இ. ஆர். எம். முத்தையா அம்பலம் அவர்களின் குமாரர் ஸ்ரீ எம். ராமனுதன் அவர்களுக்கும் சென்ற 7—6—51-ல் பாகனேரியில் விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த மணமகள் ஸ்ரீமதி இந்திரா அந்தச் சமூகத்திலேயே முதன் முதலாக கல்லூரிப் படிப்புப் பெற்று 'இண்டர்' பரீட்சையில் முதல் வகுப்பிலும் தேறியிருக்கிறார்.

மேற்படி திருமணத்துக்குக் கனம் பக்தவத்ஸலம், கனம் பெருமாள்சாமி செட்டியார், ஸ்ரீ காமராஜ் நாடார் முதலிய பிரமுகர்களும் இன்னும் நண்பர்களும் உறவினர்களும் திரளாக விஜயம் செய்து தம்பதிகளை ஆசீர்வதித்துச் சிறப்பித்தனர். ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத், ஜவாஹர்லால் நேரு, ராஜாஜி முதலிய அகில இந்தியத் தலைவர்களிடமிருந்தும் சென்னை மந்திரிகள் முதலிய பிரமுகர்களிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

சீமா :—இரண்டு மாசத்துக்கு முன்னால் ஒருநாள் நான் அவர் வீட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்தேன். வெய்யில் காலமா? நாக்கு வறண்டு விட்டது. தண்ணீர் சாப்பிடலாம் என்று அவர் வீட்டுக்குள் நுழைந்தேன்.

மாமா :—அட, வறட்சி! எப்பொழுது பார்த்தாலும் உனக்கு வறட்சிதானா?

சீமா :—கேளுங்கள் மாமா என்றால்......? நான் போனபொழுது ஏகாதசி சாஸ்திரிகள் படுத்துக் கொண்டிருந்தார். சாஸ்திரிகளைக் குசலம் விசாரித்து விட்டுத் தாகத்துக்குத் தீர்த்தம் கேட்டேன். சாஸ்திரிகளே எழுந்துபோய் மோர் தீர்த்தம் கொண்டு வந்து கொடுத்தார். 'சாஸ்திரிகளே, மாமி ஊரில் இல்லையோ?' என்று கேட்டேன். அப்பொழுது அடுத்த அறையிலிருந்து யாரோ முனகும் சத்தம் கேட்டது. சாஸ்திரிகள் நான் சொல்வதைக் கவனிக்காமல், 'அட சீமா, ஒரு உபகாரம் செய்கிறாயா? உனக்குப் புண்ணியம் உண்டு. நல்ல பெண்ணாகப் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்கிறேன்' என்றார். 'சொல்லுங்கள், மாமா! எது வேண்டுமானாலும் செய்கிறேன். ஆனால் இதற்காகக் கல்யாணம் செய்து வைக்கிறேன் என்று ஒவ்வொருவரும் ஆரம்பித்து விட்டால் நான் எத்தனை பெண்களைத்தான் கல்யாணம் செய்து கொள்வது? அவ்வளவு பெண்களையும் கல்யாணம் செய்து கொண்டு நிர்வாகம் செய்ய எனக்குச் சக்தி வேண்டாமா?' என்றேன்.

மாமா :—ஐயோ, பாவம்! வீட்டிலே அவர் மனைவிக்கு உடம்பு சரியில்லையோ, என்னவோ? வைத்தியரை அழைத்து வரச் சொல்லியிருப்பார். அப்படித்தானே?

சீமா :—இல்லை. மருத்துவச்சியை அழைத்துக் கொண்டு வரச் சொன்னார். 'சாஸ்திரிகளுக்குப் பெண்களே கிடையாதே! யார் பிரசவத்துக்கு வந்திருப்பார்கள்?' என்று மூளையைக் குழப்பிக் கொண்டே போய் மருத்துவச்சியை அழைத்து வந்தேன். அடுத்த ஐந்து நிமிஷத்துக்கெல்லாம்

குழந்தை அழும் சத்தம் கேட்டது. 'தாத்தா, உங்களுக்குப் பெண் பிறந்திருக்கிறது!' என்றாள் மருத்துவச்சி. எனக்கு அப்பொழுது என்னமாயிருந்தது என்கிறீர்கள்?

மாமா:—ஏன்? சாஸ்திரிகள் தன் பெண் பெரியவளாகிற வரை உன்னைக் காத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று சொல்லி விடுவார் என்று பயந்தாயோ?

[illegible]:—போங்கோ, மாமா! என்ன பரிகாசம் வேண்டிக் கிடக்கிறது! சாஸ்திரிகள் பெண் பிறந்த சந்தோஷத்தில் சர்க்கரைக்குப் பதிலாகக் கொடுத்த கடலை உருண்டை என்னமாயிருந்தது, தெரியுமா? அதுமாதிரி இதுவரை நான் சாப்பிட்டதே கிடையாது. அதற்குச் சொல்ல வந்தேன் என்றால்......

மாமா:—எனக்குக் கூடக் கடலை உருண்டை என்றால் உயிர். எங்கள் சுந்தாப் பாட்டி செய்வாளும்; சாப்பிடணும். எல்லோரும் செய்கிறார்களே, களிமண், கல் குண்டு மாதிரி!

[illegible]:—கேளுங்கோ, மாமா, மீதிக் கதையையும்!

மாமா:—வேறு என்னடா சொல்லக் கிடக்கிறது?

[illegible]:—இருக்கிறது, மாமா! இப்பொழுது தான் பத்து நாளைக்கு முன் அவரைப் பார்த்தேன். 'சாஸ்திரிகளே! ராமேசுவர யாத்திரை ஆயிற்று. காசிக்கு எப்போது?' என்றேன். 'போகவேண்டியதுதான்!' என்று இழுத்தார். 'என்னவோ இழுக்கிறீர்களே, சொல்லுங்கள்!' என்று உற்சாகப் படுத்தினேன். அவர் சொன்ன பதில் மிகவும் விந்தையாக இருந்தது!

மாமா:—என்னடா சொன்னார்?

[illegible]:—காசி யாத்திரைக்குக் கிளம்பினால் யாராவது பெண்ணைக் கொடுத்துக் கல்யாணம் செய்து கொள் என்று நிர்ப்பந்தம் செய்தால் என்ன செய்வது என்று பயமாயிருக்கிறதாம். எப்படியிருக்கிறது ஏகாதசி சாஸ்திரிகளின் ஆசை?

மாமா:—போடா, போக்கிரி! உனக்கு யாரையாவது 'கோட்டா' செய்து கொண்டே இருக்க வேண்டும். வேறு வேலை கிடையாது.

[illegible]:—மாமா, தாகமாயிருக்கிறது. கொஞ்சம் தீர்த்தம் கொடுக்கிறீர்களா?


மாமா:—இரு. இதோ நானே போய் மோர் கொண்டு வந்து தருகிறேன்.


[illegible]:—ஏன் மாமா! நீங்கள் எதற்காகப் போகணும்? மாமி இல்லையோ?

மாமா:—டேய்! தெரியுமடா, உன் கிரிசமம்! என்னையும் கோட்டா பண்ண ஆரம்பித்து விட்டாயா? இரு, இரு! உனக்கு ஒரு பெண்ணைப் பெற்றுக் கொடுத்து விட்டு மறு காரியம் பார்க்கிறேன். ஆனால் ஒன்று. நான் சாஸ்திரிகளைப் போல ராமேசுவரமும் போகப் போவதில்லை; சுந்தர காண்டமும் பாராயணம் பண்ணப் போவதில்லை.

[illegible]:—அது சரி, ஆனால் நீங்கள் பெண்ணைப் பெற்றுத் தருவதற்குள் நானே தாத்தாவாகி விடுவேனே, மாமா!

அட, நீதானா!





ரேடியோக்களின் பொக்கிஷமான டெஸ்லாவிலிருந்தும்
வெளியாகும்
ஸிம்போனி
அற்புதமாகவும், நம்பகமாகவும்
வெளியிடப்படும் உயர்தர ரிஸீவர்
மாடல்களில் நான்காவது
டெஸ்லா
ஸிம்போனி
இப்போது நீங்கள் இந்த இணையற்ற 4 மாடல்களில் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.....அதன் விலைக்குமிகச் சிறந்தது!
ANY TIME — ANYWHERE WITH TESLA
டெஸ்லா (இந்தியா) ரேடியோ மானுபாக்சரிங் கோ., லிட்.
11/13, பம்பாய்-1

ஆட்டக்காரன்

நீதிபதி, ஜி. டி. கோசலா

மொழிபெயர்ப்பு, எஸ். வி. எஸ்

பரிசுக் கதை 4





மூலக் கதை : ஆங்கிலம்

விருந்து முடிந்தது. ஓட்டப் பந்தயத்தில் பெயர் வாங்கிய சம்மர்ஹேஸ் சொல்ல ஆரம்பித்தான்:

"ஆமாம், முதல் மைல் ஓடி முடிந்ததுமே எனக்குக் களைப்பு உண்டாகி விட்டது. ஆனாலும் இரண்டு பேருக்கு முன்னால் நான் ஓடிக் கொண்டிருக்கிறேன் என்ற விஷயம் எனக்கு மிக்க உற்சாக மூட்டியது. உங்கள் சக்தியெல்லாம் செலவழித்து ஒரு காரியத்தில் ஈடுபடுகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தக் காரியத்தில் வெற்றி கண்டவுடன் முதலிலிருந்த சக்தியும் உற்சாகமும் மறுபடியும் அந்தக் களைத்த நிலையிலும் தோன்றி விடுகிறது; தோற்றுவிட்டாலோ இருக்கிற சக்தியும் உற்சாகமும் போய் விடுகிறது. இது உங்களுக்கே தெரியும். ஆகவே நான் மூன்று மைல் ஓட்டப் பந்தயத்தில் ஓடத் தொடங்கியபோது; ஏதோ மூச்சைப் பிடித்துக் கொண்டு ஒரு மாதிரி ஓடித் தீர்க்கலாம் என்றுதான் நினைத்தேன். ஜெயிப்பேன் என்று கனவிலும் நினைக்கவில்லை. அதுவும் ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையினரை ஜெயிப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியமா, என்ன? முதல் மைல் ஓடுவதற்குள் போதும் போது மென்றாகி விட்டது. சாக வேதனையாகி விட்டது. இருந்தாலும் உயிரைப் பிடித்துக் கொண்டு ஓடினேன். பிறகு, முன்பு பலதடவை சொல்லிக் கொண்டாற் போல் இந்தத் தடவையும் சொல்லிக் கொண்டேன்: 'இம்முறை ஓட்டப் பந்தயத்தில் ஜெயித்தாக வேண்டும். இல்லையேல் அந்த ஐம்பது பவுன்களும் சாக்கடையில் கொட்டினாற் போல் தான்......' என்று."

"என்ன? ஐம்பது பவுனா? இவ்வளவு பெரிய தொகையா பந்தயம் வைத்து விளையாடுவார்கள்? அதுவும் உன்மேலேயே இவ்வளவு பெரிய தொகை பணயம் வைக்கலாமா? ரொம்பவும் துணிச்சலான காரியந்தான்" என்றார் அங்கிருந்த நண்பர்களில் ஒருவர்.

சம்மர்ஹேஸ் சிரித்துக் கொண்டே, "ஐம்பது பவுன் ஒன்றும் பந்தயம் வைக்கவில்லை. கொஞ்ச நாட்களுக்கு முன்பு ஒரு வியாபாரத்தில் மூலதனம் போட்டாற் போலாகும்!" என்று கூறிவிட்டு முழங்கைகளை மேஜையின் மீது ஊன்றிக்கொண்டு மேலும் தொடர்ந்து சொன்னான்.

"அது ஒரு நீண்ட கதை. என்றாலும், அதைக் கேட்கவேண்டும் என்று நீங்கள் விரும்பியதால் சொல்லுகிறேன்" என்று கூறிவிட்டு வாயில் சுருட்டு வைத்துப் புகையை உறிஞ்சி இழுத்தான். பிறகு தலையை அண்ணாந்து புகையை வெளியே ஊதிவிட்டு அந்தப் புகை சுருள் சுருளாக மேலே செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்தான் ஒருகணம். அதற்குள் அவனைச் சூழ்ந்திருந்த நண்பர்கள் கதை சொல்லும்படி உற்சாகப்படுத்தவே தொடர்ந்தான்.

"முதலில் ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டும். சென்ற இரண்டு வருஷத்துக்கு முன்பு வரை நான் ஒரு ஆட்டக்காரன் ஆவேன் என்பதற்கான அறிகுறிகள் என்னிடம் இருக்கவில்லை.

"பள்ளிக்கூட நாட்களில் ஏதோ விளையாடியிருக்கிறேன் என்பது வாஸ்தவம்தான். ஆமாம்! கிரிக்கெட் மைதானத்தில் பைத்தியக்காரனைப் போல் திரிந்தேன். இதற்குக் காரணம் அந்த மாதிரி விளையாட்டுக்களில் எனக்கிருந்த ஆசையல்ல; பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவன் விளையாட வேண்டும் என்று ஒரு நிர்ப்பந்தம் இருந்ததல்லவா? அதற்கு ஏதாகிலும் ஒரு விளையாட்டு விளையாட வேண்டுமல்லவா? என் தந்தை என்னை அரசியலில் நுழைத்து மேல்நாடுகளுக்குத் தூதராக அனுப்பவேண்டுமென்று விரும்பினார். அதற்காக, நான் வேறுநாட்டு மொழிகளைக் கற்க வேண்டுமென்று, என்னைக் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைக்கு அனுப்பினார். நான் பிரெஞ்சு


இக்கதையின் ஆசிரியர்: ஸ்ரீ ஜி. டி. கோசலா

மொழியும், ஸ்பானிஷ் மொழியும் பயின்றேன். நான் இந்த இரு மொழிகளையும் சீக்கிரமாகவே பயின்றேன். நல்ல பயிற்சியும் அடிப்படை ஞானமும் ஏற்பட்டது. ஆனால் எனக்கு இன்னும் ஆசை அதிகரித்தது. அந்த மொழிகளைப் பேசப்படும் பிரதேசங்களில் வாழ்பவர்களைப் போலவே பேசவேண்டும் என்று விரும்பினேன். ஆகவே, நான் கல்லூரி விடுமுறை நாட்களை மேல் நாடுகளில் கழித்து, புஸ்தகங்கள் மூலம் பெற்ற அறிவை மேலும் அதிகரித்துக் கொள்ள பெரிதும் விரும்பினேன்.


"முதல் வருஷ விடுமுறைக்குப் பாரிஸ் நகரத்துக்குப் போய் என் காரியத்தில் தீவிரமாக இறங்கினேன். ஒரு பாஷை நன்றாகப் பேச வரவேண்டுமென்றால் நாம் அந்தச் சூழ்நிலையில் வசிக்க வேண்டும்; அவர்கள் படிப்பதை நாமும் படிக்கவேண்டும்; அவர்கள் நினைப்பதை நாமும் நினைக்க வேண்டும்; அவர்கள் செய்வதை நாமும் செய்யவேண்டும் என்று தீர்மானித்து அதன்படியே நடந்தேன். பாரிஸ் நகரத்தில் பல நாடகங்களைப் பார்த்தேன்; மார்ஸெயில்ஸ் நகரத்துக்குச் சென்றேன்; பூஞ்சோலைகளில் உலாவினேன். பெரிய ஹோட்டல்களில் மணிக்கணக்காக உட்கார்ந்து பொழுதைப் போக்கினேன்.

"ஒரு நாள் மாலை நான் ஒரு ஹோட்டலில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது கறுத்த இமைகளும் சிவந்த இதழ்களும் கொண்ட இளமங்கை நான் உட்கார்ந்திருந்த மேஜையின் முன் உட்கார்ந்து தனக்கும் ஏதாவது வாங்கித் தரச் சொன்னாள். எனக்கு முதலில் தோன்றிய உணர்ச்சி இதுதான்—நாம் ஏன் எழுந்திருந்து போய்விடக் கூடாது? ஆனால் அவளுடைய அழகிய கண் இமைகளில் அழகிய கண்ணீர்த் துளி ஒன்று உருண்டு திரண்டு நிற்பதைக் கண்டதும் என் மனசு இளகிவிட்டது. என் மணிபர்ஸை எடுத்து அதிலிருந்து ஐந்து பிராங்க் நோட்டு ஒன்றை எடுத்துக் கொடுத்தேன். எனக்கு வேண்டிய அளவு நன்றி செலுத்திப் பின் தன் கதையைச் சொல்லத் தொடங்கினாள். அவள் வெகு வேகமாகப்

பிரெஞ்சு மொழியில் பேசினாள். என்னால் அவை பேசிய எல்லாவற்றையும் தொடர்ந்து புரிந்து கொள்ள முடியவில்லை.

"ஆனால் பொதுவாக இன்னதுதான் சொல்கிறாள் என்று புரிந்து கொண்டேன். அவளுக்கு ஒரு கொடிய கணவன் இருக்கிறான் என்பதும், அவன் இவளை அடிக்கிறான் என்பதும், அடிக்கடி அவளை விட்டு விட்டு வேறு பெண்களுடன் போய் விடுகிறான் என்பதுதான் அவள் பேசியவற்றின் சாராம்சம். ஆனால் அவள் கூறியவற்றை நான் நம்பவில்லை என்பது என்னவோ உண்மைதான். ஆம், அவள் ஏமாற்றுக்காரி என்பது எனக்கும் தெரியும். ஆயினும் அவளுடன் வார்த்தையாடிக் கொண்டிருப்பதில் என்ன தவறு என்று எண்ணப் பேசிக் கொண்டிருந்தேன். மேலும் அவள் ஒரு இள வயது மங்கை. அழகாகவும் இருந்தாள். கூடவே, என் பிரஞ்சு மொழிப் பாடமும் கற்றுக் கொண்டாற் போல் ஆகிறதல்லவா? அதனால் நான் கேட்டுக் கொண்டிருந்தேன்.

"அவள் தன்னுடைய குடும்பச் சரித்திரத்தைக் கூறினாள்! தன்னுடைய கணவனைப் பற்றிய எல்லா விவரங்களையும் கூறினாள். அவன் ஒரு பெரிய கடையில் சாமான்களை விலை கூறி விற்கும் விற்பனையாளாக வேலை செய்து வந்தான். வேலை நேரம் போக மற்ற நேரங்களில் ஒரு சின்னஞ்சிறு தெருவில் ஒரு சிறிய வீட்டில் வசித்து வந்தான். அவள் என்னைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போவதாகக் கூறினாள். அந்த அழகிய அறை உங்களுக்கு ரொம்பப் பிடிக்கும் என்று வேறு சொன்னாள். மேலும் நான் அவளிடம் ரொம்பவும் பெருந்தன்மையுடனும் அனுதாபத்துடனும் நடந்து கொள்ளுவதாகக் கூறினாள். இவ்வளவும் வெறும் நடிப்பு என்று அவள் பேசிக் கொண்டிருந்த அத்தனை நேரமும் என் அந்தராத்மா சொல்லிக் கொண்டுதான் இருந்தது. இருந்தாலும், அவள் அழைத்துப் போவதாகச் சொன்னதும், 'வருகிறேன்' என்று சம்மதித்து என்னை அவளுடன் கூடப்



போகச் செய்தது எது என்பது தான் எனக்கும் விளங்கவில்லை" என்று கூறினான்.

இவ்விதம் கூறிவிட்டுக் கையிலிருந்த சிகரெட் துண்டை எறிந்து விட்டு, வேறு சிகரெட்டை எடுத்துக் கட்டை விரல் நகத்தில் தட்டினான் சம்மர்ஹேஸ்.

அதற்குள் பிரிக்ஸின் என்ற நண்பன், "மேலே சொல்லு, உன்னை அவனுடன் போகச் செய்தது எது என்று எங்களுக்கு நன்றாகத் தெரியும்; கதையை மேலே சொல்!" என்றான்.

"சரி, இனிமேல் எங்கும் நடக்கிறப் போல் சாதாரணக் கதைதான். அவள் அழுக்கு மலிந்த தெருவில் ஒரு மாடிவீட்டில் ஒரு அறை எடுத்துக் கொண்டு வசித்து வந்தாள். அந்த அறையில் இருவர் படுத்துக் கொள்ளக் கூடிய பெரிய கட்டில் இருந்தது; ஒரு நாற்காலி யிருந்தது. சிங்காரித்துக் கொள்வதற்கு என்று ஏற்பட்ட கண்ணாடி பொருத்திய மேஜையுமிருந்தது. அந்த மேஜையின் மீது வாசனைத் திரவியங்கள், கொண்டை ஊசிகள் எல்லாம் இருந்தன.

"அவள் எனக்குக் கொஞ்சம் காப்பிப் போட்டுக் கொண்டு வந்து கொடுத்தாள். கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தோம். பின்னர் படுத்துக் கொள்ளச் சென்றோம்.

"நல்ல நடுநிசியிலோ என்னவோ, (சரியாகக் காலம் தெரியாததற்குக் காரணம் நான் அப்படி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தேன்) அறைக்கு வெளியே நிகழ்ந்த பெரிய சண்டையும் கலவரமும் என்னை எழுப்பி விட்டது. ஒரு பயங்கரக் கோபக் குரல், 'மிமி, கதவைத் திற' என்று கட்டளையிட்டுக் கொண்டிருந்தது. மிமி எழுந்து உட்கார்ந்தாள். அவள் முகத்தில் பயம், பீதி, கவலை, என்ன செய்வது என்று அறியாத திகைப்பு எல்லாம் ஒரே கணத்தில் பிரதிபலித்தன. அவள் கைகளைப் பிசைந்தாள்.

"நான் அவளிடம், 'அவனைப் போகச் சொல்லிவிடேன்; இன்று நீ ஒரு நண்பனை அழைத்து வந்திருப்பதாகச் சொல்லி விடு' என்றேன்.

"'உனக்கு ஒன்றுமே தெரியவில்லை. இவ்விதம் சொன்னேனானால் அந்தக் கணமே என்னைக் கொன்று விடுவான்; உன்னையும் கொன்று விடுவான். நான் பொய் சொல்லவில்லை. சீக்கிரம் நீ வெளியே போ. அந்த ஜன்னல் வழியாகக் குதித்துப் போய் விடேன்' என்று கெஞ்சினாள்.

"அவளுடைய இந்த நடிப்பு எனக்கு நம்பிக்கை ஊட்டுவதாக இல்லை. எனினும் நான் அங்கே யிருப்பது தவறு என்று அவ விற்கு உணர்ந்தேன். வெகு லாகவமாக ஒரு வலையில் சிக்கிக்கொண்டு விட்டேன். அதிலிருந்து தப்பிப் போயாக வேண்டும். என்னை அவர்கள் பயமுறுத்திப் பணத்தைப் பிடுங்கலாம்; அல்லது அவமானப் படுத்தலாம்; இவை இரண்டையும்விட மோசமான காரியத்தில் இறங்கலாம். ஒரு வேளை அவள் சொல்வது பொய்யாக இராமல், வெளியே சத்தம் போடும் மனிதன் உண்மையிலேயே அவளுடைய கணவனாக இருந்தால் என் நிலைமை என்னவாகும்? இவ்விதம் நினைத்த மாத்திரத்திலேயே, என்னைப் போலீஸ்காரர்கள் கைது செய்து கொண்டு போவது போலவும், இந்த வெளிநாட்டுச் சிறையில் அடைபட்டுத் துன்புறுவது போலவும் என் மனக் கண்முன் காட்சிகள் தோன்றலாயின. உடனே நான் படுக்கையை விட்டு வெளியே குதித்தேன். என்னுடைய துணிகளை வெகு வேகமாகப்போட்டுக் கொள்ளப் பிரயத்தனப் பட்டேன். ஆமாம்! என் பனியனும் உள் நிஜாரும்தான் போட்டுக் கொண்டேன். அதற்குள் வாசலில் சத்தம் அதிகரித்தது. மிமியின் கணவன் கதவைப் பலாத்காரமாகத் திறக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகத் தோன்றியது.

"'கதவைத் திறக்கிறாயா, இல்லையா?' என்ற பயங்கரக் குரல் வந்தது.

"மிமி வெகு வேகமாக ஜன்னல் பக்கம் சென்றாள். அங்கே ஒரு கயிற்றைப் பிடித்து இழுத்தாள். ஜன்னலை மூடியிருந்த கதவு மேலே சென்றது. என்னை ஜன்னலண்டை இழுத்து வந்தாள். ரகசியக் குரலில், 'இன்னும் தாமதிக்க நேரமில்லை, ஐயா, தயவு செய்து போய்விடுங்கள். இந்த ஜன்னல் வழியாகப் போய் விடுங்கள்' என்று இறைஞ்சினாள். அடுத்த நிமிஷம் 'நீங்கள் போக வேண்டும். அவன் கதவை உடைத்தெறிவதற்குள் போக வேண்டுமே, போங்கள். ஒரு கண நேரம்கூடத் தாமதிப்பதற்கு இல்லை; போங்கள். நான் கதவைத் திறக்க வேண்டும். இந்த விஷயம் எவ்வளவு முக்கியம் என்பது புரிகிறதா? தயவு செய்து கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்; வெளியே போங்கள்' என்றாள். அதே கணம் கதவுப் பக்கம் திரும்பி, 'இதோ வந்து விட்டேன் பியர்!' என்று இரைந்த குரலில் வெளியில் நிற்பவனுக்கும் பதிலளித்தாள்.

"கதவில் பலத்த சத்தம் கேட்டது. சண்டை போடும் செம்மறியாடு பாய்ந்து மோதுவதுபோல், அந்த மனிதன் கதவின் மீது மோதும் சத்தம் வெகு நன்றாகக் கேட்டது. அவனுடைய சத்தத்தைத் தவிர

மற்றொரு சத்தமும் கேட்டது. அதிலிருந்து அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் அவனுக்குத் தங்கள் ஆதரவை அளிக்கக் கூடி விட்டார்கள் என்று தீர்மானித்தேன். நான் ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தேன். ஜன்னலிலிருந்து தரைக்குச் சில அடிகளே இருந்தன. ஜன்னலுக்கு வெகு அருகில் ஒரு சாக்கடைக் குழாய் சென்றது. மிமி கதவின் பக்கத்தில் நின்று, ஒரு கையால் தாழ்ப்பாளைப் பிடித்துக் கொண்டிருந்தாள். இன்னொரு கையால் என்னைப் 'போ' 'போ' என்று சைகை காட்டிக் கொண்டிருந்தாள். நான் ஜன்னலிலிருந்து சாக்கடைக் குழாயைப் பற்றிக் கொண்டு கீழே இறங்கினேன். அப்படி நான் இறங்கிய ஜன்னல் கணகணவென்று பெருத்த சத்தம் செய்தது. எப்படியோ என் உடல் எலும்புகளை முறித்துக் கொள்ளாமல் கீழே 'பொத்'தென்று குதித்தேன். பிறகு சமாளித்துக்கொண்டு எழுந்து, பிடித்தேன் ஒரு ஓட்டம்!

"அப்பொழுதுதான் மெள்ளக் கிழக்கு வெளுக்கத் தொடங்கியிருந்தது. தெருவில் ஒருவருமே இல்லை. நான் இப்படி ஓடிக்கொண்டிருந்தபோது, வெறும் சர்வ மூட்டாளாக இருக்கிறேனே என்று என்னை நானே வைது கொண்டேன். நான் என் உடைகளை எல்லாம் விட்டு விட்டு வருகிறேனே என்று கவலைப்படவில்லை. ஏனெனில் நான் மிகவும் தேய்ந்து போயிருந்த ட்வீட் கோட்டுத்தான் அணிந்து கொண்டிருந்தேன். ஆனால் என் ஐம்பது பவுன் வைத்திருந்த மணிபர்ஸை வைத்துவிட்டு வருகிறேனே என்று பெரிதும் வருத்தப்பட்டேன். இந்த விடுமுறை முழுதும் செலவழிக்கவென்று வைத்திருந்த பணம் அது. என்னிடமிருந்த அத்தனை பணத்தையும் நான் போகும் இடங்களுக்கெல்லாம் எடுத்துச் சென்றது அசட்டுத்தனம்தான். ஆனால் நான் தங்கியிருந்த ஹோட்டலில், என் பெட்டிக்குள் வைப்பது ஜாக்கிரதைக் குறைவாக இருக்கும் என்று நினைத்து எடுத்து வந்தேன். ஆனால் நான் இப்படி ஒரு எக்கச் சக்கமான சங்கடத்தில் அகப்பட்டுக் கொள்வேன் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லையே! எனினும் கடவுள் புண்ணியத்தில், என் கையை விட்டு என் கைக் கடிகாரத்தைக் கழற்றவில்லை. நான் என் மணிக்கட்டைத் திருப்பிப் பார்த்தேன். அந்தச் சமயத்தில் எனக்கு இன்னொரு அசட்டுத்தனமான எண்ணம் உதித்தது. தும்மி என்ற பிரசித்தி பெற்ற ஆட்டக்காரர்



வண்டியிலிருப்பவர் :—என்னப்பா, ஆமை வேகத்தில் போய்க் கொண்டிருந்த வண்டி திடீரென்று காற்றாய்ப் பறக்கிறதே!

வண்டிக்காரன் :—அதோ, அங்கே பார்த்தீங்களா? ஒருத்தன் புல்லுக் கட்டைத் தலையில் எடுத்துக்கிட்டுப் போறான்! அதைப் பார்த்திடிச்சு குதிரை! காற்றாய்ப் பறக்குதுங்க!

தம்மையே வெல்லப் பார்ப்பது போலவும்; சம்மர்ஹேஸ் வருகிற பெரிய ஓட்டப் பந்தயத்துக்குப் பயிற்சி பெறுவது போலவும் தோன்றியது.

"தெருவில் இவ்வாறு ஓடிக்கொண்டிருந்த போது, யாராகிலும் என்னைப் பார்த்து விடுவார்களோ என்று சங்கடப்பட்டேன். மேலும் ஒரு உள்சிராயும் பனியனும் போட்டுக் கொண்டு பாரிஸ் மாநகரத்தின் தெருக்களில் இந்த வேளை கெட்ட வேளையில் ஓடுவது விசித்திரமாக எனக்கே இருந்தது. மேலும் ஒரு போலீஸ்காரர் என்னைத் தடுத்து நிறுத்தி, இவ்விதம் ஓடுவதற்குக் காரணம் கேட்டால் என்பாடு கஷ்டமாகத்தானே போயிருக்கும்? ஆமாம், பாரிஸ் நகரத்தில் கூட மக்கள் சரியாக ஆடை உடுத்தாமல் போனால் தண்டனைக்கு உட்படுத்தக் கூடிய சட்டம் இருக்கும் என்று நினைக்கிறேன். மறுபடியும் என் கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். மறுபடியும் அந்த அசட்டு எண்ணம் தோன்றியது—நான் காலை ஓட்டப் பயிற்சி செய்வதாகவும், என் வேகத்தைக் கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கணிப்பதாகவும் எண்ணிக் கொண்டேன். வெறும் காலுடன் ஓடுவதைப் பெரிய ஓட்டப் பந்தயத்துக்குப் பயிற்சி பெறுவதாக எண்ணுவது அவ்வளவு பொருத்தமில்லை தான். இதைத் தவிர அந்தச் சமயத்தில் நான் ஓடுவதற்குத் தகுந்த காரணம் கண்டுபிடிக்க முடியவில்லை. உண்மையில், இந்த விஷயத்தைப் பற்றி நினைக்க நினைக்க, நான் என்னுடைய தேக ஆரோக்கியத்துக்காகவும், இந்த ஓட்டப் பந்தயத்துக்காகவும் தான் ஓடுகிறேன் என்று எனக்கே தோன்றத் தொடங்கி விட்டது. என் ஹோட்டலிருந்த தெருவுக்கு நான்

சென்ற போது, ஒரு போலீஸ்காரர் அங்கே நிற்பதைப் பார்த்தேன். நான் அவரை நெருங்கியபோது, அவர் என்னை முறைத்துப் பார்த்தார். அவரைக் கடந்து சென்றபோது என் வேகத்தை அதிகரித்தேன். அது மட்டுமல்ல; அந்தப் போலீஸ்காரரைப் பார்த்து "விளையாட்டு நீடுழி வாழ்க!" என்று வேறு கோஷமிட்டேன். இதனால் அவர் முட்டாள் ஆனாரா அல்லது நான் முட்டாளானதாகக் காட்டிக் கொண்டேனா என்பது புரியவில்லை. எனினும் அவர் என்னைப் பார்த்ததும் நேராக நிமிர்ந்து நின்று எனக்குத் தன் தலைத் தொப்பியைச் சற்று எடுத்து வணக்கம் செலுத்தி என்னை மேலே போக விட்டார்!

"நான் தங்கியிருந்த ஹோட்டல் மிமியின் இருப்பிடத்திலிருந்து கிட்டத்தட்ட ஒரு மைல் இருக்கும். என் ஹோட்டலை அடைந்தபோது, நான் கிட்டத்தட்ட சோர்ந்து விழுந்து விட்டேன். நான் ஹோட்டலுக்குள் நுழைந்தபோது, ஹோட்டல் வேலைக்காரர்கள் தரையைக் கழுவிக் கொண்டும் மெழுகிக் கொண்டும் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் என்னைப் பார்த்ததும் அப்படியே வைத்த விழி வாங்காமல் பிரமித்து நின்று விட்டனர். வாஸ்தவம்; அவர்கள் இந்தமாதிரி டஜன் கணக்கான சம்பவங்களைப் பார்த்திருப்பார்கள்தான். இருப்பினும் அன்று என்னை அப்படி உற்றுப் பார்த்தார்களே! அதற்காக நான் என்ன செய்ய முடியும்? நான்பாட்டுக்கு என் அறைக்குச் சென்றேன்.

"நான் குளித்து விட்டுப் புது உடை உடுத்திக் கொண்டு காலை ஆகாரம் செய்யக் கீழே வந்தேன். அங்கே வேலைக்காரர்கள் என்னைச் சுட்டிக்காட்டிக் குசுகுசு என்று பேசுவதைக் கவனித்தேன். இதைப் பார்த்ததும் முதலில் நான் அந்த ஹோட்டலை விட்டு வெளியேறி, பாரீஸ் நகரத்தின் ஜன சமுத்திரத்தில் கரைந்து விடவேண்டும் என்று தோன்றியது. இல்லையேல் என்னை எல்லோரும் ஞாபகம் வைத்துக் கொண்டு என்னைப் பற்றியே பேசுவார்கள் என்று தோன்றியது. இன்னொரு ஹோட்டலுக்குப் போகலாம்; அங்கே யாரும் என்னைக் கண்டு கொள்ள மாட்டார்கள் என்றாலோ, அங்கே போகப் பண வசதி இல்லை. ஆமாம்; என்னிடம் பணமே இல்லையே. என் அறையிலிருந்த கோட்டுப் பையைத் துழாவிப் பார்த்தேன்; ஒரு சில பிராங்குகள்தான் இருந்தன. இங்கிலாந்திலிருந்து பணம் வரவில்லை என்றால் என் ஹோட்டல் 'பில்' கொடுக்க முடியாது என்ற நிலையிலிருந்தேன். இந்த நிலையில் ஹோட்டல் சிப்பந்திகள் என்னை உற்றுப் பார்த்து, 'இவர்தான் இந்த வருஷப் பந்தயத்தில் ஜெயிக்கப் போகிறவர்' என்று பேசிக் கொண்டால் எனக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும். இருந்தாலும் காப்பி குடித்தானதும் மனதைத் திடப்படுத்திக் கொண்டு, நேரே தலைமைச் சிப்பந்தியிடம் சென்று ஓட்டப் பந்தயக்காரர்கள் அணிந்து கொள்ளும் ரப்பர் பூட்ஸ்கள் எங்கே கிடைக்கும் என்று கேட்டேன். அது மட்டுமல்ல, அவனிடம் நான் தினந்தோறும் காலை காப்பி சாப்பிடுமுன் ஒரு கிலோ மீட்டர் தூரம் அவசியம் ஓடியாக வேண்டும் என்றும், அதற்குத் தேவையான கால் பூட்ஸ்கள் இங்கிலாந்திலேயே மறந்து வைத்துவிட்டு வந்துவிட்டதாகவும், அதனால் அன்று காலை வெறுங் காலிலேயே ஓட நேர்ந்தது என்றும் விளக்கினேன். என் கதையை அவன் நம்பியிருப்பான் என்று நான் நினைக்கவில்லை. நான் அந்த ஹோட்டலில் நான்கு நாட்களாக இருக்கிறேன். அன்று காலையைத் தவிர, அதற்கு முன் நான் ஓடி அவன் பார்த்தது கிடையாதே? பின் இதை எப்படி நம்புவான்?

"மறுநாள் காலை படுக்கையை விட்டு எழுந்திருக்க மனசே வரவில்லை. அதுவும் அவ்வளவு விடியற்காலையில் எழுந்திருப்பது என்பது அவ்வளவு சுலபமா? ஆனால் அந்த நேரத்தில் எழுந்து ஓடி, அந்த நாடகத்தைத் தொடர்ந்து நடத்துவது என்று தீர்மானித்த பிறகு எழுந்திருக்காமலிருக்க முடியுமா? ஓடாமலிருக்க முடியுமா? ஆகவே எழுந்து அரைக்கால் சட்டையும் பனியனும் டென்னிஸ் செருப்புகளும் அணிந்து ஓடலானேன். கடைசியில் இந்த ஆச்சரியத்தைக் கேளுங்கள். ஒரு வாரம் இவ்விதம் ஓடியது எனக்கு இந்தப் பயிற்சியின் மேலேயே ஒரு காதல் உண்டாக்கி விட்டது. அது மட்டுமல்ல, நான் ஓடுவதற்கு என்றே பிறந்தவன் என்றும் தோன்றத் தொடங்கி விட்டது. இப்படி இத்தனை நாளும் என்னுள் மறைந்து கிடந்த இந்த அற்புத சாமர்த்தியத்தைக் கண்டு பிடித்தேன்.

"இனி இந்த நீண்ட கதையைச் சுருக்கிச் சொல்லுகிறேன். நான் தொடர்ந்து ஓடலானேன். பிறகு நான் கேம்பிரிட்ஜுக்கு வந்து சேர்ந்தேன். கொஞ்ச நாட்களில் எங்கள் கல்லூரியில் நடந்த அரை மைல், ஒரு மைல், ஓட்டப் பந்தயங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இப்பொழுது நீங்கள் எல்லோரும் புகழும் பெரிய ஆட்டக்காரனானேன்!" என்று முடித்தான் சம்மர்ஹேஸ்.



9. “வாழ்க! குடியரசு!”

பயங்கரப் பாம்புகளுடனும் கொடிய பூதத்துடனும் வேறு சில ராட்சஸ தோற்றங்களுடனும் போராடி வந்த வீரசேனன் திடீரென்று தன் எதிரில் ஒரு அழகிய பெண் ஒருத்தி நிற்பதைப் பார்த்ததும் ஒன்றும் புரியாமல் தவித்தான். தான் காண்பது கனவோ அல்லது மாயத் தோற்றமோ என்று கண்களை ஒருமுறை கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தான். அந்த அழகி நின்று கொண்டிருந்தாள். பின்னால் திரும்பி அமுதவல்லி நிற்கிறாளா என்று பார்த்தான். அவள் பீதி நிறைந்த உள்ளத்துடன் நின்று கொண்டிருந்தாள். எதிரில் இருந்த பொற்குடங்களைப் பார்த்தான். அவைகளும் இருந்தன. தான் பார்ப்பதெல்லாம் உண்மைதான் என்று உறுதிப் படுத்திக் கொண்டான். அப்பொழுது அந்த மாயப் பெண் பேச ஆரம்பித்தாள். வீரசேனன் மேலும் ஆச்சரியத்துடன் அந்த அழகிய பெண்ணை ஆவலுடன் பார்த்தான்.

“வீரசேனா! நீ குற்றமற்றவன். சர்வ குணங்களும் நிறைந்தவன். இந்தப் பொற்குடங்களிலிருக்கும் நவ ரத்தினங்களும் தங்க நாணயங்களும் இன்று முதல் உன்னுடையவை!” என்று சொல்லிப் பொற்குடங்களின் அருகில் சென்றாள். அங்கிருந்த உடைவாளை எடுத்து வந்தாள்.

“வீரசேனா! இந்த உடைவாளை எடுத்துக் கொள். இது உன் கையிலிருக்கும் வரையில் உன்னை ஒருவராலும் ஜெயிக்க முடியாது” என்று சொன்னாள்.

வீரசேனன் அவளை ஏதோ கேட்க வாயெடுத்தான். அந்த மாயப் பெண் திடீரென்று மறைந்து விட்டாள்.

இதுவரையில் அந்த மண்டபத்தில் மிகப் பயங்கரமாகக் காட்சி அளித்து வந்த அத்தனை சாமான்களும் மறைந்து விட்டன. மனதுக்கு அமைதியைக் கொடுக்கும் ஒரு அழகிய மண்டபமாக அது காட்சி அளித்தது. பலம் பொருந்திய பெட்டி ஒன்றின் மீது அந்தப் பொற்குடங்களும் தங்க நாணயங்களும் மட்டும் இருந்தன. வீரசேனன் இதையெல்லாம் பார்த்துத் திகைத்தான். அமுதவல்லிக்கும் ஒரே ஆச்சரியமாக இருந்தது. அவள் வீரசேனன் அருகில் வந்தாள். அமுதவல்லி அருகில் வந்ததும் அவனுக்குச் சுய உணர்வு வந்து விட்டது. அவசரம் அவசரமாக நவரத்தினங்கள் நிறைந்த அந்தப் பொற்குடங்களையும் தங்க நாணயங்களையும் எடுத்து அந்தப் பெட்டிக்குள்ளேயே வைத்துப் பூட்டினான். அமுதவல்லியை அழைத்துக் கொண்டு சுரங்கத்தை விட்டு வெளியே வந்தான். நேரே தாயாரிடம் சென்றான். தான் சாதித்த வீர சாகஸங்களை எல்லாம் சொன்னான். “அம்மா! நாம் உடனே புறப்பட வேண்டும், நகரின் எல்லைக்கு வெளியே இருக்கும் ஐயனார் கோயிலுக்குப் போகவேண்டும்” என்றான்.

எல்லாரும் நகருக்கு வெளியிலுள்ள ஐயனார் கோயிலுக்குப் புறப்பட்டனர்.

* * *

மார்த்தாண்டபுரத்து எல்லைக்கு வெளியில் மனித சஞ்சாரமின்றி இருந்து வந்த ஐயனார் கோயில் இப்பொழுது பெரிய ராணுவக் கோட்டை போலக் காட்சி அளித்தது. அங்கு அழகேசபுரத்து மன்னர் தம் குதிரைப் படை, யானைப் படை, காலாட் படை முதலிய தம் பலம் பொருந்திய சைன்யங்களுடன் வந்து வீரசேனன் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தார். மன்னரின் மனம் அமைதியில்லாமல் ஆடிக் கொண்டிருந்தது. அவர் ஐயனார் கோயிலுக்கு வெளியே வருவதும் உள்ளே போவதுமாக இருந்தார்.



வீரசேனன் அமுதவல்லியுடனும் அவன் தாயாருடனும் அங்கு வந்து சேர்ந்தான். அவர்களைப் பார்த்ததும் தான் அரசருக்கு அமைதி ஏற்பட்டது. "வீரசேனா! உன்னுடைய காரியங்கள் எல்லாம் முடிந்து விட்டதா?" என்று ஆவலோடு கேட்டார். வீரசேனன் தான் சுரங்கத்துக்குள் சென்றதையும் பொற்குடங்களைப் பெற்றதையும் அதை 'நல்ல பாதுகாப்பான இடத்தில் வைத்துவிட்டு வந்ததையும் சொன்னான். அரசர் மிகவும் சந்தோஷமடைந்தார். உடனே மேலே நடக்க வேண்டிய காரியங்களைப் பற்றி இருவரும் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தனர். கடைசியில் சமாதான முறையில் ராஜ்யத்தைப் பெறுவது; இல்லையேல் யுத்தம் செய்ய வேண்டியதுதான் என்று தீர்மானித்தனர். இந்தச் செய்தியை திறமைசாலியான ஒரு தூதன் மூலம் மார்த்தாண்டபுரத்துக்கு அனுப்பி வைத்தனர்.

ஐயனார் கோயிலைச் சுற்றிலும் தங்கியிருந்த படைவீரர்கள் தங்கள் வேல்களும் வாள்களும் 'டணார்' 'டணார்' என்று மோதி உராயும் வண்ணம் நடந்து கொண்டிருந்தனர். யானைகள் கட்டுக்கடங்காமல் திமிறிக் கொண்டிருந்தன. குதிரைகள் பயங்கரமாகக் கனைத்துக் கொண்டிருந்தன. அரசரும் வீரசேனனும் தூதனின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க தூதன் திரும்பி வந்தான். அவன் வீர முகத்தில் கோபக் கனல் பறந்து கொண்டிருந்தது.

"மார்த்தாண்டபுரத்து அரசன் என்ன சொன்னான்?" என்று மிகவும் கடுமையான குரலில் ஆத்திரமாகக் கேட்டான் வீரசேனன்.

"அதைப் போர்க்களத்தில் பேசிக்கொள்ளலாம் என்று அகங்காரமாகப் பதில் சொல்லி விட்டான்" என்றான் தூதன்.

இதை அந்தத் தூதன் சொல்லி வாய் மூடுவதற்குள் வீரசேனன்


"போர் முரசு கொட்டுங்கள்! உடனே யுத்தத்துக்குத் தயாராகுங்கள்! நமது கொடியை வானளாவ உயர்த்திப் பறக்க விடுங்கள்!" என்று உத்தர விட்டான்.

அடுத்த சில விநாடிகளுக்கெல்லாம் வீரசேனன் போர்க் கவசம் அணிந்து கொண்டு இடையில் போர்வாள் மின்ன யுத்தத்துக்கு ஆயத்தமானான். அழகேசபுரத்து அரசரிடமும், தன் அருமைத் தாயாரிடமும் ஆசி பெற்றுக் கொண்டான். அமுதவல்லியிடமும் விடை பெற்றுக் கொண்டு போருக்குக் கிளம்பிவிட்டான்.

மார்த்தாண்டரின் மகன் வீரசேன மார்த்தாண்டர் யுத்தத்துக்குக் கிளம்பிய செய்தி ஒரு நொடியில் மார்த்தாண்டபுரம் பூராவும் பரவிவிட்டது. அடிமைப் பட்டுக் கிடந்த மக்கள் எழுச்சி பெற்றுக் கிளம்பினர். இத்தனை நாளும் அடங்கிக் கிடந்த சுதந்திர உணர்ச்சி மடையை உடைத்துக் கொண்டு வரும் வெள்ளம் போல் மக்கள் மனதில் கரைபுரண்டு ஓடியது. மக்கள் மன்னருக்கு எதிராக வீரசேனன் பக்கம் சேர்ந்து கொண்டனர். "வீரசேன மார்த்தாண்டர் வாழ்க! கொடுங்கோல் ஆட்சி வீழ்க!" என்று கோஷமிட்டனர். அவர்களுடைய சுதந்தர வெறியும் வீரசேனனுடைய போர்த் திறமையும் தீப் பந்தத்தில் வீசிய குங்கிலியத் தூள் போலக் குபீரென்று பிடித்துக் கொண்டது.

மார்த்தாண்டபுரத்து அரசனின் கூலிப் பட்டாளம் குலை நடுக்க மெடுத்துக் கொண்டு ஓடத் தலைப்பட்டன. சுதந்தர வெறி பிடித்த மக்களுக்கு முன்னால் மன்னரின் சைன்யம் என்ன செய்யமுடியும்?


வீரசேனன் தன் தந்தையைக் கொன்று அரசைக் கைப்பற்றிய நயவஞ்சக மன்னரைத் தேடி அவர் இருக்கும் இடம் சென்று அவருடன் நேரிலேயே போர் புரிந்தான். வீர



சேனனின் அபார வாள் வீச்சுக்கு முன்னால் மன்னர் ஒன்றும் செய்ய முடியாமல் திணறினர். இருந்தாலும் போர் புரிந்து பார்த்தார். கடைசியில் எதிரியின் இருதயத்தில் வீரசேனன் வாள் புகுந்துவிட்டது. எதிரிகள் எல்லாரும் மடிந்தனர்.


• • •

மறு நாள் மார்த்தாண்டபுரம் முழுவதுமே பிரமாதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. தெருவெல்லாம் மாவிலைத் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. மக்கள் எல்லாரும் தங்களை நன்றாக அலங்காரம் செய்து கொண்டிருந்தனர். மார்த்தாண்டபுரத்து அரண்மனையின் உச்சியில் சுதந்திரக் கொடி பட்டொளி வீசிப் பறந்துகொண்டிருந்தது. அரண்மனை தர்பார் மண்டபத்தில் எள்ளுப் போட்டாற்போல ஜனங்கள் மிகக் குதூகலமாகக் கூடியிருந்தனர்.



வீரசேனன், அமுதவல்லி, அவன் தாயார், அழகேசபுரத்து அரசர் முதலியோர் புடைசூழ அங்கு வந்தான். வீரசேனனைப் பார்த்த மக்கள் "வீரசேன மார்த்தாண்டர் வாழ்க!" என்று எழுந்து நின்று கோஷித்தனர். வீரசேனன் கை கூப்பி வணங்கிய வண்ணம் சிம்மாசனத்தில் வந்து அமர்ந்தான். அவன் அருகில் அமுதவல்லியும் அமர்ந்தான். அருகிலிருந்த ஆசனங்களில் அவன் தாயும் அழகேசபுரத்து அரசரும் அமர்ந்தனர். மார்த்தாண்டபுரத்து மக்களின் செல்வாக்குப் பெற்ற தலைவர்கள் மூவர் எழுந்து வந்து வீரசேனனுக்கு மாலை சூட்டினர். அப்பொழுது மண்டபம் அதிரும்படி மக்கள் கரகோஷம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். இன்னொரு மாலையை வீரசேனனிடம் கொடுத்து அதை அமுதவல்லிக்குச் சூட்டும்படி கேட்டுக் கொண்டனர். மக்களின் குதூகல ஆரவாரத்துக்கு மத்தியில் வீரசேனன் அமுதவல்லிக்கு மணம் நிறைந்த மலர் மாலையைச் சூட்டி மகிழ்ந்தான். அது மலர் மாலையா? இல்லை; மண மாலைதான்! அடுத்த கணம் அந்த மூவரும் மன்னருக்கு





உரிய மணிமகுடத்தை எடுத்து வந்து வீரசேனன் தலையில் சூட்ட வந்தனர். வீரசேனன் அதைத் தடுத்து நிறுத்தி விட்டுப் பேசினான்:

" மகாஜனங்களே! நான் இந்த நாட்டு மன்னனில்லை. இனிமேல் நாம் எல்லாரும் இந்த நாட்டுக்கு மன்னர்கள். ஆகையால் இந்தக் கிரீடத்தை என் தலையில் சூட்ட வேண்டாம்!" என்றான்.

மக்கள் மத்தியில் ஒரு சலசலப்பு ஏற்பட்டது. வீரசேனன் அவர்களைச் சற்று அமைதியுடன் இருக்கக் கேட்டுக் கொண்டு மேலே பேசத் தொடங்கினான்.

" இன்று முதல் இந்த நாட்டில் முடியாட்சி கிடையாது. தனி மனிதன் கையில் இருக்கும் எந்த அரசியலும் பொது மக்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்வதில்லை. ஏழைகளின் நலன்களைக் கவனிப்பதில்லை. தன்னையும் தனக்கு வேண்டிய பிரபுக்களின் நலனையே மன்னர்கள் கவனிக்கின்றனர். பதவி என்ற மோகினிப் பிசாசு என்னையும் பிடித்துக் கொள்ளலாம். நானும் அந்த நிலைக்கு வந்தாலும் வந்துவிடுவேன். ஆகையால் இன்றோடு முடியரசைக் குழி தோண்டிப் புதைத்து விடுவோம். மக்கள் ராஜ்யத்தை நிறுவுவோம். குடியரசை ஸ்தாபிப்போம்" என்று கூறி "வாழ்க! குடியரசு!" என்றான். அந்த ஜன சமுத்திரமும் "குடியரசு வாழ்க!" என்று கோஷித்து மகிழ்ந்தது.

மக்களின் சந்தோஷ ஆரவாரத்துக்கும் அவர்களின் மங்கள வாழ்த்தொலிக்கும் மத்தியில் வீரசேனன் அமுதவல்லியை அழைத்துக் கொண்டு அரண்மனை உத்தியான வனத்துக்கு வந்தான்.

வீரசேனனும் அமுதவல்லியும் அகமும் முகமும் மலர மக்களின் குதூகல ஆரவாரத்துக்கு மத்தியில் மகிழ்ச்சியுடன் சென்ற காட்சியைக் கண்டு வீரசேனனின் தாய் ஆனந்தக் கடலில் மிதந்தாள்.

அவளுக்கு அருகில் சென்று வீரசேனனும் அமுதவல்லியும் வணங்கினார்கள். அவளுடைய அன்பைப் பெற்றுக் கொண்டு மேலே சென்றார்கள்.

பூத்துக் குலுங்கும் மலர் வனத்துக்கு மத்தியில் வந்து நின்றார்கள். வானோங்கி நின்ற சந்தன மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த பொன் ஊஞ்சலில் வீரசேனன் உட்கார்ந்தான். அவன் அருகில் அமுதவல்லியும் அமர்ந்தாள். அந்த ஊஞ்சலில் அமர்ந்த உடனேயே வீரசேனனும் அமுதவல்லியும் இதுவரை அடையாத ஒரு இன்பத்தை அடைந்தனர். எங்கிருந்தோ ரமணீயமான சங்கீதம் காற்றிலே மிதந்து

வந்து அவர்கள் காதுகளில் தேன்மாரி பொழிந்தது. ஊஞ்சல் மெதுவாக ஆடிக் கொண்டிருந்தது. வீரசேனன் பூமியில் காலை ஊன்றி ஒரு உந்து உந்தினான். ஊஞ்சல் வேகமாக ஆடியது. அந்த வேகம் தாங்காது அமுதவல்லி வீரசேனனை அணைத்துப் பிடித்துக் கொண்டாள். ஊஞ்சல் ஆடிக்கொண்டே மேலே சென்றது. மேக மண்டலத்தைத் தாண்டி, சந்திர மண்டலத்தை நோக்கிச் சென்றது. அவர்களுடைய இன்ப உள்ளங்கள் ஒரு நிமிஷம் பழைய சம்பவங்களை நினைத்தன. போரும் பூசலும் பூதங் காத்த சுரங்கமும் அதன் மாளிகையும் சலனப் படம்போலத் தோன்றி மறைந்தன.

இந்தப் புரட்சிக் காதலர்களின் புது வாழ்க்கையைக் காணப் பூரணச் சந்திரன் தன் குளிர்ந்த கிரணங்களை வீசிக்கொண்டு வானவீதியில் வந்தான். வெள்ளை மலர்கள் புனைந்த புஷ்பக் குன்றுகள்போல மேகக் கூட்டங்கள் மிதந்து வந்தன. வானக் கடலிலே வெடித் தெழுந்த வயிரங்கள் சிதறுண்ட இன்பங்களைப்போல விளங்கும் கணக்கற்ற நட்சத்திரங்கள் அமுதவல்லியையும் வீரசேனனையும் பார்த்துக் கண் சிமிட்டி மின்னி மகிழ்ந்தன.

வீரசேனனும் அமுதவல்லியும் இன்பக் கடலிலே மூழ்கி எல்லையற்ற வான வெளியிலே பொன் ஊஞ்சலில் ஆடிக்கொண்டே இருந்தனர். இந்த உலகை மறந்தனர். கவலையற்ற கந்தர்வ நாட்டுக்கே சென்று விட்டனர். "பரஸ்பரம் அன்போடு வாழுங்கள்!" "அன்பே தெய்வம்!" என்று சொல்லி கந்தர்வர்கள் அந்தத் தம்பதிகளை வாழ்த்தி ஆசி கூறினார்கள்.

மார்த்தாண்டபுரம் மக்களும் தங்களை மறந்தனர். "வாழ்க! குடியரசு!" என்று வாய் கிழியக் கோஷித்த வண்ணமிருந்தனர். அந்தச் சுதந்திர கோஷம் வான முகடுவரை சென்று "வாழ்க! குடியரசு!" "வாழ்க குடியரசு!" என்று பூமி அதிர எதிரொலித்துக் கொண்டிருந்தது! முற்றும்.

உபயோகமற்றவர்கள்!

ராமுவின் அப்பா கடைக்குப் போய் விறகு வாங்கி வந்தார். விறகு ஒவ்வொன்றும் பெரிது பெரிதாக இருந்தது. விறகு பிளப்பவன் யாரேனும் வருகிறானா என்று பார்த்தார். பிறகு ராமுவைப் பார்க்கச் சொன்னார். வெகு நேரம் வாசலிலேயே நின்றுவிட்டு, ராமு உள்ளே வந்து, "அப்பா, என் கழுத்தை வலிக்கிறது. விறகு பிளப்பவன் யாரும் வருகிற வழியாயில்லை. என்ன செய்யட்டும்?" என்று அலுப்போடு சொன்னான்.



உடனே ராமுவின் தகப்பனார், ராமுவை அழைத்து, "பக்கத்து வீட்டுக்குப் போய் அவர்கள் வீட்டுக் கோடாலியைக் கொஞ்சம் கேட்டு வாங்கிக் கொண்டு வா! நானே இரண்டொரு கட்டைகளைப் பிளந்து போடுகிறேன். சீக்கிரம் போ. சமையலுக்கு நேரம் ஆகிறது!" என்றார்.

ராமு போய் இரண்டு நிமிஷங்களில் திரும்பி வந்தான்.

"அப்பா, அவர்கள் வீட்டுக் கோடாலிக்குக் காம்பு இல்லையாம்!"

"சரி, போய் அந்தப் பக்கத்து வீட்டில் கேட்டு வாங்கிக் கொண்டு வா!"

ராமு பழையபடி ஓடிப்போய் இரண்டு நிமிஷங்களில் திரும்பி வந்து, "அப்பா! அவர்கள் வீட்டில் கோடாலியே இல்லையாமே!" என்றான்.

அவன் தகப்பனார், "என்னடா இது? உபத்திரவமாயிருக்கிறது! சரி, ஓட்டமாய்ப் போய் எதிர் வீட்டில் கேட்டு வாங்கிக் கொண்டுவா!" என்றார்.

ராமு மறுபடியும் போய்விட்டுத் திரும்பி வந்தான்.


"எங்கேயடா, கோடாலி?" என்று கேட்டார் அப்பா.

"அவர்கள் வீட்டில் இப்போது கோடாலி இல்லையாம்! நம்மைப் போல யாரோ கேட்டு வாங்கிக் கொண்டு போனார்களாம். அப்புறம் அவர்கள் திருப்பிக் கொடுக்கவே இல்லையாம்!" என்றான் ராமு.

"சரி, சரி! கிடக்கிறான்கள் அல்பப் பயல்கள்......! கடையிலே நம்ம வீட்டுக் கோடாலியைத்தான் எடுத்துக் கொண்டு வர வேண்டும் போலிருக்கிறது! நீ உள்ளே போய் நம் வீட்டுப் பரணிலே இருக்கும் கோடாலியை எடுத்துக் கொண்டு வா. நிமிஷத்திலே பிளந்து விடுகிறேன்!" என்றார் அப்பா அதிருப்தியுடன்.



—விஜயம்



இல்லாளின் இதயம்

வசு

"இனிமேல் இங்கே என்னால் ஒரு வினாடி கூட இருக்க முடியாது. நான் புறப்பட்டுவிட்டேன்" என்றேன். நான் அப்படிச் சொல்லும்போதே கட்டுக் கடங்காத துக்கம் என் நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது.

"பவானி, அதுதான் உன் கடைசித் தீர்மானமா!" என்றார் என் கணவர்.

"ஆமாம், நீங்கள் உங்கள் மனதைக் கல்லாகச் செய்து கொண்ட பிறகு எனக்கு வேறு வழி ஏது! நீங்களே சொல்லுங்கள்!" என்றேன் விம்மல்களுக்கிடையே.

அப்பொழுதும் அவருடைய மனது மாறினதாகத் தெரியவில்லை. எப்பொழுதும் போலவே சர்வ சாதாரணமாக "சரி, உன் இஷ்டம் போல் செய். உன் விருப்பத்திற்குக் குறுக்கே நிற்க நான் யார்? நீயோ படித்த பெண். ஆனால் ஒன்றைமட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள். நீ எப்பொழுது வேண்டுமானாலும் இந்த வீட்டுக்குத் தாராளமாகத் திரும்பி வர உனக்கு உரிமை உண்டு" என்றார்.

"இந்த ஜென்மத்திலா!" என்று என் வாயிலிருந்து வெளிப்பட்டிருக்க வேண்டிய வார்த்தைகள் என்ன காரணத்தினாலோ என் உள் நாக்கிலேயே நின்று விட்டன. தலையை நிமிராமலேயே "அறிந்து கொண்டேன்" என்றேன்.

ஒரு நிமிஷம் அவர் மௌனமாக இருந்தார். பிறகு ஏதோ நினைவு வந்தவர் போல் கடியாரத்தைப் பார்த்து விட்டு "மணி எட்டடிக்கப் போகிறது. நான் ஸ்டுடியோவுக்குப் போக வேண்டும். இரவு படப் பிடிப்பு வேலையிருக்கிறது; நான் வருகிறேன்" என்று சொல்லி விடுவிடென்று வெளியே போய்விட்டார். போகும்போது வாயிலில் நின்று கொண்டிருந்த கார் டிரைவரிடம் "அம்மாவை ரயில்வே ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் விட்டு விட்டுக் காரை நேராக ஸ்டுடியோவுக்குக் கொண்டுவந்து விடு" என்று அவர் சொன்னது என் காதில் விழுந்தது. அவருடைய நெஞ்சழுத்தத்தை நினைக்க நினைக்க என் இதயமே சுக்கு நூறாக வெடித்து விடும்போலிருந்தது. பொங்கி வந்த அழுகை என் கண்களிலிருந்து கசியுமுன்பே கார் டிரைவர் என் முன்னால் வந்து நிற்பதை உணர்ந்தேன். அவன் தயங்கிக் கொண்டே "அம்மா சாமான்களை எடுத்து வண்டியில் வைத்து விடவா!" என்றான் பணிவாக. "சரி" என்று சொல்லும் பாவனையாகத் தலையை ஆட்டினேன். என்னுடையபெட்டி, படுக்கை, கூஜா, மற்றும் தட்டு முட்டு சாமான்களை அவன் காரில் வைத்து முடித்ததும் நான் காரில் ஏறிக் கொண்டேன். ஸ்டேஷனை அடைந்ததும் என்னுடைய பிறந்தகம் இருந்த ஊருக்கு இரண்டாவது வகுப்பு டிக்கெட் ஒன்று வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தான் டிரைவர், என் கணவரின் உத்தரவுப்படியே. அதைக் கையில் வாங்கிக்கொண்டு ரயிலில் இரண்டாவது வகுப்புப் பெட்டி ஒன்றில் அமர்ந்தேன். ரயில் கிளம்பியது. கார் டிரைவர் எனக்கு வணக்கம் தெரிவித்துவிட்டுச் சென்றான்.

இரண்டு வருஷத்திற்கு முன்புதான் சென்னை கலைமகள் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். என் பெற்றோர்களுக்கு நான் ஒரே பெண். அப்பா வடக்கே பெரிய உத்தியோகத்திலிருந்து விட்டு ஓய்வு எடுத்துக் கொண்டு திருச்சியில் வாசம் செய்து கொண்டிருந்தார். நாலு வயதிலேயே தாயாரை இழந்த என்னைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தார் அப்பா. அவருக்கு என்னிடமிருக்கும் அன்புக்குக் குறைவு ஏற்பட்டு விடக் கூடாதென்றே நினைத்து அவர் இரண்டாம் தாரம் கலியாணம் செய்து கொள்ளவில்லை. எனக்கு வயது ஆக ஆக இந்த விவரத்தையெல்லாம் எங்கள் குடும்பத்திலிருந்த என் அத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறாள். அப்பாவின் தியாகத்தையும் அவருடைய உதார குணத்தையும் நினைக்கும் போதெல்லாம் என் உள்ளம் பெருமையால் பூரிக்கும்.

அப்பா என்னைச் சென்னைக்குக் கூட்டிக் கொண்டு வந்து காலேஜில் சேர்த்த பின் ஊருக்குப் போய்ச் சில மாதங்கள் கழித்து ஒரு கடிதத்தில் எனக்குக் கலியாணம் செய்து வைக்கப் பிரியப்படுவதாய் எழுதியிருந்தார். அதற்கு நான் எழுதிய பதிலில், நான் வயது வந்த, விவரம் தெரிந்த பெண் என்ற காரணத்தால் எனக்கு இந்த விஷயத்தில் சுயநிர்ணய உரிமையை அவர் அளிப்பார் என்று எதிர்பார்ப்பதாகத் தெரிவித்திருந்தேன். அப்பப்பா! இப்பொழுது நினைத்துப் பார்த்தால் கூட அப்பாவுக்கு அப்படி எழுத எனக்குத் துணிவு எப்படி ஏற்பட்டது என்று நினைக்க ஆச்சரியமாயிருக்கிறது! ஆனாலும் அப்பாவிடமிருந்து வந்த மறு கடிதத்தில் என் கோரிக்கையைப் பூரணமாக ஆதரிப்பதாக எழுதியிருந்தார். என்ன பெருந்தன்மை! அப்படியிருந்தும் அவர் எழுதியிருந்த பாணியில் நான் ஒரு வேளை எனக்குத் தகுந்த கணவனைத் தேர்ந்தெடுப்பதில் முழுவெற்றி பெறாவிட்டால் என்ற அவருக்கிருந்த பயம் தொனித்தது. அப்பா பயந்தபடியே பின்னால் என் வாழ்க்கையில் நடந்த சில விஷயங்கள் என்னைக் கதிகலங்க வைத்தன!

கல்லூரி ஹாஸ்டலில், என் கூடப் படித்துக் கொண்டு என் அறையிலேயே தங்கியிருந்த திலோத்தமாவை அவளுடைய அண்ணா பார்க்க வருவார். அவர் ஒவ்வொரு சமயம் திலோத்தமா அறையில் இல்லாத சமயத்தில் வந்தால் ஏதோ ஒன்றிரண்டு தகவல்களை என்னிடம் தெரிவித்து விட்டு அவைகளைத் திலோத்தமாவிடம் அறிவிக்கும்படி கேட்டுக் கொண்டு போவார். அவருடைய அடக்கமும் மரியாதை கலந்த பேச்சும் அவர் ஒரு படித்த மேதை என்பதை எடுத்துக் காட்டின. பார்வைக்கும் அழகாகத்தான் இருந்தார். என்னையும் மீறி அவரைப் பற்றிய விவரங்களை அறிய வேண்டுமென்ற ஆவல் நாளுக்கு நாள் என் மனதில் வளர்ந்து கொண்டே வந்தது. திலோத்தமாவிடம் பேச்சோடு பேச்சாக ஒரு நாள், "ஆமாம், திலோத்தமா! உன் அண்ணா வருகிறாரே அவர் உத்தியோகத்திலிருக்கிறாரா அல்லது ஏதாவது படித்துக் கொண்டிருக்கிறாரா!" என்று பேச்சை ஆரம்பித்தேன்.

திலோத்தமா கிண்டலாக "ஆமாம் பவானி, அவர் எப்படியிருந்தால் உனக்கு நல்லது! அது போகட்டும் ஒருநாளுமில்லாத திருநாளாக இன்றைக்கு என் தமையன் மேல் உனக்கு ஏன் இவ்வளவு கரிசனம்!" என்றாள்.

அவளுடைய பதில் எனக்குச் சுருக்கென்று பட்டது. "ஏதோ சகஜமாகத் தான் கேட்டேன்!" என்றேன் பிகுவாக.

ஆனால் திலோத்தமா என்னுடைய பதிலை ஏற்றுக் கொள்ளவில்லை.

"நானும் தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இப்பொழுதெல்லாம் அநேகமாக நான் இல்லாத சமயமாகப் பார்த்துத்தான் அண்ணா ஹாஸ்டலுக்கு வருகிறார். நீ விசேஷம் ஒன்றுமில்லை என்றால் நான் நம்புவேனா, என்ன! அது கிடக்கட்டும். அவன் அடுத்த தடவை வரும்போது அவனைப்பற்றிய விவரங்களை அவனிடம் நேரிலேயே கேட்டுத் தெரிந்து கொள்ளேன். அதற்கென்ன ஒன்றும் அவசரமில்லையே" என்றாள் அந்தக் குறும்புக்காரி.

எதற்காக இதைப்பற்றி அவளிடம் பிரஸ்தாபித்தோம் என்று ஆகிவிட்டது. எனக்கு என் குரலைக் கடுமையாக்கிக் கொண்டு, "திலோத்தமா, என்னென்னவோ கற்பனை செய்து கொண்டு பேசிக் கொண்டே போகாதே" என்றேன்.

"ஐயோ பாவம்! பவானி நான் ஒன்றும் கற்பனை செய்யவில்லை. நேற்று நான் என் அண்ணாவைச் சந்தித்தேன். அவன் 'திடுதிப்' பென்று உன்னைப்பற்றிய தகவல்களை யெல்லாம் விசாரிக்க ஆரம்பித்து விட்டான். எனக்கு உன்னைப்பற்றித் தெரிந்த விவரங்களை யெல்லாம் சொல்லிவிட்டு வந்தேன். உன்னுடைய ஜாதகத்தின் நகல் ஒன்று கையிலிருந்திருந்தால் அதையும் கொடுத்து விட்டு வந்திருப்பேன். அது ஒன்றுதான் பாக்கி. உங்கள் இரண்டு பேருக்கும் இந்த ஒரு பொருத்தமே போதாதா!" என்றாள் திலோத்தமா.

திலோத்தமாவின் பதில் என்னை ஒரு கணம் திகைக்க வைத்தது. என் வெட்கத்தையும் மறந்து திலோத்தமாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு "உண்மையாகவா!" என்றேன்.

அதையடுத்து திலோத்தமா அவளுடைய அண்ணாவைப் பற்றித் தெரிந்த தகவல்களிலிருந்து அவர் ஒரு எம். எஸ் ஸி. பட்டதாரி என்றும், இன்னும் சில நாட்களுக்குள் கலை சம்பந்தமான ஒரு தொழிலில் ஈடுபட உத்தேசித்திருப்பதாகவும், மற்றும் அவருடைய குடும்ப சங்கதிகளைப் பற்றியும் தெரிந்து கொண்டேன். என் தகப்பனாருக்கு நான் எழுதிய கடிதத்தில் திலோத்தமாவின் தமையனின் யோக்யதாம்சங்களை எடுத்துச் சொல்லிவிட்டு, என் மனதிலிருந்ததையும் ஜாடையாக அறிவித்திருந்தேன். நான் தேர்ந்தெடுத்திருந்தவரை முதன் முதலாகப் பார்த்ததும் அவரிடம் அப்பா ஏதோ சம்பிரதாயமாக அவரைப்பற்றிச் சில தகவல்களை விசாரித்தாரே தவிர வேறு ஒன்றும் விசேஷமாகக் கேட்கவில்லை. அவருக்குத் திருப்தி ஏற்படவே அவருடைய கடமையை நிறைவேற்றி வைப்பதில் ஈடுபட்டார். ஒரு நல்ல முகூர்த்தத்தில் நானும் திலோத்தமாவின் தமையனும் மனைவியும் புருஷனுமானோம்.

கலியாணமான புதிதில் என்னைப் போன்ற பாக்யசாலிகள் யாரும் இருக்க மாட்டார்கள் என்று எண்ணி இறுமாப்பு எய்தியிருந்தேன். நல்ல படிப்புப் படித்து கை நிறைய சம்பளம் வாங்கும் கண் நிறைந்த கணவர் வசிப்பதற்கு வசதியான பங்களா. இட்ட வேலையைச் செய்வதற்குப் பணியாட்கள். நினைத்த இடத்திற்குப் போய்வர மோட்டார் வாகனம்—இதை யெல்லாம் நினைத்து நினைத்துச் சந்தோஷத்தில் திளைக்கும் என் மனம். நாளடைவில் பொது ஜனங்களின், அதுவும் முக்கியமாக சினிமா ரசிகர்களின் மனதை அவருடைய திறமையினால் நல்ல படங்களை அடிக்கடி வெளியிட்டுக் கவர்ந்து பிரபல டைரக்டர் என்று பெயர் வாங்கி விட்டார் என் கணவர். புகழ் என்பது ஒரு விதத்தில் அமுதமாக இருப்பினும் அளவுக்கு மீறிப் போனால் நஞ்சு தானே! இந்த விதத்தில்தான் அவருடைய புகழ் எங்களுடைய இல்வாழ்க்கையில் சஞ்சலத்தின் சாயையைப் படிய வைக்க ஏதுவாக இருந்தது.

பணம் படைத்த சினிமா முதலாளிகள் தங்களுடைய படங்களை 'டைரக்ட்' செய்ய என்னுடைய கணவரின் ஒத்துழைப்பைக் கோரினார்கள். அத்துடன் பல நடிகைகள் தங்களுடைய உழைப்பைப் பயன் படுத்தி அதை நல்ல பணமாக மாற்றிக் கொடுக்க என் புருஷரை அடிக்கடி வந்து பேட்டி காண ஆரம்பித்தார்கள். சிறுகச் சிறுக எங்களுடைய பிரத்யேக வாழ்க்கையிலிருந்த நிம்மதி குறைய ஆரம்பித்தது. பொழுது விடிந்தால் பொழுது சாய்ந்தால், அல்லும் பகலும், அனவரதமும் நடிகைகளின் நச்சரிப்புத்தான். ஆமாம், சினிமா படம் பிடிப்பதைப்பற்றி டெலிபோனில் இவரிடம் அவர்களுடைய பேச்சு, அதை யொட்டி அவர்களுடைய ஜாகைக்கு இவருடைய விஜயம், எங்களுடைய பங்களாவுக்கு அவர்கள் மறு விஜயம், அடிக்கடி அவர்கள் வீட்டில் இவருக்குத் தேநீர் விருந்து, அதை யடுத்து கேளிக்கைகள், இத்யாதி விஷயங்கள் என்னுடைய பொறுமையைச் சோதிக்கு மளவுக்கு வளர்ந்து கொண்டு வந்தன. என்னுடைய ஏமாற்றத்தையும் ஆயாசத்தையும் பல தடவை மறைமுகமாக அவரிடம் எடுத்துச் சொன்னேன். சொல்லி என்ன பயன்!

அன்று எங்களுக்குக் கலியாணமாகி மூன்றாவது வருஷ ஆரம்பம். காலைச் சிற்றுண்டி சாப்பிட்டு முடிந்ததும் அவசர அலுவலாக ஸ்டுடியோ வரை போய்விட்டுப் பகல் சாப்பாட்டிற்குத் திரும்பி வருவதாகச் சொல்லிச் சென்றார். பகல் சாப்பாட்டைத் தயார் செய்து வைத்து விட்டு, அவருடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். மணி பன்னிரண்டு அடித்ததும் அவர் டெலிபோனில் என்னைக் கூப்பிட்டு வழக்கம்போல் பகல் சாப்பாட்டை ஸ்டுடியோவிலிருந்து வரும் பையனிடம் கொடுத்தனுப்பச் சொன்னதும் எனக்கு என்னமோ போலிருந்தது. "இன்றைக்குக் கூடவா நீங்களும் நானும் தனித் தனியாக சாப்பிட வேண்டும்!" என்றேன் குழையும் குரலில்.

"பவானி, நான் இங்கே எதிர்பாராத விதமாக அகப்பட்டுக் கொண்டு விட்டேன். சாப்பிடும்போது நீயும் நானும் ஒருவரை ஒருவர் நினைத்துக் கொண்டு சாப்பிட்டு விட்டால் போகிறது" என்றார் சமத்காரமாக.

"அப்படியானால் சாயந்திரம் நாலு மணிக்கு டிபனுக்காவது வந்து விடுவீர்களல்லவா! சாயந்திரம் உங்களுடன் வெளியே போய்விட்டு வரலாம் என்றிருக்கிறேன்."

"இது தெரியாதா என்ன! ஜமாய்த்து விடுவோம்!" என்றார் குதூகலத்தோடு.

மணி ஐந்தடித்தது. ஆறும் கழிந்தது; ஏழரையும் ஆகி விட்டது. வீட்டில் இருப்புக் கொள்ளாமல் உள்ளுக்கும் வாசலுக்குமாக உலாவிக் கொண்டிருந்தேன். டெலிபோன் மணி அடித்தது, அவர்தான் பேசினார். "ஸ்டுடியோவிலிருந்து அல்ல பிரபல நடிகை மிஸ்..... வீட்டிலிருந்து." இன்றைக்கு அவளுடைய இருபத்தி ஐந்தாவது வயது பிறந்த நாளைக் கொண்டாடுகிறாள். நான் ஸ்டுடியோவிலிருந்து சாயங்காலம் ஐந்து மணிக்குக் கிளம்பும் போது நேரில் வந்து வலுக்கட்டாயமாகக் கூட்டிக் கொண்டு போய் விட்டாள்; என்னால் தட்ட முடியவில்லை; ராத்திரி சாப்பாட்டுக்கு வர முடியுமா என்று பார்க்கிறேன்" என்றார். எரிச்சலுடன் டெலிபோன் 'ரிஸீவரை'க் கீழே வைத்தேன். இனம் தெரியாத ஒரு குழப்பம் என் மனதை ஆக்கிரமித்துக் கொண்டது.

இரவு சாப்பாட்டுக்கும் அவர் வரவில்லை. ஏதோ சாப்பிட்டோம் என்று பெயர் பண்ணி விட்டுப் படுக்கைக்குச் சென்றேன். தூக்கம் வரவில்லை. மணி பன்னிரண்டு அடித்தது. பங்களா காம்பவுண்டுக்குள் கார் நுழையும் சத்தம் கேட்டது. அவர்தான் திரும்பிக் கொண்டிருந்தார். விளக்கைப் போட்டு விட்டு அவர் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் என்னைக் கண்டதும் "பவானி, விருந்து முடிந்ததும் ஒரு நாட்டியக் கச்சேரி இருந்தது; பாதியில் எழுந்து வர முடியவில்லை" என்றார்.

என்னுடைய ஆத்திரம் கரை புரண்டு போயிற்று. "நாட்டியக் கச்சேரி முடிந்ததும் அங்கே தங்குவதற்கு உங்களுக்குக் காரணம் ஒன்றும் அகப்படவில்லையா!" என்றேன் துடுக்காக. மறுகணமே அதுவரை அடக்கி வைத்திருந்த கோபமும் துக்கமும் பீறிட்டுக் கொண்டு வந்தன. கண்ணீரவு ஊர்ப்பதையும் கவனியாமல் 'கோ'வென்று கதறிய வண்ணம் "சரி, இப்பொழுதே இரண்டில் ஒன்று முடிவு செய்து விடுங்கள். உங்களுடைய போக்கு எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. நாளையோடு இந்த வேலைக்கே தலைமுழுக்குப் போட்டு விடுங்கள். நான் உங்களிடம் வேறு அதிகமாக ஒன்றும் யாசிக்கவில்லை" என்றேன்.

என்னை அவர் சமாதானம் செய்ய முயற்சிக்கவில்லை. "அது நடக்காத காரியம்" என்று சொல்லி விட்டுப் படுக்கைக்குச் சென்றார். அன்றிரவு முழுவதும் என் நெஞ்சில் ஏமாற்றம் குமுறிக் கொண்டிருந்தது. அடுத்த நாள் காலை நான் படுக்கையை விட்டு எழுந்திருப்பதற்கு முன்பே அவர் படப்பிடிப்பு சம்பந்தமாகப் பக்கத்துக் கிராமம் ஒன்றுக்குச் சென்று விட்டு மாலைதான் திரும்பினார். இனிமேல் அவருடன் இருப்பது இயலாத காரியம் என்ற முடிவுக்கு வந்தேன். நான் பிறந்தகம் போகத் தீர்மானித்து விட்டதை அவரிடம் தெரிவித்தேன். நான் போவதை அவர் ஆமோதிக்கா விட்டாலும் நான் போகாமலிருக்க அவர் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வதில் அவர் ஆர்வம் காட்டவில்லை. வேறு வழியின்றி பிறந்தகத்துக்குப் புறப்பட்டேன்.

★

பிறந்தகத்துக்கு வந்து விளையாட்டுப்போல் மூன்று மாதம் கழிந்து விட்டது. தம்முடைய குணம் மாறி என்னை என் கணவர் அழைத்துக் கொள்ளுவார் என்று நான் முதலில் வைத்திருந்த நம்பிக்கை மெள்ள மெள்ளக்



குறைந்து கொண்டே வந்தது. நான் இங்கே எவ்வளவு நாள் இருந்தாலும் அப்பா ஒன்றும் சொல்லப் போவதில்லை. ஆனால் நான் என்ன காரணத்தால் பிறந்த வீட்டுக்கு வந்திருக்கிறேன் என்ற உண்மையை அப்பா தெரிந்து கொண்டால்...! அதனால் அவருக்கு ஏற்படும் அதிர்ச்சியை நினைக்கும் போது எனக்குக் கவலையாயிருந்தது. நாளுக்கு நாள் என் மனோ வேதனை அதிகரித்துக் கொண்டு வந்தது. என்னுடைய நிலைமைக்குப் பரிகாரம் சொல்ல யாரை அணுகுவது என்ற கவலை வேறு என்னைச் சூழ்ந்து கொண்டது. இந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில் தான் அன்று ஒருநாள் என்னைச் சோதிப்பது போல் அந்தச் சம்பவம் நடந்தது.

அன்று பகல் சாப்பாட்டிற்குப் பின் என்னைத் தவிர வீட்டிலிருந்தவர்கள் எல்லோரும் ஏதேதோ அலுவலாக வெளியே போயிருந்தார்கள். வாசல் கதவைத் தாளிட்டுவிட்டு கூடத்திலிருந்த ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டு ஏதோ ஒரு புஸ்தகத்தைப் பக்கம் பக்கமாகப் புரட்டிக் கொண்டிருந்தேன். வாசல் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது-போய்த் திறந்தேன். எங்கள் வீட்டில் வேலை செய்யும் காத்தாயி வந்திருந்தாள். அவளுடன் இருபது வயது மதிக்கத்தக்க ஒரு பெண்ணையும் கூட்டிக் கொண்டு வந்திருந்தாள். "என்ன காத்தாயி! மணி மூன்று கூட அடிக்கவில்லையே! இவ்வளவு நேரத்திலேயே வேலைக்கு வந்துவிட்டாயே" என்றேன். "இல்லே அம்மா உங்கிட்டே வேறு ஒரு காரியமாகத்தான் வந்தேன்" என்று சொல்லிவிட்டு அவளுடன் கூட்டிக் கொண்டு வந்திருந்த பெண்ணை என்னிடம் சுட்டிக் காட்டி, "இவதான் செங்கமலம்; என் மகள். இவளைக் கலியாணம் கட்டிக் கொடுத்து ஒரு வருசமாகப் போகுது. இவ புருசன் கூடச் சண்டை போட்டுக்கிட்டு திரும்பி வந்துட்டாள். சண்டைக்குக் காரணத்தைக் கேட்டா எங்க வீட்டிலே எல்லோருக்கும் இவமேலேதான் ஆத்திரம் வருது. நாங்க எவ்வளவோ புத்தி சொல்லியாச்சு. ஒரு வேளை நீங்க சொன்னா அவ மனசு திரும்புதான்னு பார்க்கத் தான் அவளையும் என் கூட இந்த வெய்யில் நேரத்திலே அழைச்சுகிட்டு வந்தேன்" என்றாள்.

நான் பரிவுடன் செங்கமலத்தைப் பார்த்து, "ஆமாம் சண்டைக்கு என்ன காரணம், செங்கமலம்!" என்றேன். அவள் மௌனமாகவிருந்தாள். அவளுக்குப் பதிலாகக் காத்தாயி, "இவள் புருசன் வீடு கட்டுகிற கொத்து மேஸ்திரியா இருக்காரு. அவருகூட வேலை செய்யும் இடத்திலே பத்து பொண்ணுங்க சித்தாளு வேலை செய்யறாளுங்க. ஒரு நாளைக்கு வேலை மேலே இருக்கிற இவ புருசனுக்கு இவ சோறு கொண்டு கொடுக்கப் போன போது அவரு ஒரு பொம்பிளை சித்தாளு கூட ஏதோ சிரிச்சுப் பேசிக்கிட்டிருந்தாராம். அவ்வளவுதான்: இவ கொண்டு போன சோத்தை அவருக்கு எடுத்துக் கூட வைக்காமல் அவரைச் சாப்பிடச் சொல்லி விட்டு வீட்டுக்கு வந்திட்டா. வேலை முடிஞ்சு அவரு வீட்டுக்கு வந்ததும் அவர் கிட்டே ஒன்னு, அவர் பொம்பிளை சித்தாளுங்களை வேலைக்கு வெச்சுக்கிடக் கூடாது; இல்லாட்டி அவரு அந்த வேலையை விட்டுடணும்னு சொல்லியிருக்கா. அவரு எவ்வளவோ சமாதானம் சொல்லியிருக்காரு. இவ கேக்காமல் கோவிச்சுக்கிட்டு வந்திட்டா. வந்து இரண்டு மாசம் ஆகப் போவுது. இதன் பிடிவாதம் குறையக் காணோம். நீங்களே சொல்லுங்க அம்மா, ஆணாப் பிறந்தவங்க அவங்க தொழிலுக்குப் போறபோது நாலு பொம்பளைங்களோடே பேசத்தான் வேண்டியிருக்கும். அதுவும் கூட வேலையிலிருக்கிற பொண்ணுங்ககூட எப்படி பேசாமலிருக்க முடியும்! இதுக்கெல்லாம் சந்தேகப்பட்டு அவங்க செய்யறதைத் தப்பாக எண்ண முடியுமா! நீங்க படிச்சவங்க. உலகம் தெரிஞ்சவங்க. நீங்கள்தான் இவளுக்குப் புத்தி சொல்லணும்" என்று கவலையோடு சொன்னாள் காத்தாயி.

காத்தாயி சொன்ன வரலாற்றைக் கேட்டதும் என் கண் முன்னே உலகமே சுழல்வது போல ஒரு கணம் பிரமை ஏற்பட்டது! என் உள்ளத்தில்



உண்டான குழப்பத்தை வெளியே காட்டிக் கொள்ளாமலிருக்கும் பொருட்டு கொஞ்ச நேரம் மௌனமாயிருந்தேன். காத்தாயியும் செங்கமலமும் என்னை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். செங்கமலத்துக்குப் புத்தி புகட்ட எனக்கு அப்போதைக்கு அருகதையில்லை என்பது, பாவம், காத்தாயிக்கு எப்படித் தெரியும்? கிட்டத்தட்ட என்னைப் போல ஒரு நிலையிலிருக்கும் செங்கமலத்தின் விஷயத்தில் நான் கொடுக்கப் போகும் தீர்ப்பு என்னையும் கட்டுப்படுத்த வேண்டுமென்று என் மனச்சாட்சி வேறு எச்சரித்துக் கொண்டேயிருந்தது! அதே விநாடியில் ஒரு தீர்மானத்திற்கு வந்தேன். செங்கமலம் நடந்ததை மறந்து அவள் புருஷன் வீட்டிற்குத் திரும்ப வேண்டியது. நானும் அடுத்த நாளே என் கணவர் வீட்டை அடைய வேண்டியது—இது தான் நான் செய்த முடிவு. "செங்கமலம், நீ வீணாக மனதை அலட்டிக் கொள்ளாமல் மறுபடியும் உன் புருஷன் வீட்டுக்குப் போவதுதான் உனக்கு நல்லது" என்று என் அபிப்பிராயத்தை வெளியிட்டேன். "சரிங்க" என்றாள் அந்தப் பெண். அவளைக் கூட்டிக் கொண்டு காத்தாயி திரும்பிப் போனாள்.

*

அடுத்த நாள் காலை ரயிலில் என் பிறந்த ஊரை விட்டுக் கிளம்பி அன்று மாலை சென்னை வந்து சேர்ந்தேன். டாக்ஸி ஒன்றை அமர்த்திக் கொண்டு என் கணவரின் பங்களாவை அடைந்தேன். வாசற்காப்போன் என்னை அடையாளம் தெரிந்துகொண்டு என் வரவை அறிவிப்பதற்காக உள்ளே ஓடினான். அவனைத் தடுத்து நிறுத்திவிட்டு நான் மட்டும் உள்ளே சென்றேன். என் கணவர் அவர் அறையில் உட்கார்ந்துகொண்டு எதையோ எழுதிக் கொண்டிருந்தார். காலடிச் சத்தம் கேட்டதும் திரும்பிப் பார்த்தார் "அட, பவானியா! வா, வா, உனக்குத்தான்...நீ உடனே திரும்பிவர வேண்டுமென்று கடிதம் எழுத ஆரம்பித்தேன். என் மேல் கோபமில்லையே!" என்று கேட்டு ஆர்வத்துடன் என் கைகள் இரண்டையும் பற்றிக் கொண்டார். அவர் குரல் தழதழத்தது. என் கண்களிலும் நீர் சுரந்தது. பக்கத்திலிருந்த நாற்காலியில் என்னை உட்கார வைத்துவிட்டு, "பவானி! இன்றைக்குத்தான் உன் இஷ்டத்தை என்னால் பூர்த்திசெய்ய முடிந்தது. இன்றோடு என்னுடைய டைரக்டர் ஒப்பந்தம் முடிவடைந்தது. நாளை முதல் நானாக இஷ்டப்பட்டால் இந்த வேலையில் தொடர்ந்து இருக்கலாம். ஆனால் அப்படிச் செய்ய நான் விரும்பவில்லை!" என்றார்.

"எனக்காக நீங்கள் இந்தத் தியாகத்தை இப்பொழுது செய்வது அவசியமில்லையே" என்றேன் மிக்க மரியாதையுடன்.

"மூன்று மாதத்துக்கு முன்பே நான் இதைச் செய்ய முடியாததற்குக் காரணத்தை நான் இப்பொழுது உனக்குச் சொல்லித்தான் ஆக வேண்டும். ஒருவேளை உனக்குத் தெரிந்திருக்காது. நாம் இருக்கும் பங்களா, நம்முடைய கார், ஊரில் நான் வாங்கியிருக்கும் நில புலன்கள் இவையெல்லாம் போன மாதம்தான் உண்மையிலேயே நமக்குச் சொந்தமாயின. கடன் மூலமாகத்தான் இவ்வளவு சொத்துக்களையும் வாங்கியிருந்தேன். அந்தக் கடன் அடைபடும் வரை உழைத்துத் தீரவேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டு விட்டது. இதையெல்லாம் அன்றைக்கே எடுத்துச் சொன்னாலும் உனக்கிருந்த மனோநிலையில் என்னுடைய கஷ்டத்தையும் கவலையையும் நீ உணர்ந்திருக்க மாட்டாய் என்பது நிச்சயம்" என்றார்.

அவர் சொன்ன தகவல் எனக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. அவர் என்னைப்பற்றி சொன்னது உண்மைதான் என்று என் மனம் ஒப்புக்கொண்டது. "இப்போது நான் உங்கள் மனதை நன்றாக அறிந்துகொண்ட பின் நீங்கள் தொடர்ந்து டைரக்டர் பதவியை வகிப்பதில் எனக்கு ஆட்சேபம் ஒன்றுமில்லை" என்றேன்.

"உனக்கு என்னவோ இஷ்டமாயிருக்கலாம். ஆனால் எனக்கு இந்த விஷப் பரீட்சையைத் தொடர்ந்து நடத்த மனமுமில்லை; தைரியமுமில்லை!" என்றார். அதைக் கேட்டதும் எனக்கு என்னவோ போலிருந்தது. என்னுடைய போக்கு அவர் மனதை எவ்வளவு தூரம் பாதித்திருந்தது என்பதை அப்பொழுது தான் அறிந்து கொண்டேன்.

"அப்படியானால் இனிமேல் என்ன செய்வதாக உத்தேசம்" என்றேன்.

"நீ இங்கிருந்து போனவுடனேயே ஒரு திரைக் கதாசிரியனாக நான் மாறி விடுவதுதான் உசிதம் என்று எனக்குப் பட்டது. அதை அமுலுக்குக் கொண்டு வந்ததில் பலனும் கிடைத்து விட்டது. நான் எழுதியிருக்கும் முதல் கதையை ஒரு பட முதலாளி வாங்கிக்கொள்ள முன் வந்திருக்கிறார்" என்று சொல்லிக் கொண்டே மேஜைக்குள்ளிருந்த கையெழுத்துப் பிரதி ஒன்றை எடுத்துக் கொடுத்தார். "இல்லாளின் இதயம்" என்று மகுடமிட்டிருந்த அந்தத் திரைக் கதையின் சுருக்கம் முதலில் சில பக்கங்களில் கொடுக்கப்பட்டிருந்ததைப் படித்தேன். ஒருகாலத்தில் நான் அனுபவித்த மனோ வேதனையை அடிப்படையாகக்கொண்டு எழுதியிருந்த அந்தக் கதையைப் பார்த்ததும் வியப்படைந்தேன்.

"பெண்கள் மனதை இவ்வளவு தூரம் அறிந்திருப்பீர்கள் என்று எனக்கு இப்பொழுதுதான் தெரிகிறது" என்றேன்.

"உணர்ச்சியே உருவான உன்னைக் கலியாணம் செய்து கொண்ட பின் எனக்கு இது கூடத் தெரியாமலிருக்க முடியுமா!"

*

பிறகு அன்று மாலை நாங்கள் இருவரும் சேர்ந்து வெளியே போனோம். அப்போது, "பவானி! இம்மாதிரி நாமிருவரும் ஒன்றாக வெளியே போய் எத்தனையோ நாட்களாகி விட்டன, இல்லையா! நாம் இருவரும் இப்போது தான் வாழ்க்கை ஆரம்பிப்பதுபோல் எனக்குத் தோன்றுகிறது. நீ என்ன சொல்லுகிறாய்!" என்று கேட்டார்.

என் மனதில் எழும்பிய எண்ணங்களுக்கு எதிரொலி போல் அமைந்த அவருடைய வார்த்தைகளைக் கேட்டதும் என் உடல் புல்லரித்தது.

கிரகணம்

'கீர்வாஸன்'



அந்த அறையில் அப்போது நிலவிய பயங்கர அமைதியை மீறி நின்றது கடிகாரத்தின் 'டிக், டிக்' என்ற மெல்லிய ஒலிதான்!

கண் கொட்டாமல் டாக்டரின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த ராகவன், "இப்போது ஜுரம் எவ்வளவு இருக்கிறது, டாக்டர்!" என்று கேட்டான்.

"நூற்றி மூன்று!" என்ற டாக்டரின் குரல் ஏனோ உணர்ச்சியற்று ஒலித்தது.

"ஏன் டாக்டர், ஜுரம் கொஞ்சங்கூட இறங்கவில்லையே!" என்று கேட்டான் ராகவன்.

"நானும் அதுதான் பார்க்கிறேன். இது என்னவோ எனக்குப் பிடிபடாத விஷயமாக இருக்கிறது" என்று கூறிய டாக்டர், சட்டென்று, "ஆமாம், நீங்கள் மருந்தைச் சரிவரக் கொடுத்துக் கொண்டு வருகிறீர்கள் அல்லவா!" என்று கேட்டார். இக்கேள்வி அர்த்தமற்றது என்பது அவருக்கே பட்டிருக்க வேண்டும். அதைத் தொடர்ந்து, "இருக்கட்டும், இன்னும் ஒருநாள் பார்க்கலாம். அதற்குள் ஜுரம் இறங்காவிட்டால் ஆஸ்பத்திரிக்கே கொண்டு போய்க் கவனிப்பதுதான் நலம்" என்று சொல்லியவாறே வெளியே வந்தார். வழி அனுப்புவதற்காக அவரைப் பின் தொடர்ந்தான் ராகவன்.

இச்சம்பாஷணையைக் கேட்டவாறு அருகில் நின்றுகொண்டிருந்த ராகவனுடைய மனைவி ஜானகியின் முகம் இருளடைந்தது. அவளுடைய கனத்த இருதயத்தில் எண்ணங்கள் அலை மோதின.

• • •

நோயாளி வேறு யாருமல்ல, ராகவனின் அத்தை பெண் ஸரோஜாதான். சிறு வயதிலேயே அவள் தாயை இழந்தவள். ஆகவே, தாயில்லாப் பெண்ணான ஸரோஜாவைத் தாம் வளர்ப்பதாகச் சொல்லி ராகவனுடைய தகப்பனார் தம் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்து வைத்துக் கொண்டார்.

குழந்தைப் பருவத்திலிருந்தே இணைபிரியாது வளர்ந்து வந்த ராகவனையும், ஸரோஜாவையும் தக்க வயது வந்ததும், தம்பதிகளாக்க ராகவனுடைய பெற்றோர் விரும்பினர். ஆனால் பரஸ்பரம் சகோதர மனப்பான்மை வேரூன்றி விட்ட அவர்களுடைய உள்ளத்திலே காதலுக்கு இடம் ஏது! ஆகவே அவர்கள் பெற்றோரின் விருப்பத்துக் கிணங்க மறுத்து விட்டனர். இந்தக் காரணம் பெரியோர்களுக்கும் நியாயமாகப் பட்டதால், ஸரோஜாவுக்கு வேறு இடத்தில் விவாகம் நிச்சயமாயிற்று. மாலையிட்டவன், ராகவனோடு காலேஜில் ஒன்றாகவே படித்தவனும், அவனுடைய ஆப்த சிநேகிதனுமான ரமணி என்பவன்தான்.

கல்யாணமானவுடன் குடித்தனம் செய்வதற்காகக் கணவனுடன் பம்பாய் சென்ற ஸரோஜா, அதிகமாக ஊர்ப் பக்கம் வந்ததில்லை. ஆனால் அடிக்கடி கடிதப் போக்குவரத்து மட்டும் தொடர்ந்து நடந்து வந்தது. எட்டு வருஷங்களுக்குப் பிறகு, ஒரு வருஷத்துக்கு முன்னர்தான் அவள் தாயாகப் போகிறாள் என்ற நற்செய்தி வந்தது. மாதங்கள் செல்லச் செல்ல அவள் பலவீன மடைந்து கொண்டே வருகிறாள் என்னும் செய்தி வந்தது. பிறகு பிரசவ சமயத்தில் ஆபரேஷன் செய்து குழந்தையை எடுக்க நேர்ந்தது என்றும் குழந்தை இறந்து விட்டது என்றும் அவள் பிழைத்தது தெய்வாதீனம் என்றும் கடிதம் வந்தது. அவள் பூரண குணமடைவதற்கும் மற்றும் சில காரணங்களை முன்னிட்டும் இட மாற்றத்தின் அவசியத்தை டாக்டர் வற்புறுத்துகிறார் என்றும் ராகவனுக்குக் கடிதம் வந்தது. ரமணியிடமிருந்து கடைசியாக வந்த அந்தக் கடிதம் ராகவனின் உள்ளத்தை உருக்கி விட்டது. ஸரோஜாவிடம் வாத்ஸல்யம் மேலிட்டிருந்த ராகவன் உடனே அவளைத் தன்னிடம் கொண்டுவந்து விடும்படி பதில் எழுதினான். லீவு கிடைக்காத காரணத்தால் தக்க துணை ஒன்று தேடி ஸரோஜாவை ஊருக்கு அனுப்பி வைத்தான் ரமணி.

ஸரோஜா ராகவனிடம் வந்து கிட்டத்தட்ட பத்து மாதங்களாகி விட்டன. ராகவனும், அவன் மனைவி ஜானகியும் போட்டியிட்டுக் கொண்டு பொழிந்த அன்பு மழையில் வளம் பெற்று வந்தாள் ஸரோஜா. பெண்களின்

இயற்கைக்கு முற்றிலும் மாறாக, ஜானகியும் ஸரோஜாவும் மனவேற்றுமையின்றி ஒட்டுதலாகப் பழகி வந்தது ராகவனுக்கும் மிக ஆறுதலாக இருந்தது.

பாவம், அமைதியாகச் சென்று கொண்டிருந்த அவர்களுடைய வாழ்வைக் குலைக்க வென்று அங்கே வந்து சேர்ந்தாள் ஜானகியின் தாயார். இருந்த நாட்களெல்லாம் பெண்ணின் உள்ளத்தில் விஷத்தை விதைத்தது போதாதென்று, ஊருக்குப் புறப்படுவதற்கு முன்பு அந்த அம்மாள், "ஏன் ஜானகி, நீ இவ்வளவு அசடாக இருப்பாயா! கண்முன்னே உன் புருஷனும் அவளும் அடிக்கும் கொட்டத்தைப் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்கிறாயே! அடிக்கொரு தடவை 'ஸரோ, ஸரோ' என்று உன் புருஷன் அவளைக் கொஞ்சுவதும், உடனே இந்த வெட்கங் கெட்டவள் பல்லைக் காட்டிக்கொண்டு அவன் முன்னே சதிராடுவதும், கொஞ்சங்கூட நன்றாயில்லை. என்னவோ அம்மா, உனக்கே ஒன்றுமில்லாத போது எனக்கென்ன வந்தது! இருந்தாலும் பெற்ற வயிறு கேட்கவில்லை. அதனால்தான் சொல்கிறேன். முன்னால் அவளை இங்கிருந்து விரட்டும் வழியைப் பார்; இல்லாவிட்டால் பின்னால் ஏதாவது விபரீதமாகி உன் வாழ்வுதான் பாழாகும்!" என்று சற்றுக் கடுமையாகவே பயமுறுத்தி விட்டுப் போனாள்.

கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையுமல்லவா! தாயின் துர்ப்போதனையில் அடியோடு மனம்மாறிய ஜானகியின் களங்கமற்ற உள்ளத்திலும், கருணை நிறைந்த கண்களிலும் சந்தேகப் பேய் குடிபுகுந்து விட்டது!

'ஸரோஜா இங்கு வந்து ஒரு வருஷமாகப் போகிறதே! உடம்பைத் தேற்றிக் கொண்டு வரும்படி அனுப்பிய கணவன் ஏன் அவளைத் திரும்ப அழைக்கவேயில்லை! அப்போதுகூடத் தானே நேரில் வராமல் யாரையோ துணை கூட்டி அல்லவா அவளை அனுப்பினான்! ஒரு கால், இவருக்கும் ஸரோஜாவிற்கும் நேர்மையற்ற உறவு இருந்ததாக ஏதாகிலும் காதில் பட்டு, சொல்லாமல் கொள்ளாமல் அவளை இப்படித் 'தள்ளி' வைத்திருக்கிறானோ! இவர் அதை என்னிடம் மறைக்கிறாரோ! அவளை ஊருக்கு அனுப்புவது பற்றி இவரும் பேச்சே எடுப்பதில்லையே! ஐயோ! எத்தனை அசடு நான்! இவர்களுடைய சிநேகத்தின் தன்மையை அறியாமல்......'—இந்த ரீதியில் ஓடின ஜானகியின் சிந்தனைகள்.

சந்தர்ப்பத்திற் கேற்றாற்போல விதி வேறு அன்று சதி செய்து விட்டது!

உல்லாசப்பிரியனான ராகவன், அன்று தன் வீட்டுத் திறந்த மாடியில் நிலாச் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்துவிட்டுத் தம்பதி சமேதர்களாக நாலைந்து நண்பர்களையும் அழைத்திருந்தான். இரவு எட்டு மணி சுமாருக்கு நிலவுப் பந்தலின் கீழ் குழுமிய அச் சிறு கூட்டம் பத்தரை மணிக்குத்தான் கலைந்தது. மனத்தில் எழுந்த தாங்கமுடியாத வெறுப்பையும் பொறாமையையும் அடக்கிக் கொண்டு குதூகலமாக இருப்பது போலவே நடித்தாள் ஜானகி.

நண்பர்களுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு மனைவி பின் தொடரத் தன் அறைக்குச் சென்ற ராகவன் விரைவிலேயே நித்திரை போய்விட்டான். எவ்வளவு நேரம் தூங்கிக் கொண்டிருந்தானோ, தெரியாது! கதவை யாரோ லேசாகத் தட்டும் சத்தம் கேட்கவே, சட்டென்று விழித்துக் கொண்டு, கதவைத் திறந்து பார்த்தான். ஸரோஜா!

"என் ஸரோ, இன்னும் தூங்கவில்லை நீ!" என்று கேட்டான் ராகவன் திடுக்கிட்டவனாக.

தன் அறைப் பக்கம் நடந்து கொண்டே சன்னஸ்வரத்தில் கூறினாள் ஸரோஜா: "ஒன்றுமில்லை ரகு, நிலாச் சாப்பாட்டுக்குப் போவதற்கு முன்னால் ஸ்வாரஸ்யமான கட்டத்தில் விட்டுப் போன அந்த நாவலை இப்போது தான்



படித்து முடித்தேன். பிறகு, படுத்துக் கொள் வதற்கு முன்பு, என் வழக்கப்படி, பூவையும் சங்கிலியையும் கழற்றி வைக்க எண்ணிக் கழுத்தைத் தடவிப் பார்த்த போது சங் கிலியைக் காணோம்! தேடாத இடங்களெல் லாம் தேடிவிட்டேன். கிடைக்கவில்லை. மாடி யில் விழுந்திருக்குமோ வென்று ஒரு சந்தேகம். ஆனால், இந்த நள்ளிரவில் இருண்டு கிடக்கும் படிகளில் ஏறி அங்கு போய்த் தேட எனக்குப் பயமாக இருந்தது. ஆகவே, உங்களில் யாரை யாவது துணைக்கு அழைத்துக் கொண்டு போக லாம் என்று எண்ணி எழுப்பினேன்.''

ஸரோஜாவின் வெளிறிய முகத்தைப் பார்த்த ராகவன், ''ஒன்றும் பயப்படாதே, ஸரோ! சங்கிலி எங்கேயும் போய் விடாது'' என்று சொல்லியவாறே முன்னே சென்றான். அவனைப் பின் தொடர்ந்தாள் ஸரோஜா. அவர்கள் ஹாலைக் கடந்து சென்ற போது சுவரிலிருந்த கடிகாரத்தில் மணி ஒன்றடித்தது.



நல்ல வேளை! மாடியின் திறந்த வெளியில் பால்போல் பொழிந்த நிலவில் மின்னிக் கொண்டு கிடந்தது ஸரோஜாவின் சங்கிலி! தேய்ந்து போன மூகப்பு விட்டுக் கிடந்த அச் சங்கிலியைப் பார்த்ததும், ''இதோ அகப்பட்டு விட்டது, ஸரோ!'' என்று மகிழ்ச்சியுடன் கூறிய வண்ணம் அதை எடுத்துக் கொண்டு திரும்பினான் ராகவன்.

ஆனால், இதற்கிடையில்!

திறந்திருந்த கதவுகளின் வழியாகச் ஜிலுஜிலு வென்று வீசிய குளிர்ந்த காற்று ஜானகியின் தூக்கத்தைக் கலைத்து விட்டது. விழித்துக் கொண்ட ஜானகி, முற்றத்துச் சுவரின் கோடி யில் நிலவு வெள்ளிக் கோடு கிழித்திருப்பதைக் கண்டதும், ''இதென்ன, கதவு திறந்து கிடக் கிறதே!'' என்று சொல்லிக் கொண்டே படுக் கையில் எழுந்து உட்கார்ந்தாள். பக்கத்தில் பார்த்தால் ராகவனைக் காணவில்லை!

விவரிக்க இயலாத ஓர் பயம் சூழ வெளியே வந்த ஜானகி, ஸரோஜாவின் அறையும் திறந்து கிடப்பதைக் கண்டாள். இதற்குள் அவளை யறியாமலே அவளுடைய கால்கள் ஹாலுக்குள் வந்து விட்டன. அப்போது தான், சங்கிலி அகப்பட்டு விட்ட சந்தோஷத்தில், மெல்லிய குரலில் ஏதோ சிரித்துப் பேசியவாறு படியில் இறங்கி வந்து கொண்டிருந்தனர் ராகவனும் ஸரோஜாவும்.

போராடிக் கொண்டிருக்கும் பல வகை உணர்ச்சிகளின் ஓர் உருவமாக, நிலைத்த விழிகளுடன் அவர்களைப் பார்த்துக் கொண் டிருந்த ஜானகியின் ரத்தக் குழாய்கள் அச் சமயம் வெடிக்காமலிருந்தது ஆச்சரியந்தான்!

'ஓஹோ, நிலவொளியில் உல்லாசமாக்கும்!' என்று அருவருப்புடன் மனத்துள் குமுறிய ஜானகி அறைக்குள் வந்ததும், ராகவனைப் பார்த்து, ''எங்கே போயிருந்தீர்கள்!'' என்று கேட்டாள்.


நடந்தவற்றை நடந்தபடியே கூறினான் ராகவன்.

அவனுடைய வார்த்தைகளில் ஜானகிக்கு என்னவும் நம்பிக்கை பிறக்கவில்லை. ''கத வைத் தட்டினது எனக்குக் கேட்கவில்லையே!'' என்றாள் மறுபடியும்.

கேள்வியின் கருத்தை உணராத ராகவன், ''உன்னுடைய தூக்கந்தான் பிரசித்தமான தாயிற்றே!'' என்று பரிகாசமாகச் சிரித்தான்.

ராகவனின் கேலி ஜானகியின் ஆத்திரத்தைத் தான் மேலும் கிளறியது. ''அப்படியே இருக் கட்டுமே! அதற்காக இந்த நடுநிசியில் பேய் பிசாசுகள் மாதிரியாகவா போய்த் தேட வேண்டும்! காலையில் பார்த்துக் கொண்டால் போதாதா!'' என்றாள் சிறிது கடுமையாக.

''ஓஹோ, உப்பு ஜாடியை மூடவில்லை, ஊறுகாய் ஜாடி திறந்து கிடக்கிறது என்றெல் லாம் நீ எத்தனை நாள் என் உயிரை வாங்கி அழைத்துப் போயிருக்கிறாய்! அதெல்லாம் உனக்குப் பிரமாதமாகத் தோன்றியது. இந்தச் சங்கிலி தாழ்ந்து விட்டதோ! காலையில் பார்த்துக் கொள்வதாம், காலையில்! ஏன், இப் போது போனதில் என்ன தவறு!'' என்று கேட்டான் ராகவன் சற்று உரக்க.



டாக்டர் :—முதல் இன்ஜெக்ஷன் தான் வலிக்கும். இரண்டாவது இன்ஜெக்ஷன் வலிக்கவே வலிக்காது!

நோயாளி :—டாக்டர் ஸார்! அப்படியானால் எனக்கு இரண்டாவது இன்ஜெக்ஷனையே முதலில் கொடுங்களேன்!

இருட்டில் அவன் முகம் தெரியாமற் போனாலும் கோபத்தின் சாயை அவன் குரலில் தென்பட்டதை உணர்ந்தாள் ஜானகி.

'ஐயோ, எவ்வளவு அழகாகக் கதை ஜோடித்து என்னை ஏமாற்றி விட்டார்கள்! தங்களுடைய இன்பத்துக்காகச் சங்கிலியின் முகப்பைக் கத்தரிப்பதுதானா இவர்களுக்குப் பெரிது!' என்று துக்கம் தொண்டையை அடைக்கத் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினாள் ஜானகி!

ஒரு வாரம் சென்றது. ராகவன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ஸரோஜா அவனுக்குப் பரிமாற, ஜானகி அடுப்பண்டை ஏதோ வேலையாக இருந்தாள்.

"ரகு, நீ கொடுத்த புத்தகத்தின் முதல் பாகத்தைப் படித்துவிட்டேன். இரண்டாவது பாகம் எங்கே இருக்கிறது!" என்று கேட்டாள் ஸரோஜா.

"ஏன், புஸ்தகப் பீரோவில் இருக்குமே!"

"இல்லையே, நன்றாகப் பார்த்துவிட்டேனே!"

"அப்படியானால் மேலே அடித்திருக்கும் பலகையில் எங்கேயாவது கிடக்கும்."

இப்பேச்சைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள் ஜானகி. அவளுடைய உள்ளத்தைத் துளைத்துக் கொண்டிருந்த பொறாமைப் புழு மின்னல் வேகத்தில் வேலை செய்தது. ஏதோ காரியமாகச் செல்பவள் போல் அங்கிருந்து நழுவி, நேரே ஏணி வைத்திருந்த இடத்துக்குப் போனாள். ஏணியின் மேல் பகுதியிலிருந்த இடைக் கட்டைகளில் ஒன்று நடுவில் நன்றாக விரிந்திருப்பதும், அதை மாற்றக் கை வராததால், அதை ஒட்டினாற் போலப் பலமான கயிறு ஒன்று கட்டி வைத்திருப்பதும் அவளுக்குத் தெரியும். கண நேரத்தில் அக் கயிற்றை நடுவே துண்டித்து விட்டாள்!

நன்றாக உடையணிந்து, கண்ணாடியில் பிரதிபலித்த தன் உருவத்தைத் தானே ரஸித்துக் கொண்டிருந்த ராகவனுடைய செவிகளில் பெருத்த சத்தத்துடன் ஏதோ தடாலென்று விழும் சத்தம் கேட்டது. அலறி யடித்துக் கொண்டு வெளியே வந்தவன் அப்படியே கற்சிலை போலாகிவிட்டான். சுவரில் ஏணியைச் சார்த்தி, அதன் மேலேறித் தான் விரும்பிய புஸ்தகத்தை எடுக்க முயன்ற ஸரோஜா கீழே விழுந்து பேச்சு மூச்சில்லாமல் கிடந்தாள்! ஆம், கண்மூடித்தனமான பொறாமையும் சந்தேகமும் தங்கள் முழு வன்மையையும் அங்கே காட்டியிருந்தன!

அக் காட்சியைப் பார்த்துத் துடித்துப்போன ராகவன் ஸரோஜாவைக் குழந்தைபோல் தூக்கிப் பக்கத்திலிருந்த சோபாவில் கிடத்திவிட்டு, டாக்டரை அழைத்துவர ஓடினான்.

அவளுடைய நெற்றியிலும், மற்றும் சில பாகங்களிலும் பட்டிருந்த காயங்களிலிருந்து பெருகிய ரத்தத்தை நிறுத்திக் கட்டுகள் போட்ட டாக்டர், "உடம்பில் இடது புறமாக நல்ல அடி பட்டிருக்கிறது! எலும்பு ஒன்றும் முறியவில்லை யென்றே நினைக்கிறேன். இருந்தாலும் 'எக்ஸ்-ரே' எடுத்துத்தான் அதை நிச்சயிக்க முடியும். அடிபட்ட அதிர்ச்சியால் இன்னும் சற்று நேரத்தில் ஜுரம் கண்டு விடும். ஆனால் 'டெம்பரேச்சர்' அதிகமாகி விடாமல் நாம் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்று சொல்லி ஏதோ மருந்தை எழுதி அதைக் கொடுக்கும் முறையையும் விளக்கிவிட்டுச் சென்றார்.

காலம் தவறாமல் தானே மருந்து கொடுப்பதாகக் கூறி அதை அப்படியே கீழே கொட்டி வந்தாள் ஜானகி. தன் நினைவே யில்லாமல் கிடக்கும் ஸரோஜாவுக்கோ, மனைவியிடம் பூரண நம்பிக்கை வைத்திருந்த ராகவனுக்கோ இந்தச் சதி எப்படித் தெரியும்!

அதனால் தானோ என்னவோ, டாக்டர் தம் தொழில் முறைப்படி, "நீங்கள் மருந்தைச் சரிவரக் கொடுத்துக் கொண்டு வருகிறீர்கள் அல்லவா!" என்று வினவியது ஜானகியின் குற்றமுள்ள நெஞ்சில் புயலைக் கிளப்பிவிட்டது!

* * *

ஜானகியின் சிந்தனைகள் தடம் மாறிச் சென்றன. "ஸரோஜாவின் ஒழுக்கம் நேர்மையற்றதுதான் என்று தீர்மானமாக முடிவு கொண்டல்லவா அவளுக்கு இவ்வாறு கொடுமை புரிந்து வருகிறேன்! அப்படியில்லாமல் அவள் மாத்திரம் நிரபராதியாக இருந்து விட்டால்......! ஐயோ, நான் செய்திருக்கும் மகத்தான பாபச் செயல்களுக்குப் பிராயச்சித்தமே கிடையாதே! எப்படியாவது இவர்களுக்கிடையே உள்ள உறவு எத்தகையது என்று சந்தேகமறத் தெரிந்து விட்டால்!...ஆம், ஸரோஜாவிடமிருந்து இவருக்கு வந்திருக்கும் கடிதங்களில் ஏதாவது ஒன்றில் கூடவா என்னுடைய சந்தேகத்துக்கு ஒரு குறிப்பு கிடைக்காமல் போய் விடும்!"

மனச்சாட்சியின் தீவிரப் போராட்டத்தில் யோசனைகள் பளிச்சென்று உருவாயின.

சாவிக் கொத்திலிருந்து முன் ஏற்பாடாக ராகவனுடைய பெட்டிச்சாவியை நீக்கி வைத்துக் கொண்ட ஜானகி, அவன் ஆபீசுக்குப் போனதும், பெட்டியைத் திறந்து கடிதங்களைப் பார்வையிட ஆரம்பித்தாள். என்ன ஏமாற்

றம்! ஸரோஜாவின் கைப்பட வெகு அபூர்வமாகத்தான் கடிதங்கள் வந்திருந்தன. ராகவனுக்கு ஒரு ஸகோதரி இருந்து, அவளிடமிருந்து கடிதங்கள் வந்தால் எப்படியிருக்குமோ, அப்படித்தான் இருந்தன அந்தக் கடிதங்கள்யாவும்.

ஜானகியின் கண்கள் சட்டென்று அகல விரிந்தன. ஒழுங்காகக் கோத்து வைக்கப் பட்டிருந்த அக்கடிதங்களைப் புரட்டியபோது, 'ரகஸ்யம்' என்ற குறிப்புத் தாங்கிய ஒரு கடிதம் காணப் பட்டது. யாருக்குத் தான் ஒரு ரகஸ்யத்தை அறிவதில் ஆவல் கிடையாது! ஜானகி அதைப் பிரித்துப் படித்தாள்.

"ஸரோஜாவை வீட்டுக்கு அழைத்து வந்து விட்டேன். வந்ததிலிருந்து, 'ஏழு வருஷங்களாக ஏங்கி நின்று, கடைசியாக என் கலி தீர்ந்து உங்களையும் மகிழ்ச்சியுறச் செய்யும் காலம் வந்து விட்டதென்று இறுமாந்திருந்த என் தலையில் இப்படி இடி விழுந்து விட்டதே! அந்தச் சிசுவோடு நானும் போயிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?' என்று அவள் தன்னையே நொந்து கொள்கிறாள். ஒரு குழந்தைக்குத் தாயாக வேண்டுமென்று அவளுக்குத்தான் எவ்வளவு ஆசை! நான் கூடப் பரிகாசமாக, 'அட அசடே, இதற்காகவா வருந்துகிறாய்? ஆண்டவன் அருள் இருந்தால் அடுத்த வருஷமே நீ குழந்தைக்குத் தாயாகி விடுவாய்!' என்றேன். ஆனால் அது பச்சையான பொய் என்பதை நான் அறிவேன். ஆமாம், ரகு! 'பெரிய உயிரை' அரும்பாடு பட்டுக் காப்பாற்றிய அந்த டாக்டர் என்ன சொன்னார், தெரியுமா?

'மிஸ்டர் ரமணி! உங்கள் மனைவி புனர் ஜன்மந்தான் எடுத்திருக்கிறாள். இம்மாதிரி ஆபரேஷன் செய்யப்பட்டவர்கள் மறுபடியும் தாயாக முடியுமா என்பது சந்தேகந்தான். ஆபரேஷனால் பாதிக்கப்பட்ட பாகங்களின் வளர்ச்சியைப் பொறுத்திருக்கிறது அது. எப்படியிருந்தாலும், மிகவும் துர்ப்பலமாகக் காணப்படும் உங்கள் மனைவி குறைந்தது இரண்டு மூன்று வருஷங்களுக்காவது தாய்மை நிலையை எய்திவிடக்கூடாது! மனிதன் என்றுமே உணர்ச்சிகளுக்கு அடிமையானவன்; அவற்றை அவன் வெற்றி கொள்ளவே முடியாது என்னிடம் வரும் கேஸ்களில் பல இவ்வுண்மையைத் தான் வற்புறுத்துகின்றன. ஆகவே, நீங்கள் இருவரும் சில காலம் பிரிந்து வசிப்பதுதான் மேலானது. இன்னொரு விஷயம்: நம்முடைய ஸ்திரீகளின் மனோபாவமே தனி. ஒரு குழந்தையைப் பெற்று அதைத் தன் கணவன் கையில் கொடுத்தால் தான் தம் வாழ்வு பூர்த்தியாவதாக அவர்கள் எண்ணம். அவ் விருப்பத்துக்குத் தடையாகத் தங்களிடமே ஒரு குறை யிருப்பதாக ஏக்கம் வந்துவிட்டால், பிறகு ஆயிரம் மருந்துகள் சாப்பிட்டாலும் உடம்பு தேறாது. தேக நிலைமையைப் பெரிதும் பாதிக்கும் சக்தி மனத்துக்கு உண்டு. ஆகவே, இவ் விஷயம் உங்கள் மனைவிக்கு—அதுவும் மோசமான இந்த நிலையில் தெரியவே கூடாது!'

ரகு, இதைக் கேட்டது முதல் ஸரோஜாவின் அழகுத்திரள் எந்த நிமிஷம் என்னைப் பலவீனமடையச் செய்து விடுமோ என்ற பயம்தான் என்னைச் சூழ்ந்து நிற்கிறது! ஆனால், அவளை நான் எங்கே அனுப்புவது? ஸரோவிற்கு—ஏன், எனக்குங் கூடத்தான்—உன்னைத் தவிர வேறு யார்? நீ அவளிடம் வைத்திருக்கும் அளவற்ற பாசம் எனக்குத் தெரியும். உன்னைக் கைப் பிடித்தவளும் சிறந்த குணவதியாகத்தான் இருக்க வேண்டும். ஆகவே, தயவு செய்து நீங்கள் ஸரோவை அழைத்து வைத்துக் கொள்வீர்களா?

ஸரோவுக்கு என்னைப் பிரிய மனமில்லை தான். ஆயினும், பம்பாயின் ஆலைப் புகையும், சந்தை இரைச்சலும் அவள் உடம்புக்கு ஆகாதென்று டாக்டர் வற்புறுத்துவதாகவும், உடம்பைத் தேற்றிக் கொள்ள வேறிடம் செல்லத்தான் வேண்டும் என்றும் பல சமாதானங்கள் கூறி, ஒருவாறு அவள் சம்மதத்தைப் பெற்று விட்டேன்......... !"


ரகஸ்யத்தைக் காப்பாற்றும் சக்தி ஸ்திரீகளிடம் மிகக் குறைவு என்ற அபிப்பிராயமுடைய ராகவன் இக் கடிதத்தைப் பற்றி ஜானகியிடம் ஒன்றும் தெரிவிக்காதது வியப்பில்லை அல்லவா!

கடிதத்தைப் படித்து முடித்த ஜானகியின் தலையில் ஒரு எரிமலை புரண்டு வீழ்ந்தது! விதியின் பயங்கரமான பேய்ச்சிரிப்பு அவள் இதயத்தைக் கலக்கியது; அவள் செய்த கொடிய வஞ்சகம் கோரமாக விசுவரூபமெடுத்துக் காட்சியளித்தது!

தாயின் துர்ப்போதனையில் மதிமயங்கி விட்ட தன்னை மேலும் சோதனை செய்து விடாமல் மன்னித்து, ஸரோஜாவுக்கு உயிர்ப்பிச்சை யளிக்கும்படி ஜானகி அனவரதமும் தேவியின் படத்தின் முன்பு கண்ணீர் பெருக்கி நின்றாள். தான் செய்த துரோகத்துக்கு ஈடாக இரவு பகலென்று பாராமல் அவளுக்கு உழைத்தாள்.

நல்ல வேளை! தெய்வம் கண் திறந்து விட்டது! ஸரோஜாவும் ஊனம் ஏதுமின்றிப் பிழைத்தெழுந்தாள்!

கிரகணத்திலிருந்து விடுபட்ட பூரண சந்திரனின் குளிர்ந்த நிலவு உலகெங்கும் பரவுவது போல, பொறாமையும் சந்தேகமும் திரையிட்டு வைத்திருந்த ஜானகியின் உள்ளம் நிர்மலம் அடைந்ததும், பழையபடி அவ்வீட்டில் அன்பு வெள்ளம் பெருகியோடத் தலைப்பட்டது!



சித்தூர் போலீஸ் டிப்டி ஸுபரின்டென்ட் ஸ்ரீ ஏ. கிருஷ்ணசாமி அவர்களின் ஸகோதரர் அட்வகேட் ஸ்ரீ எஸ். சீதாபதி அவர்களின் குமாரி சௌ. இந்திராவுக்கும், வண்ணார்பேட்டை ஸ்ரீ ஏ. வி. சங்கரய்யர் குமாரர் ஸ்ரீ எஸ். சுப்பிரமணியம் பி. ஏ.,க்கும் மே மாதம் 25ல் திருநெல்வேலியில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.

மத்திய கேந்திரம்

ஜெயமணி

சௌதி அரேபியா—3

உலகத்திலே வேறு எந்த நாட்டிலும் இல்லாத பல விசித்திரமான, விபரீதமான, பிற்போக்கான அம்சங்களைச் சௌதி அரேபியாவில் காணலாம்.

அந்த நாட்டில் வருமான வரி என்ற பேச்சே இல்லை. இஸ்லாம் மதக் கோட்பாட்டை அனுசரித்து ஒவ்வொருவரும் வருஷந்தோறும் தங்களுடைய செல்வத்தில் இரண்டரை சத விகிதத்தை ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும். எனினும் அவ்வாறு கொடுத்துத்தான் தீரவேண்டும் என்ற சட்டம் எதுவும் இல்லை. அவ்விதம் ஏழைகளுக்குக் கொடுப்பது அவரவர் மனச் சாட்சிக்கு விடப்பட்டிருக்கிறது!

விவசாயிகள் ஒவ்வொரு வருஷமும் விளையும் மொத்த தான்யத்தில் பத்தில் ஒரு பங்கைச் சர்க்காருக்குக் கொடுத்து விட வேண்டும். இராணுவத்தில் சேராதவர்கள் இராணுவச் செலவுக்காகக் குறிப்பிட்ட தொகை வரியாகக் கொடுக்க வேண்டும் என்றும் விதி இருக்கிறது.

சௌதி அரேபியாவில் சினிமா சாலைகளோ, நாடகசாலைகளோ இல்லை. அவைகளை யாரும் நிர்மாணிக்கவோ நடத்தவோ கூடாது என்று சட்டம் இருக்கிறது!

கல்வித் துறையிலே சௌதி அரேபியாவைப் போன்ற பிற்போக்கான தேசம் வேறு எதுவுமில்லை. அங்கு ஒரு சில மத்தியதரக் கல்வி சாலைகளே இருக்கின்றன. சர்வ கலாசாலையோ, கலாசாலையோ, உயர்தரப் பள்ளிக்கூடங்களோ ஒன்றுகூட இல்லை. அந்த நாட்டில் உள்ள சில செல்வந்தர்கள் மாத்திரம் தங்களுடைய பிள்ளைகளை உயர்தரப் படிப்புக்காக எகிப்து, சூடான், இங்கிலாந்து அமெரிக்கா, பிரான்ஸ் முதலிய வெளிநாடுகளுக்கு அனுப்பி விடுகிறார்கள்.



அராபியப் பெண்

அந்த நாட்டில் ஒரு தினசரிப் பத்திரிகை கூட இல்லை. விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில வாரப் பத்திரிகைகள் மாத்திரமே இருக்கின்றன.

வட்டிக்குக் கடன் கொடுக்கக் கூடாது என்பது குரானின் கட்டளை யாதலால், சௌதி அரேபியாவில் அராபியர்கள் நடத்தும் பாங்கி ஒன்றுகூட இல்லை. ஆனால் வெளி நாடுகளைச் சேர்ந்த இரண்டு பாங்கிகள் மாத்திரம் அங்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

'இன்ஷூர்' செய்து கொள்வது ஆண்டவனின் கட்டளையை அங்கீகரிக்க மறுப்பதாகும் என்பது அராபியர்களின் சித்தாந்தம். எனவே அந்த நாட்டில் இன்ஷூரன்ஸ் கம்பெனி ஒன்றுகூட இல்லை.

சௌதி அரேபியாவைச் சேர்ந்த பெரிய நகரங்களில்கூட மின்சார விளக்குகளைக் காண்பது அபூர்வமாக இருக்கிறது.

எனவே இவ்வளவு பிற்போக்கான அந்த நாட்டில் இரண்டொரு பெரிய நகரங்களைத் தவிர மற்ற இடங்களில் எல்லாம் ஜனங்கள் இன்னும்கூட நாகரிக மற்றவர்களாக இருப்பதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை. அவர்கள் நவீன நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்ட மாறுதல் எதையுமே விரும்புவதில்லை.

மத்திய கிழக்கு நாடுகளுக்குள்ளேயே மிகப் பெரியதான சௌதி அரேபியா பல முக்கியத் துறைகளிலும் இவ்வளவு பிற்போக்காக இருப்பது விசித்திரம் அல்லவா?

ஏழு லட்சம் சதுர மைல் விஸ்தீரணம் உள்ள அந்த நாட்டில் அரைக் கோடி ஜனங்களுக்குமேல் இருக்கிறார்கள்.

சௌதி அரேபியாவின் தலைநகரான மெக்கா உலகப் பிரசித்தி பெற்றது. நபி நாயகத்தின் பிறப்பிடமான அந்த நகரம் முஸ்லிம்களின் புனித ஸ்தலமாக விளங்குவதே அதற்குக் காரணம். அந்த நகரின் ஜனத் தொகை ஒரு லட்சம்தான் என்றாலும், வருஷந்தோறும் அங்கு சுமார் மூன்று நாலு லட்சம் யாத்ரீகர்களுக்கு மேல் விஜயம் செய்கிறார்கள்.

மெக்காவுக்குச் செல்லும் யாத்ரீகர்கள் தலா 375 ரூபாய் விதம் சௌதி அரேபியா சர்க்காருக்கு யாத்

திரை வரி செலுத்த வேண்டும். இந்தியாவிலிருந்து மெக்காவுக்குச் செல்லும் யாத்ரீகர்கள் மாத்திரம் சென்ற வருஷம் ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு மேல் வரி செலுத்தியிருக்கிறார்கள் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

மெக்கா நகருக்குள் முஸ்லிம்களைத் தவிர வேறு யாரும் பிரவேசிக்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. எனினும், அந்த நகரைப் பார்ப்பதற்காக வெளி நாட்டினர் முஸ்லிம்களைப்போல் மாறு வேடம் பூண்டு அந்த நகருக்கு உள்ளே சென்று திரும்புவது உண்டு.



அராபியப் பிரமுகர்

மெக்கா நகரம் செங்கடல் துறைமுகப் பட்டணமான ஜிட்டாவுக்குக் கிழக்கே சுமார் நாற்பத்தைந்து மைல் தூரத்தில் இருக்கிறது. அரேபியாவில் மெக்காவுக்கு அடுத்தபடியாக மெடினாவும் முஸ்லிம்களின் புனித ஸ்தலமாக விளங்குகிறது. அங்குதான் முகமது நபி நாயகத்தின் சமாதி இருக்கிறது. பண்டைய காலத்தில் இஸ்லாமிய சாம்ராஜ்யத்துக்கு மெடினா தான் தலை நகரமாக இருந்து வந்தது.

அந்த நகரைச் சுற்றிச் சுவர்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

• • •

சௌடி அரேபியாவின் மொத்த விஸ்தீரணத்தில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு எண்ணெய் வயல்களாக இருப்பது அந்த நாட்டின் அதிர்ஷ்டமாகும். உலகத்திலே எண்ணெய் உற்பத்தியில் இன்று சௌடி அரேபியா ஐந்தாவது ஸ்தானம் வகிக்கிறது. கூடிய சீக்கிரம் அங்கு எண்ணெய் உற்பத்தி இன்னும் அதிகமாகி அது நாலாவது ஸ்தானத்தை வகிக்கும் என்று கூறுகிறார்கள். அந்த நாட்டில் மேற்கொண்டு அபரிமிதமாகப் புதிய எண்ணெய் வயல்கள் கண்டு பிடிக்கப்பட்டு வருவதே அதற்குக் காரணம்.

அரேபியாவில் உள்ள அமெரிக்க எண்ணெய்க் கம்பெனி வருஷா வருஷம் இபின் சௌத் மன்னருக்கு நாற்பது கோடி ரூபாய் கொடுத்து வருகிறது.

அராபியக் குதிரைகள் அழகிலும் ஓட்டத்திலும் உலகப் பிரசித்தி பெற்றவை.

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி


39. டான்ஸில்

இக் காலத்தில் இந்த டான்ஸில் (தொண்டையில் சதை வளருவது) எங்கு பார்த்தாலும் சகஜமாய் இருக்கிறது. இது பெரும்பாலும் சிறுவர்களுக்கே வருகிறதானாலும், பெரியவர்களுக்கும் வருகிறது.

வாயின் உள்ளே தொண்டையில் உள் நாக்கிற்கு இரண்டு பக்கங்களிலும் சிறு சுண்டைக்காய் அளவு சதை உருண்டைகள் இருக்கின்றன. இம்மாதிரி எல்லோருக்கும் இருக்கும். இவைகள் வீங்கிப் பெருத்துப் போவதற்கே டான்ஸில் எனப் பெயர்.

இந்த டான்ஸில் உள்ளவர்களுக்கு ஆகாரம் சரியாகச் சாப்பிட முடியாது. உடல் பலவீனமாய் விடும். அடிக்கடி ஜுரம் வரும். டான்ஸில் மிகப் பெருத்துத் தொண்டையின் வழியை அடைத்துக் கொண்டவர்கள் சாதம், காய்கறிபோன்றவைகளையும் கடித்து விழுங்கக் சிரமப்படுவார்கள். கஞ்சியாய் இருந்தால் பரவாயில்லை. அப்படியும் விழுங்கும் போது நோவு எடுக்கும். இதற்குப் பயந்து சிலர் சாப்பிடவும் யோசிப்பர்.

இந்த வியாதி, ஆகாரத்தில் அயோடின் சத்துக் குறைவினாலும், வாயின் வழியே சுவாசிப்பதாலும் உண்டாகிறது. இப்பொழுதிருக்கும் நிலங்களில் பூசாரம் மிகவும் குறைந்து விட்டிருக்கிறது. சாதாரணமாய் 'ஒரு ஐம்பது வருஷங்களுக்கு முன் ஒரு மூலிகை செய்யும் குணத்தில், பாதி அளவு கூட இந்தக் காலத்தில், அதே மூலிகை குணம் செய்கிறதில்லை' என்று டாக்டர்களே ஒப்புக் கொண்டிருக்கின்றனர். ஆகாரச் சத்தும் அம்மாதிரிதானே இருக்கும்! மனித குலத்தின் தரம் குறைந்து வருவதைப்போல, இயற்கையின் தரமும் குறைந்து வருகிறதுபோலும்! அப்படியிருக்க, அந்த இயற்கை தரும் அரைகுறைச் சத்துள்ள காய்கறி, கீரை, தானியங்களையும் நன்றாக வேக வைத்து, அந்த ஜலத்தையும் சாக்கடையில் கொட்டி விட்டு, சக்கையைச் சாப்பிடும் இந்த நாகரிக காலத்தில் டான்ஸில் மட்டும் என்ன! மற்றும் எது வேண்டுமானாலும் உண்டாகலாம். அயோடின் சத்து அழிக்கப்படுகிறது. கீழே வீணாய்க் கொட்டி விடுகிறோம். இதைத் தடுத்து அளவாய் ஜலம் விட்டு அதிக நேரம் வேக வைக்காமல் அப்படியே சாப்பிடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.



அன்னதானம் அளித்த அருங் குண வள்ளல் ஸ்ரீ வென் அவர்களின் உருவப் படம் விழாப் பந்தலில் இவ்வாறு அலங்காரம் செய்து வைக்கப்பட்டிருந்தது.


எட்டு வயதுள்ள ஒரு பெண் குழந்தை மிக பலவீனமாய் இருந்தது. டான்ஸிலும் இருந்தது. டாக்டர்கள் ஆபரேஷன் செய்வது தவிர வேறு மார்க்கமில்லை என்றனர். பெற்றோர்கள் இந்தப் பலவீனத்தில் ஆபரேஷன் செய்யப் பயந்து யோக சிகிச்சையினால் பலம் உண்டாக்கலாம் என்று வந்தனர். வெறும் சர்வாங்காசனம் மட்டும் சொல்லித் தரப்பட்டது. ஆகாரத்தில் பத்தியம். வேறு பிரமாதமான பத்தியமல்ல! முதலில் ஒரு மாதம் கீரை, காய்கறிகளின் சூப் கொடுக்க வேண்டியது. பிறகு அத்துடன் காய்கறிகளையும் அப்படியே சாப்பிட வேண்டியது. என்ன ஆச்சரியம்! இரண்டு மாதத்தில் குழந்தை நன்றாய் விளையாட ஆரம்பித்தது. ஒவ்வொரு அங்கமும் சுறு சுறுப்பாய் வேலை செய்யத் தொடங்கிற்று. பலவீனம் இருந்த இடம் தெரியவில்லை! கூடவே டான்ஸில் இருந்த இடமும் தெரியவில்லை!

இது என்ன! மாயமா! மந்திரமா! எப்படி ஐயா டான்ஸில் போயிற்று! அதில்தான் சர்வாங்காசன மகிமை இருக்கிறது.

தைராய்ட் ரஸத்தில் பெருவாரியாக அயோடின் சத்து இருக்கிறது. இக்குழந்தைக்கு அந்தச் சக்தி சரிவரக் கிடைக்காததினால்தான் பலவீனம் உண்டாயிற்று. டான்ஸிலும் அதனால்தான் உண்டாயிற்று. பலவீனத்தைப் போக்கடிப்பதற்காகச் சர்வாங்காசனப் பயிற்சி கொடுத்ததில் வாடின தைராய்டிற்கு ரத்த போஷணை கிடைத்தது. தைராய்ட் சுகமெய்தியது. வழக்கப்படி அது அயோடின் சத்துள்ள ரஸத்தை உற்பத்தி செய்ய ஆரம்பித்தது. கூடப் பத்திய ஆகார உணவின் மூலம் அயோடின் சத்தும் சேர்ந்தது. பலம் உண்டாயிற்று. வீங்கின டான்ஸிலும் சுருங்கிற்று.

வாயின் வழியே சுவாசிப்பதினாலும் டான்ஸில் உண்டாகிறது என்று சொன்னேன் அல்லவா! காற்றைச் சுவாசிக்க இயற்கை அளித்தது மூக்கு. ஆனால் சிலர் அதை உபயோகப்

படுத்துவதில்லை. வாயின் வழியாகவும் சுவாசிக்கின்றனர். சில குழந்தைகள், ஏன் பெரியவர்கள் கூட 'ஆ!' என்று வாயைப் பிளந்து தூங்குவர். வாயில் ஈக்கள் நுழைந்தாலும் தெரியாது. மிக வயதானவர்கள் முற்றின சரீரமானதினால் அவர்களுக்கு அது சகஜம். அவ்வளவாகப் பாதிப்பதும் இல்லை. இளம் பிள்ளைகளின் கதி என்ன! மூக்கின் வழியே சுவாசித்தால் மூக்கில் இருக்கும் மயிர்கள், காற்றில் உள்ள தூசுகளை வடிகட்டி, சுத்தக் காற்றை உள்ளே அனுப்புகிறது. வாயின் வழியே சுவாசித்தால் வாயில் ஈரப் பசை இருக்கும் வரை காற்றிலுள்ள தூசுகள் ஈரத்தில் படியலாம். சிறிது நேரத்தில் வாயில் அந்த ஈரப் பசையும் உலர்ந்து விடும். பிறகு காற்று அப்படியே உள்ளே போக வேண்டியதுதான். சில குழந்தைகள் 'கர், புர்' என்று பெரியவர்களைப்போல குறட்டையும் விடும். அப்படி வாயின் வழியே காற்றை இழுக்கும் போது தொண்டையில் இருக்கும் தசைகள் அழற்சி அடைகின்றன. காற்றிலுள்ள கிருமிகளால் அவைகள் தாக்கவும் படுகின்றன.



லட்சோப லட்சம் மக்களுக்கு அன்னமளித்து அதனால் "அன்னதான சிவன்" என்று பெயர்பெற்ற தானசூரரின் ஞாபகார்த்தத் திருவிழா தேப் பெருமாள் நல்லூரில் இந்த மாபெரும் பந்தலில் நடைபெற்றது. மேற்படி விழாவில் பலபேர் உற்சாகமாகப் பங்கெடுத்துக் கொண்டு சிறப்பித்தனர்.

இதை நிவர்த்திக்கும் மார்க்கமென்ன! வாயை மூடி, மூக்கின் வழியே சுவாசிக்க வேண்டுமென்று சுலபமாய்ச் சொல்லி விடலாம். என்னதான் வாய் மூடித் தூங்கினாலும் பிறகு வழக்கப்படி திறந்து கொள்ளும். அதற்கும் ஒரு குறுக்கு வழி இருக்கிறது. மூன்று அங்குலம் அகலமான துணியை நீளக் கிழித்துக் கொண்டு பிரார்த்தனைக்குப் பால் காவடி எடுப்போர் வாயைக் கட்டிக் கொள்வதைப் போல கட்டிப் படுத்துக் கொள்ள வேண்டும். இல்லையானால் 'அடஹஸிவ் டேப்' என்னும் ஒரு வகை பட்டுத் துணியை ஒன்றரை அங்குலம் கிழித்து வாயை மூடி உதட்டின் மேல் ஒட்டவைத்து விட வேண்டும். சிறுவர்களுக்கும் அப்படியே. இப்படிச் சில நாள் செய்து வந்தால் வாய் மூடிப் படுக்கும் வழக்கம் உண்டாகிவிடும். பிறகு வேண்டியதில்லை. வயிறு புடைக்கத் தின்றவுடனே படுத்தாலும் வாய் திறந்துவிடும். ஆகையால் பாதி வயிறு காலி ஆனபின்பே படுக்க வேண்டும். அதாவது சாப்பிட்டு இரண்டு மூன்று மணி நேரம் பொறுத்தே படுக்க வேண்டும்.

இந்த வாயைத் திறந்து படுக்கும் வழக்கம், தாய்மார்களின் ஒரு சிறு அசட்டையினால்தான் உண்டாகிறது என்று சொன்னால் மிகையாகாது. குழந்தை தூங்கும்போது தலையணையில் தலையின் மேல் பக்கம் மட்டும் இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும். சில குழந்தைகள் தலை முழுவதையும் கழுத்து, மார்பு வரை தலையணையில் வைத்துத் தூங்கும். அப்பொழுது வாய் தானாகத் திறந்துவிடும். இந்தப் பழக்கம் பிறகும் ஏற்படுகிறது. இரவில் தாய் படுக்கப் போகும் முன் குழந்தைகள் தலையணைமேல் சரியாய்த் தலையை வைத்துத் தூங்குகிறார்களா என்று பார்க்க வேண்டும்.

இந்தக் காலத்தில் டான்ஸில் என்றால் உடனே டாக்டர்கள் ஆபரேஷன் செய்ய வேண்டுமென்கிறார்கள். அந்த வளர்ந்த சதையைக் கத்தரித்து எடுத்து விடுகிறார்கள். இரண்டு மூன்று நாளில் புண் ஆறிச் சரியாய் விடுகிறது. இது சகஜமாய் நடக்கிறது. ஆனால் இந்தக் கேஸ்களில் ஏதாவது ஒரு ஆபத்தாக முடிவதும் உண்டு. சதையைக் கத்தரிக்கும் கத்திரி பக்கத்தில் எங்காவது தப்பித் தவறிப் பட்டு விட்டால் உயிர் பிழைப்பது துர்லபம். இம்மாதிரி அநேக கேஸ்கள் நடந்திருக்கின்றன. ஆகையால் மருந்துப் பூச்சினாலேயே குணப்படுத்தப் பல மருந்துகள் விளம்பரத்தில் காணுகிறோம். அதன் அநுபவம் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். சர்வாங்காசனத்தினால் டான்ஸிலைக் குணமாக்க முடியும் என்பது நிரூபணமாய் விட்டது.

எத்தனை சங்கீத வித்வான்களின் தொண்டையை இந்த டான்ஸில் வந்து கெடுத்து விட்டது! ஆபரேஷன் செய்த பின் முன்போல் பாட வருவதில்லை. அவர்களும் சர்வாங்காசனம் செய்தார்களானால் டான்ஸில் வராது. வந்தவர்கள் ஆபரேஷன் இல்லாமல் போக்கடித்துக் கொள்ளலாம். சரியாய்ப் பாட வராத பாடகர்கள் சர்வாங்காசனம் செய்வார்களானால் சாரீரம் இனிமையாய் அமையும்.

உள்ளக்கரசி

ரா. வி.

ஏறக் குறைய மூந்நூறு வருஷங்களுக்கு மேல் ஆகின்றன. மொகலாய சக்கரவர்த்தி ஷாஜஹான் ஆக்ரா மாளிகையில் ஸிம்மாசனத்தில் அமர்ந்து ஆட்சி செலுத்திய காலம் அது. அவருடைய அரண்மனைக்கு ஈடாக உலகத்திலேயே வேறு வாசஸ்தலம் கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும். சுக போகங்களுக்கான சகல சாமக்கிரியைகளும் அந்த அரண்மனையிலே ஏராளமாகச் செய்து வைக்கப்பட்டிருந்தன. ஆக்ராவில் சக்கரவர்த்தியின் வாசஸ்தலத்தை மாபெரும் நகரத்துக்குச் சமானமாகத்தான் சொல்ல வேண்டும். அதில் சக்கரவர்த்தியின் குடும்பத்தினர்களைத் தவிர ஐயாயிரத்துக்கு மேலான அடிமைப் பெண்களும் இருந்தனர். அந்த அடிமைப் பெண்கள் என்ன, சாதாரணமானவர்களா? 'ரம்பையும் ரதியும் அவர்களுக்கெதிரே எந்த மூலை?' என்று சொல்லும்படியாக அழகில் ஒருவரையொருவர் மிஞ்சியிருந்தனர்.

கொஞ்ச நாட்களுக்கு முன்புதான் அந்த அழகிகளின் எழில் உலகத்துக்கு மோதி என்னும் பெயர் பூண்ட பன்னிரண்டு வயதுச் சிறுமி ஒருத்தி வந்து சேர்ந்திருந்தாள்.

மோதியின் தாய் தந்தையர் துருக்கிஸ்தானத்து வாசிகள். அவர்கள் மோதி குழந்தையாக இருக்கும்பொழுதே, அவளைத் தனியளாக்கிவிட்டு இவ்வுலகை வெறுத்துச் சென்று விட்டனர். அதன் காரணமாகச் சின்னஞ் சிறு பிராயத்திலேயே அவள் ஒரு கொள்ளைக் கூட்டத்தினரின் கையில் சிக்கும்படி நேர்ந்து விட்டது. அந்தக் கொள்ளைக் கூட்டத்தினரிடையே வளர்ந்துதான் அவள் இவ்வளவு பெரியவள் ஆனாள். கடைசியில் வயது பன்னிரண்டு பூர்த்தியானதும் அவள் ஆக்ராவின் கடை வீதியிலே விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்டாள். ஜஹானாராவின் பிரதான வேலைக்காரி அன்று அந்தக் கடை வீதிக்கு வந்திருந்தாள். மோதியைக் கண்டதும், அவள் அவளை ஜஹானாராவுக்கென்று விலைக்கு வாங்கிக் கொண்டாள். சந்தர்ப்பமும் பாக்கியமும் ஒருங்கே சேர்ந்து கொண்டன. ஜஹானாரா அவளைத் தன் பெண் போல மிகவும் அன்புடனும் பரிவுடனும் வளர்க்கலானாள்.

சில தினங்களுக்குள்ளாகவே, அவள் தன் அழகின் பலத்தைக் கொண்டு ஷாஜஹானின் மூத்த புதல்வனான தாராவின் பெரிய பிள்ளை லால்ஜியின் உள்ளத்தைக் கவர்ந்து விட்டாள். மோதியின் கள்ளங் கபடமற்ற பார்வை, இனிய இள நகை, தெளிவு குழைவு மான் போன்ற சஞ்சல ஸ்வபாவம், அறியாப் பருவம் இவற்றையெல்லாம் கண்டு இளவரசர்கள் அத்தனை பேருமே அவளிடம் மனத்தைப் பறி கொடுத்து விட்டனர். ஆனால் லால்ஜி மொகலாய ஸிம்மாசனத்துக்கு இளவரசரான தாராவின் மூத்த பிள்ளையல்லவா? தாராவுக்கு அடுத்த படியாக அவன்தானே ஸிம்மாசனம் ஏற வேண்டும்? ஆகவே, லால்ஜி ஒருவனிடமுள்ள அச்சத்தின் காரணமாக யாருக்குமே தங்கள் உள்ளத்தைத் திறந்து காட்டி, மோதியைத் தங்கள் வசப்படுத்திக் கொள்ளத் துணிவு உண்டாகவில்லை.

மோதியின் பெண் உள்ளமும் கொஞ்சங் கொஞ்சமாக லால்ஜியை நாடத் தொடங்கியது. கடைசியில் அவனையே தன் காதல் தெய்வமாக வழிபடவும் தொடங்கியது.

*

ஒரு நாள் மோதி தாஜ்மஹாலைச் சுற்றி வந்து கொண்டிருந்தாள். கொடி வீடுகள் வழியே உலாவியவாறு அவள் வெகுதூரம் சென்று விட்டாள். கால் கடுக்க ஆரம்பித்து விட்டது. சிறிது நேரம் இளைப்பாறிக் களைப்பைப் போக்கிக் கொள்ளலாம் என்ற நோக்கத்துடன் அவள் அருகே இருந்த சலவைக் கல் ஆசனத்தில் அமர்ந்தாள்.

தாஜ்மஹால் ஒரு காதற் கோயில் அல்லவா? அன்பின் பெருமையையும் காதலின் மேன்மையையும் எடுத்துக் காட்டுவதற்காகத்தானே அது நிர்மாணிக்கப்பட்டது? சலவைக் கல்லில் உட்கார்ந்ததுதான் தாமதம்; அவளுடைய மனம் காதல் சிந்தனையில் இறங்கியது. தாஜ்மஹாலுக்குள் நுழைந்து விட்டால் காதலைத் தவிர வேறு சிந்தனைக்கே மனதில் இடம் இருக்காதோ, என்னவோ? மும்தாஜ்மஹாலிடம் ஷாஜஹான் காட்டிய காதலின் நினைவு அவளுக்கு வந்தது. அதைத் தொடர்ந்தாற் போலவே, "ஆமாம், இளவரசர் லால்ஜியை என் மனம் நாடத் தொடங்கி விட்டதே! இந்தியாவின் சக்கரவர்த்தி ஆகப் போகும் லால்ஜி எங்கே? அவருடைய அரண்மனையில் பணி செய்யும் அடிமைப்

பெண்ணை நான் எங்கே? நான் அவரை மனதினால் ஸ்மரிக்கக்கூட முடியாதே? என் உள்ளத்தில் உண்டாகி யிருக்கும் காதல் உண்மையானது தானா? நான் புரியும் இந்தக் காதல் நியாயமானது தானா? இதன் முடிவு என்ன ஆகும்? அடிமைப் பெண்ணை என்னை அவர் ஏற்றுக் கொள்ளுவாரா? மாட்டார்; ஒரு நாளும் மாட்டார். அப்படி யிருக்கும்பொழுது அவரைப் பற்றிச் சிந்தித்துத்தான் என்ன பயன்?' என்பது போன்ற எண்ணம் அவள் உள்ளத்திலே ஓடியது.

காதல் வசப்பட்டுத் தன்னை மறந்து மோதி இவ்வாறு யோசித்துக் கொண்டிருக்கும் பொழுதுதான், கூடிய காதலர்களுக்கு இன்பத்தையும், பிரிந்தவர்கள் உள்ளத்துக்குத் துன்பத்தையும் தரும் தென்றல் காற்று மெதுவாக வீசலாயிற்று. பூங்கொடிகள் ஆனந்தம் பொங்க அசைந்தாடிக் கொண்டிருந்தன. நீர்த் திவலைகள் துவானம் போலச் சிதறிக் கொண்டிருந்தன. மோதியின் முன் நெற்றி மயிர் கன்னங்களுக்கருகே நெளிந்து பறந்து ஆடவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளத் தயாராக இருந்தது. அவள் ஒரு தடவை உடலை நிமிர்த்தி நன்றாகச் சோம்பல் முறித்துக் கொண்டாள். பருவம் மிகப் பிரயாசை எடுத்துக் கொண்டு பார்த்துப் பார்த்து அவளுடைய ஒவ்வொரு அவயவத்தையும் அழகுற அலங்கரித்திருந்தது என்பது அப்பொழுதுதான் தெள்ளென விளங்கியது.

அதே சமயம் பின்னாலிருந்து காமன் கணைதானோ என்று சொல்லும் படியாக அவள் கழுத்தில் ஒரு பூமாலை வந்து விழுந்தது. அவள் துணுக்குற்றுத் திரும்பிப் பார்ப்பதற்குள்ளாக இரு கண்களையும் யாரோ சட்டென்று பொத்தி விட்டார்கள்.

மோதி மிகவும் தைரியமான குரலில், "யார் அது?" என்று அதட்டினாள்.

அந்த அதட்டலில் தொனித்த கடுமையையும் கண்டிப்பையும் கவனித்த லால்ஜி சட்டென்று முழங்கால்களை மண்டியிட்டு உட்கார்ந்து கொண்டு குற்றவாளியைப் போல மன்னிப்புக் கேட்கலானான்.

சித்திரங்களில் காணும் உதடுகளில் உவகையும் தாண்டவமாட மோதி, "ஷாஜாதா! என்ன இது? நீங்கள் செய்வது துளிக்கூட நன்றாயில்லையே! ஒரு அடிமைப் பெண்ணெதிரே......" என்று முழு வாக்கியத்தையும் முடிக்காமலே நிறுத்தினாள்.

"காதலர் உலகத்தில் சிறியோன் பெரியோன் என்ற வித்தியாசமே கிடையாது. இது உனக்குத் தெரியாதா?"

"நீங்கள் கூறுவது நியாயந்தான். ஆனால் உலகத்தாரின் கண்களில்......"

"...உலகத்தை நான் பொருட்படுத்தினால்தானே?"

"நீங்கள் பொருட்படுத்தினாலும் சரி, பொருட்படுத்தாவிட்டாலும் சரி, ஒரு அடிமைப் பெண்ணுக்கும் இளவரசருக்கும் கல்யாணம் நடப்பது என்பது நடவாத காரியம். நான் கல்யாணம் இன்றி ஒரு ஆடவனிடம் அன்பு கொள்ளுவதை மிகப் பாவம் என்று கருதுகிறேன். ஆகவே......"

லால்ஜி அதற்குமேல் அவளைப் பேச விடவில்லை. சட்டென்று அவள் கையைப் பிடித்துக் 'தர தர' வென்று இழுத்துக் கொண்டு தாஜ்மஹாலுக்குள் நுழைந்தான். நேரே மும்தாஜின் சமாதியை அடைந்து அதன் அருகே முழங்கால் மண்டியிட்டு உட்கார்ந்தான். பிறகு அந்தச் சமாதியை இரு கைகளாலும் தொட்டவாறு, "காதலுக்குச் சிறந்த உதாரணமாக விளங்கும் என் பாட்டியின் மீது ஆணை வைத்துக் கூறுகிறேன். நான் என் வாழ்க்கையில் உன்



எஜமானர் :— நேற்றைய தினம் அம்மா மேலே கோபித்துக் கொண்டு கதவைப் 'படார்' என்று அடித்துச் சாத்திக்கொண்டு போனாயாமே, இனிமேல் அப்படிச் செய்ய மாட்டாயே?

வேலைக்காரன் :— இல்லிங்க

எஜமானர் :— இதுமாதிரி இரண்டு தடவை கதவைச் சாத்தினால் கதவு உடைந்து போய் விடாதா? இனிமேல் ஜாக்கிரதையாகச் சாத்து......போ......



போட்டோ எடுப்பவர்:—இங்கே நல்ல இயற்கைக் காட்சிகள் ஏதேனும் இருக்கிறதா, எடுத்துக்கொண்டு போகலாம் என்று வந்திருக்கிறேன்.

நாட்டான்:—இருந்தது! கொஞ்சம் முன்னால் வந்திருக்கக்கூடாதா? இப்பொழுதுதான் ஒரு போட்டோக்காரர் வந்து எடுத்துக் கொண்டு போய் விட்டார்!

ஒருத்தியைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் கண் எடுத்துப் பாரேன்; காதல் புரிந்து கல்யாணம் செய்து கொள்ளேன்" என்று இன்ப வெறியில் மூழ்கிச் சபதம் செய்தான்.

மந்திர வசப்பட்டவள் போல மோதியும் அவனைப் பின்பற்றி அவனைப் போலவே பிரதிக்ஞை செய்து விட்டாள். இரு உள்ளங்களும் ஒன்றாகி விட்டன.

அந்த நாட்களில்தான் ஔரங்கஜேப் கலகக்காரன் ஆனான். கலகம் வெகு விரைவில் வலுத்தது. அவனுடைய சகோதரர்களான ஷுஜாவும் முராதும் கலகக்காரனை அவன் கோஷ்டியில் கலந்து கொண்டனர். ஆகவே, தாரா ஔரங்கஜேப்பையும் வால்ஜி ஷுஜாவையும் எதிர்த்துப் போராட நேர்ந்தது.

மோதிக்கு வால்ஜியை விட்டு அரைக் கணமும் பிரிந்திருக்க மனம் இல்லை. ஆகவே, அவளும் அவனுடன்கூட யுத்த களத்துக்குச் சென்றாள்.

ஷுஜா வால்ஜியுடன் நடந்த போரில் தோற்றான். ஆனால் தாராவுக்கு வெற்றி கிட்டவில்லை. தாரா புறமுதுகிட்டு லாகூரை நோக்கி ஓடும்படி ஆகிவிட்டது.

ஔரங்கஜேப் ஆக்ராவையும் தில்லியையும் கைப்பிடித்துச் சக்கரவர்த்தி ஷாஜஹானைச் சிறையில் இட்டு விட்டான். அது மட்டும் அல்ல; தனக்குத்தானே 'பாதுஷா'ப் பட்டமும் சூட்டிக் கொண்டான். இந்தச் செய்தி எட்டவே, தாராவுக்கு உதவி புரிய வந்திருந்த ஜயசிம்மன் தன் சேனையுடன் தன் நாடாகிய அம்பருக்குச் சென்று விட்டான். வால்ஜியின் சேனையும் கலைந்தது. படை வீரர்கள் வேஷத்தில் வால்ஜியும் மோதியும்தான் மிகுந்திருந்தனர்.

வால்ஜிக்கு மோதி படும் கஷ்டம் தாளவில்லை. அவன் ஏமாற்றமும் வருத்தமும் நிறைந்த குரலில், "மோதி! நீ என்னுடன் சேர்ந்து இவ்வளவு கஷ்டமும் அவமானமும் படவேண்டியிருக்கும் என்று நான் கனவிலும் கருதவில்லை. நீ உன் உயிரைச் சிறிதும் பொருட்படுத்தாது யுத்தகளத்தில் எத்தனையோ இக்கட்டான கட்டங்களில் என் உயிரைக் காப்பாற்றினாய். நீ செய்த நன்றியை நான் என்றென்றும் மறக்க மாட்டேன். நீ எனக்காகப் பட்ட கஷ்டங்கள் போதும். நான் மனப் பூர்வமாகத்தான் சொல்லுகிறேன். நீயும் போய் வா. நீ நல்ல யோக்யனான ஒரு புருஷனை மணந்து கொண்டு ஆனந்தமாக வாழவேண்டும் என்பதுதான் என் அந்தரங்க அவா. ஒரு காலத்தில் நான், 'என்றைக்காவது ஒரு நாள் நாமும் சிம்மாசனத்தில் ஏறுவோம். நீயும் என் பக்கத்தில் இன்னொரு நூர்ஜஹானாகத் திகழ்வாய்' என்று கற்பனைக் கோட்டைகள் கட்டிக் கொண்டிருந்தேன். என் துரதிர்ஷ்டம் அதற்கு முட்டுக்கட்டை போட்டு விட்டது! நான் கொடுத்து வைக்கவில்லை. அதற்கு நாம் என்ன செய்ய?" என்றான்.

"நீங்கள் பேசுவது சிறிதும் நன்றாயில்லை. எனக்கு ராஜ்யமும் வேண்டாம், கிரீடமும் வேண்டாம். நீங்கள் என் கண் முன்னே இருந்தால், அதுவே எனக்குப் போதுமானது. நீங்கள் என் கண்களெதிரே இருப்பதுதான் எனக்குப் பெரும் ராஜ்ய பாரத்தைக் காட்டிலும் மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம்" என்று பதிலிறுத்தாள் மோதி.

"ஆனால் அதுவும் நடவாத காரியம் ஆயிற்றே, மோதி! என் நிலை எந்த நிமிஷத்தில் வெளிப்படுமோ, யார் கண்டார்கள்? நானும் தப்ப முடியாது. உன்னையும் காப்பாற்ற முடியாது" என்றான் வால்ஜி.

"உங்களுக்காக, உங்கள் உயிரைக் காப்பாற்றும் முயற்சியில் போர் புரிந்து நான் இறக்க நேரிட்டால் உங்களுடன் சேர்ந்திருப்பதில் ஏற்படும் ஆனந்தத்தைக் காட்டிலும், எனக்குப் பன்மடங்கு அதிகமாக ஆனந்தம் ஏற்படும். என்னையும் உங்களையும் யாராலும் பிரிக்க முடியாது. மரணம் ஒன்

னுக்கு மட்டும்தான் நம்மைப் பிரிக்கும் சக்தி உண்டு. இல்லை, அதற்குக்கூட அந்தச் சக்தி கிடையாது. ஏனெனில் நாம் சாகும் பொழுதும் சேர்ந்தேதான் சாவோம்! இது நிச்சயம்" என்றாள் மோதி.

"மோதி! நீ தெய்வம்தான்!"

"நீங்கள்? நீங்கள் என் தெய்வம்."

அதே சமயத்தில் குதிரைகளின் குளம்பு அடிச் சத்தம் கேட்டது. இருவரும் பக்கத்தில் இருந்த அடர்த்தியான காட்டுக்குள் சென்று மறைந்து கொண்டனர்.

✶

அது முதல் கொண்டு இருவருக்கும் காட்டிலேயேதான் வாசம். ஒரு நாள் மோதியின் மடியில் தலையை வைத்துக் கொண்டு லால்ஜி தூங்கிக் கொண்டிருந்தான். மோதி தன் காதலன் கவலையற்றுத் தூங்குவதைக் கண்டு உள்ளூற மகிழ்ச்சியுற்றாள். அத்துடன் கூடவே, வருங்கால வாழ்க்கையைப் பற்றியும் எண்ணமிடலானாள். இதே சமயம் சற்றுத் தூரத்திலிருந்தும் துப்பாக்கிச் சத்தம் வந்தது. அடுத்த கணம் அவர்களைச் சிப்பாய்கள் சூழ்ந்து கொண்டு விட்டனர்.

ஒரு தலைவன் லால்ஜியைக் கைது செய்து கொண்டு புறப்பட்டான். ஔரங்கஜேப்பின் எதிரே லால்ஜியைக் கொண்டு போய் நிறுத்தினால் தனக்கு ஏராளமான வெகுமதி கிடைக்கலாம் என்பது அவன் எண்ணம். மோதி அவன் அந்தரங்க அபிப்பிராயத்தைக் குறிப்பால் உணர்ந்தாள். ஆகவே, லால்ஜியின் அருகில் சென்று காதோடு காதாக ஔரங்கஜேப்பின் கூடாரத்தில் வந்து சந்திப்பதாகச் சொல்லி விட்டுப் புறப்பட்டாள்.

மோதி முதல் காரியமாக ஒரு காட்டுப் புறத்துப் பையன் வேஷம் போட்டுக் கொண்டாள். ஔரங்கஜேப்பின் யானைப் படை இருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தாள். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக யானைப்பாகர்களைப் பழக்கப்படுத்திக் கொண்டாள். அவர்கள் சொன்ன சொல் கேட்கும் பையனாக நடந்து கொண்டாள். அவர்கள் காலால் இட்ட வேலையைத் தலையால் செய்து அவர்களுடைய நன் மதிப்பைச் சம்பாதித்தாள். நாளடைவில் சுட்டு முற்றி யானைப்பாகர்கள் அவளுடன் நெருங்கிப் பழகலாயினர்.

ஔரங்கஜேப் அப்பொழுது குவாலியர் கோட்டையில் இருந்தான். லால்ஜி ஆக்ராக் கோட்டையில் சிறைப்பட்டிருக்கிறான் என்னும் செய்தி அவனுக்கு அறிவிக்கப்பட்டது. யானைமீது அவனை வைத்துக் குவாலியர் கோட்டைக்குக் கொண்டு வருமாறு ஔரங்கஜேப் உத்தர விட்டான்.

இந்தச் செய்தி மோதிக்கும் எட்டியது. எந்த யானைப்பாகன் போகப்போகிறான் என்பதைத் தெரிந்து கொண்டு அவன் அவனிடம் போனாள். 'எனக்குக் குவாலியர் கோட்டையைப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. என்னையும் கட்டாயம் அழைத்துக் கொண்டு போக வேண்டும்' என்று அவனிடம் வேண்டிக் கொண்டான். அவனுடைய பணிவிடையிலே மனம் மகிழ்ந்திருந்த அவன் உடனே எவ்விதத் தயக்கமுமின்றி அவனுக்குச் சம்மதம் கொடுத்தான். யானைக்குச் சிசுருஷை செய்யக் கூடமாட இன்னொருவர் இருந்தால் நல்லதுதானே என்று எண்ணினான் அந்த முழுச் சோம்பேறி.

மோதி எந்த யானை புறப்படப் போகிறது என்பதை அறிந்து அந்த யானைக்கு நாலைந்து மணி நேரம் கழித்துப் பலன் அளிக்கக் கூடிய விஷத்தைக் கொடுத்து விட்டான்.



"கைமாத்தாக ஒரு ஐந்து ரூபாய் கொடுங்கள்!"

"இந்தாருங்கள், ஐந்து ரூபாய்!"

"சந்தோஷம். நான் ஐந்து ரூபாய் கடன் வாங்கினது என் மனைவிக்கு மட்டும் தெரிய வேண்டாம்!"

"சரி, என்னிடம் ஐந்து ரூபாய் இருந்த விஷயம் கூட என் மனைவிக்குத் தெரியக்கூடாது!"

ஔரங்கஜேப்பின் உத்தரவுப்படி மாலைக் கதிரவன் மலை வாயில் விழுந்ததும் யானை புறப்பட்டது. மோதி மாவுத்தனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தான். வால்ஜி அம்பாரியின் மேல் உட்கார்ந்திருந்தான். ஆக்ராவிலிருந்து கிட்டத்தட்ட இருபது மைல் தூரம் போனதும் மோதி யானைப் பாகனுக்குச் சாராயத்துடன் ஏதோ போதை தரும் பொருள் ஒன்றையும் கலந்துகொடுத்து விட்டான். கொஞ்ச தூரம் சென்றதும் யானைப் பாகன் மூர்ச்சையற்று யானையின் அம்பாரியில் சாய்ந்தான். மோதி யானையைக் கடத்தலானான். இடையிடையே யானை பிளிறவும் ஓடவும் ஆரம்பித்தது. யானையுடன் கூடவே வந்து கொண்டிருந்த எத்தனையோ சிப்பாய்கள் அதன் காலடிகளில் மிதிபட்டு நசுக்குண்டனர். இருட்டியதும் யானை திரும்பி ஆக்ராவுக்கே ஓடலாயிற்று. கொஞ்ச தூரம் செல்வதற்குள்ளாகச் சரீரத்தில் எரிச்சல் எடுக்கவே அது பக்கத்தி லிருந்த யமுனை நதியில் இறங்கி விட்டது. மோதி வால்ஜியை அழைத்துக்கொண்டு கரைபுரண்டோடும் யமுனை நதியில் குதித்து விட்டான்.

★

மறு நாள் காலை ஔரங்கஜேப்புக்கு இந்தச் செய்தி எட்டியது. அவன் யமுனைக் கரையில் எல்லாம் தேடச் செய்தான். அது மட்டும் அல்ல; யமுனையின் நீரையே கூட வலை போட்டு வடிக் கட்டினான். ஆனால் வால்ஜி அகப்படவில்லை. யானை மட்டும் யமுனையில் செத்துக் கிடந்தது.

வால்ஜியும் யமுனையில் விழுந்து செத்திருக்க வேண்டும். அவனுடைய உடலை நீர் வாழும் பிராணிகள் கொத்தித் தின்றிருக்க வேண்டும். அதனால்தான் அவன் சடலம் அகப்படவில்லை என்ற எண்ணம் ஔரங்கஜேப்புக்கு உறுதிப்பட்டது.

வால்ஜி காசிக்குச்சென்று தன் பெயரை 'மோதிலால்' என்றும் மோதி தன் பெயரை 'லாலி' என்றும் மாற்றி வைத்துக் கொண்டார்கள். உலகம் புகழும் பாதுஷா ஷாஜஹானின் பேரன் மிக மிகச் சாதாரண மனிதனைப் போல ஒரு குடிசையில் இருந்து கொண்டு அன்றாட வயிற்றுக் கஞ்சிக்கு அல்லல் படும்படியாகி விட்டது. பாதுஷாவின் பேரனைப் பிச்சைக்காரனுக்கித் தெருத் தெருவாகத் திண்டாட வைத்து விட்ட விதியின் சதியை என்ன வென்பது?

'நாம் ஆக்ராவின் அரண்மனையில் பிறந்து வளர்ந்தோம். நாம் பட்டத்து இளவரசன்' என்பதை யெல்லாம் வால்ஜி மறக்க முயன்றான். தன்னை மாநிலம் புகழும் மன்னனாகவும் மோதியை எழிலரசி நூர்ஜஹானாகவும் எண்ணி இன்ப வாழ்க்கை நடத்துவதற்குப் போட்டிருந்த கற்பனைத் திட்டத்தையும் தன் உள்ளத்திலிருந்து அப்புறப்படுத்த முயன்றான். இருவரும் இனி லாலியும் மோதிலாலாகவுமே வாழ்க்கை நடத்துவது என்று திட்டம் போட்டனர்.

★

அநேக ஆண்டுகள் ஓடி விட்டன. ஒருநாள் மோதிலால் உணவருந்தி முடிந்த பின் கயிற்றுக் கட்டில் ஒன்றைப் போட்டு முற்றத்தில் படுத்திருந்தான். பகலில் கடினமான வேலை செய்ததனால் அவனுக்குக் களைப்பு மேலிட்டிருந்தது. லாலி தன் மென் கரங்களால் அவன் கால்களைப் பிடித்துவிட்டுக் கொண்டிருந்தாள். அவர்களுக்கு அருகிலேயே சின்னஞ் சிறு குழந்தை ஒன்று தன் விளையாட்டுச் சாமான்களுடன் விளையாடிக் கொண்டிருந்தது. இருவரும் அதன் விளையாட்டைக் கண்டு ஆனந்த பரவசமுற்றுக் கொண்டிருந்தனர்.

"லாலி! உன்னைப் 'பேகம்' ஆக்க வேண்டும் என்று என் உள்ளத்திலே எழுந்த எண்ணம் என் உள்ளத்திலேயே அடங்கி விட்டதே!" என்றான் மோதிலால்.

"நீங்கள் ஹிந்துஸ்தானத்துச் சக்கரவர்த்தியாக இருந்தால் என் உள்ளத்தை இப்படிக் கொள்ளை கொண்டிருக்க முடியாது. ஏனென்றால் இப்பொழுது உங்கள் உள்ளம் எனக்கே சொந்தமா யிருக்கிறது. அப்பொழுது எனக்கு மட்டுமே சொந்தமா யிருக்கும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது அல்லவா? ஆகவே, நாம் எதற்காக வருத்தப்பட வேண்டும்? தாங்கள் தில்லிக்கு அரசராக ஆகவில்லையே என்று எனக்குச் சிறிதும் வருத்தம் இல்லை. ஏனெனில் உங்கள் உள்ளத்தரசியாக ஆகும் பாக்கியத்தை விட அதுவா பெரிது?" என்றான் லாலி. அப்பொழுது லாலியின் முகத்திலே, 'தான் உள்ளத்தரசி' என்னும் பெருமிதம் தாண்டவமாடியது.

'லாலிக்கு எதிரே ராஜ்யம் எந்த மூலைக்கு?" என்று மோதிலாலுக்கும் தோன்றியது. 'மாபெரும் கோட்டையைப் பிடித்தால்கூட லாலியை அடைந்ததனால் ஏற்பட்டிருக்கும் இந்த ஆனந்தம் கிடைக்காது; கிடைக்கவே கிடைக்காது!' என்பதை மோதிலாலினுடைய முகபாவமும் தெளிவாக எடுத்துக் காட்டியது.




நேர்த்தியான அமைப்பு - அழகிய தோற்றம்

வாடிக்கைக்காரர்களுக்கென்றே உலகப் பிரசித்திபெற்ற கடிகாரங்களை தருவித்துள்ளோம். யாவும் ஸ்விஸ் தயாரிப்புகள். சரியான நேரம் அறிவிக்க உத்திரவாதம். 17 ஜுவல் 5 வருஷமும், 15 ஜுவல் 3 வருஷமும், 7 ஜுவல் 2 வருஷமும், மற்றவை ஒரு வருஷமும் உத்தரவாதமுள்ளவை. ஒரிஜினல் பிளாஸ்டிக் வாட்ச் கேஸ், ஸ்ட்ராப்பு, கேரண்டி சர்ட்டிபிகேட்டும் ஒவ்வொரு கடிகாரத்துடன் அளிக்கப்படும். பார்சல், தபால் செலவு விற்பனை வரி இன்றி. இன்ஷ்யூர் வி. பி. யில் அனுப்பப்படும்.

இலவசம்


விலையற்ற ஒரு அமெரிக்கன் பிளாஸ்டிக் மணிபர்ஸ் ஒவ்வொரு கடிகாரத்துடனும் அளிக்கப்படும். இச்சலுகை 1951 ஜூலை 15 தேதி வரை உண்டு.




கேட்லாக் நெ.	கர்வெக்ஸ் சைஸ் 7½	விலை
410	ரோல்டு கோல்டு கேஸ் 5 ஜுவல்ஸ்	48 0
508	ரோல்டு கோல்டு கேஸ் 7 ..	60 0
605	க்ரோம் ஸ்டீல்பேக் 15 ..	72 0
606	ரோ. கோ. ஸ்டீல்பேக் 15 ..	72 0
705	ரோல்டு கோல்டு ஸ்டீல் பேக், ஆட்டிக் க்ளாஸ் 17 ..	84 0



கேட்லாக் நெ.	டன்னோ சைஸ் 6½	விலை
412	ரோல்டு கோல்டு கேஸ் 5 ஜுவல்ஸ்	48 0
510	ரோல்டு கோல்டு கேஸ் 7 ..	60 0
607	க்ரோம் ஸ்டீல்பேக் 15 ..	72 0
608	ரோ. கோ. ஸ்டீல்பேக் 15 ..	72 0
706	ரோ. கோ. ஸ்டீல்பேக் ஆட்டிக் க்ளாஸ் 17 ..	84 0




	சிறிய ரவுண்டு சைஸ் 8½	
308	ரோல்டு கோல்டு கேஸ் ஜுவல்களுடன்	36 0
406	ரோல்டு கோல்டு கேஸ் 5 ..	48 0
504	ரோல்டு கோல்டு கேஸ் 7 ..	60 0
601	க்ரோம் ஸ்டீல்பேக் 15 ..	72 0
602	ரோ. கோ. ஸ்டீல்பேக் 15 ..	72 0



	லேடிஸ் சைஸ் 5½	
512	ரோல்டு கோல்டு கேஸ் 5 ஜுவல்ஸ்	60 0
611	ரோ. கோ. ஸ்டீல்பேக் 15 ..	72 0
707	ரோ. கோ. ஸ்டீல்பேக், ஆட்டிக் க்ளாஸ் & ஸில்க் கயிறுடன் 15 ..	84 0
1005	20 மைக்ரோன் கோல்டு கேஸ் கெப்பு நடு செகண்டு முள்ளுடன் & ஸில்க் கயிறுடன் 17 ..	120 0
1006	18 காரட் கோல்டு கேஸ் 15 ..	120 0



	வாடர் ப்ரூப் சென்டர் செகண்டு ரேடியம் டயல் சைஸ் 10½	
609	க்ரோம் ஸ்டீல்பேக் 15 ஜுவல்ஸ்	72 0
610	ரோ. கோ. ஸ்டீல்பேக் 15 ..	72 0
701	க்ரோம் ஸ்டீல்பேக் ஆல் ப்ரூப் 17 ..	84 0
1002	20 மைக்ரோன கோல்டு கேஸ் ஆல் ப்ரூப் 17 ..	120 0
702	க்ரோம் ஸ்டீல்பேக் (சிறியது 8¾) சைஸ் ஆல் ப்ரூப் 15 ..	84 0
1003	க்ரோம் ஸ்டீல்பேக் (சிறியது 8¾) சைஸ் ஆல் ப்ரூப் 17 ..	120 0



	சென்டர் செகண்ட் சைஸ் 9½	
309	க்ரோம் கேஸ் ஜுவல்களுடன்	36 0
404	ரோல்டு கோல்டு கேஸ் 5 ..	48 0
502	ரோல்டு கோல்டு கேஸ் 7 ..	60 0
603	க்ரோம் ஸ்டீல்பேக் 15 ..	72 0
604	ரோ. கோ. ஸ்டீல்பேக் 15 ..	72 0
1004	20 மைக்ரோன கோல்டு 17 ..	120 0

டைம்பீஸ் & பாக்கெட் கடிகாரங்கள்


302	இங்கிலீஷ் அலாரம் டேபிள் கடிகாரம் பெரிய சைஸ், வெஸ்ட் அலாரம்	36 0
201	ஜெர்மன் பாக்கெட் கடிகாரம் க்ரோம் கேஸ் சாதாரண டயல்	24 0
301	ஜெர்மன் பாக்கெட் கடிகாரம், ரோ. கோ. கேஸ் ரேடியம் டயல்	36 0

SWISS WATCH CO., P. B. No. 3552, BOMBAY - 4



குளிர்ந்த பானமாக அல்லது சூடாகப் பருகினாலும் ஓவல்டின் எந்த சமயத்திலும் ருசி மிகுந்த, போஷாக்கு அளிக்கும் பானம். உஷ்ண வேளையில் ஓவல்டின் கலந்த குளிர்பானம் புத்துணர்வளிக்கிறது. இரவில் தூங்குவதற்கு முன் ஓவல்டின் சூடாகக் குடித்தால் ஆழ்ந்த சுகமான நித்திரையைத் தருகிறது; மறுநாள் புதிய ஜீவசக்தியும் ஏற்படுகிறது. ஓவல்டினில் சுத்தமான பசுவின் ஏட்டுப்பால், பழுத்த பார்லி மால்ட், சிறந்த கோக்கோ, இயற்கை உணவுகள், பாஸ்படைட்கள், பி & டி விடாமின்களும் இருக்கின்றன. ஓவல்டினில் இருக்கும் போஷாக்கு மற்றும் விடாமின் சத்துக்கள் இன்றியமையாதவை. ஓவல்டினை விடச் சிறந்தது வேறு கிடையாது. டாக்டர்கள் சிபார்சு செய்கின்றனர். போலிகளைத் தள்ளிவிடுங்கள்.

விநியோகஸ்தர்கள்: ஹஸாம்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லிமிடெட்.



OV.327

Edited, Printed and Published by R. Krishnamurthy at "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road Kilpauk, Madras

REGD. No. M. 4392